# வழிப்போக்கன்



சாவி

சாவி
பப்ளிகேஷன்ஸ்

## உலகளாவிய பொதுக் கள உரிமம் ( CC0 1.0 )

இது சட்ட ஏற்புடைய உரிமத்தின் சுருக்கம் மட்டுமே. முழு உரையை https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode என்ற முகவரியில் காணலாம்.

**பதிப்புரிமை அற்றது**

இந்த ஆக்கத்துடன் தொடர்புடையவர்கள், உலகளாவிய பொதுப் பயன்பாட்டுக்கு என பதிப்புரிமைச் சட்டத்துக்கு உட்பட்டு, தங்கள் அனைத்துப் பதிப்புரிமைகளையும் விடுவித்துள்ளனர்.

நீங்கள் இவ்வாக்கத்தைப் படியெடுக்கலாம்; மேம்படுத்தலாம்; பகிரலாம்; வேறு கலை வடிவமாக மாற்றலாம்; வணிகப் பயன்களும் அடையலாம். இவற்றுக்கு நீங்கள் ஒப்புதல் ஏதும் கோரத் தேவையில்லை.

***

இது, உலகத் தமிழ் விக்கியூடகச் சமூகமும் ( https://ta.wikisource.org ), தமிழ் இணையக் கல்விக் கழகமும் ( http://tamilvu.org ) இணைந்த கூட்டுமுயற்சியில், பதிவேற்றிய நூல்களில் ஒன்று. இக்கூட்டுமுயற்சியைப் பற்றி, https://ta.wikisource.org/s/4kx என்ற முகவரியில் விரிவாகக் காணலாம்.

## Universal (CC0 1.0) Public Domain Dedication

This is a human-readable summary of the legal code found at https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode

**No Copyright**

The person who associated a work with this deed has **dedicated** the work to the public domain by waiving all of his or her rights to the work worldwide under copyright law, including all related and neighboring rights, to the extent allowed by law.

You can copy, modify, distribute and perform the work, even for commercial purposes, all without asking permission.

***

This book is uploaded as part of the collaboration between Global Tamil Wikimedia Community ( https://ta.wikisource.org ) and Tamil Virtual Academy ( http://tamilvu.org ). More details about this collaboration can be found at https://ta.wikisource.org/s/4kx.

# வழிப்போக்கன்

சாவி

சாவி பப்ளிகேஷன்ஸ்
8-A, 7வது பிரதான சாலை, ராஜா அண்ணாமலைபுரம், சென்னை-28

© பதிப்புரிமை ஆசிரியருக்கே
எட்டாவது பதிப்பு - 1997

விலை - ரூபாய் 35.00

அட்டை வண்ணப்படம் கோபுலு

அச்சிட்டோர் : ஸ்ரீ ஸ்கந்தா ஆப்செட் பிரிண்டர்ஸ், சென்னை-600 029.

Wrapper printed by : Madras Classic Prints (P) Ltd., Chennai-34

# முன்னுரை

உலகத்தில் எல்லோரும் வழிப்போக்கர்களே. ஒவ்வொருவரும் ஒவ்வொரு வழியில் போய்க் கொண்டு இருக்கிறார்கள். சிலர் எங்கே போகிறோம் என்கிற இலட்சியம் இல்லாமலே போய்க் கொண்டு இருக்கிறார்கள். சிலர் இருட்டிலே நடக்கிறார்கள்; சிலர் ஒளியிலே நடக்கிறார்கள்; சிலர் ஒளியைத்தேடி நடக்கிறார்கள்; சிலர் கல்லும் முள்ளும் நிறைந்த கரடு முரடான பாதையில் நடக்கிறார்கள்; சிலர் பட்டு விரித்த பாதையில் செல்கிறார்கள். இரண்டுங்கெட்ட இடர்ப்பட்ட நிலையில் இடை வழியிலேயே பயணத்தை முடித்துக் கொள்பவர்களும் பலர்.

அவ்வப்போது வறுமையின் கொடும் பிடியில் இருந்து தன்னை விடுவித்துக்கொண்டு, இடையிடையே குறுக்கிடும் இடையூறுகளையும், தோல்விகளையும் எதிர்த்துப் போராடிய வண்ணம் வாழ்க்கையைப் பஞ்சினும் இலேசாக மதித்துப் புன்னகை பூத்தபடியே முன்னேற்றம் காண வழி தேடும் சுந்தரத்தின் கதைதான் இந்த "வழிப்போக்கன்."

— சாவி

இனி?......

சென்னைக்குப் போய் என்ன செய்வது?

எங்கெங்கேயோ முயன்று பார்த்துவிட்டான். ஒரு வேலையும் கிடைக்கவில்லை அவனுக்கு. போதுமான வருமானம் இன்றிச் சென்னையில் தனிக் குடித்தனம் போடுவது எப்படி?

கிராமத்தில் தங்கியிருந்தபோது அவன் மனைவி கூறிய உருக்கமான வார்த்தைகள் அவன் நினைவுக்கு வந்தன.

'எத்தனை காலத்துக்குத்தான் என்னை என் தாய் வீட்டிலேயே வைத்திருக்கப் போகிறீர்கள்? மற்ற பெண்களைப் போல எப்போதுதான் நானும் குடியும் குடித்தனமுமாக உங்களுடன் வாழப் போகிறேனோ?''

பத்து நாட்களாக மாமனார் வீட்டில் வேளா வேளைக்கு டிபனும் காப்பியும் அவன் அறையைத் தேடி வந்துகொண்டிருந்தன. மாமனார் அவ்வப்போது வந்து, 'குளித்தாயா, சாப்பிட்டாயா?' என்று அன்புடன் விசாரித்துக் கொண்டிருந்தார். அவர் ரொம்ப சாது மனிதர்; உரக்கப் பேசத் தெரியாது அவருக்கு. ஏழெட்டு வருட காலமாக மாப்பிள்ளை நிரந்தரமான வேலை எதுவுமின்றிச் சென்னையில் சுற்றிக் கொண்டிருப்பது பற்றி அவர் சிறிதும் மனக்கிலேசம் அடையவில்லை; அதைப் பற்றிச் சலிப்புடன் ஒரு வார்த்தை பேசியதுமில்லை. ''அவர் புத்திசாலிதான்; அதிருஷ்டம் நிலைக்கவில்லை அவனுக்கு. கத்தரி யோகம்!'' என்று மட்டுமே சொல்லிக் கொண்டிருப்பார்.

சுந்தரத்தின் பெரிய மாமனாரும் அதே கிராமத்தில்தான் இருந்தார். சுந்தரத்துக்கு இதமான வார்த்தைகள் சொல்வதாக எண்ணிக்கொண்டு, ''உனக்குத்தான் நன்றாக டிராயிங் போட வருகிறதே! டிரெயினிங் படித்துவிட்டு ஏதாவது ஒரு ஸ்கூலில் டிராயிங் மாஸ்டராக அமர்ந்து விடுவதுதானே?'' என்று யோசனை கூறினார்.

சுந்தரத்தின் லட்சியம் வெறும் டிராயிங் மாஸ்டர் ஆவதல்ல என்பதை அறியாத அப்பாவி அவர்!

அவன் தினமும் காலை வேளைகளில் ஏரிக்குச் சென்று குளித்துவிட்டு வந்தான்.

அங்கிருந்து திரும்பும்போது அவனைப் பார்த்த குடியானவன் ஒருவன், ''யாரு சாமி, தென்னமரத்து வூட்டு மருமகப் புள்ளெதானே? ஏஞ்சாமி, பெஞ்சாதி குளிகுளிச்சிருக்குதாமே? எப்பத்தான் பட்டணத்தாவுக்கு இட்டுகினு போவப் போறே?'' என்று கபடம் இல்லாமல் கேட்டான்.

இங்கிதம் தெரியாத கிராமத்துப் பாமர மக்களுக்கு எதையும் வெளிப்படையாகப் பேசித்தான் பழக்கம்.

கிராமத்துப் பெண்கள் தென்னை மரத்து வீட்டில் பிறந்திருக்கும் குழந்தையைப் பார்க்க வரும் சாக்கில் சுந்தரத்தின் காதில் கேட்கும்படியாக அசட்டுப் பிசட்டென்று ஏதேதோ சொல்லிவிட்டுப் போனார்கள்.

கோடி வீட்டுப் பொன்னம்மாள் சுந்தரத்தின் மாமியாரிடம் சொல்லிக்கொண்டிருந்தாள்:

''ஏண்டியம்மா! ஒண்ணுச்சு, இரண்டாச்சு. குடும்பம் பெரிசாயிண்டே போறது. அவனுக்கோ கொஞ்சங்கூடப் பொறுப்பைக் காணோம்! இப்படியே எத்தனை நாளைக்குத்தான் நீ உன் பெண்ணை வைத்துக் காப்பாற்றப் போகிறாய்?''

இவ்வார்த்தைகள் சுந்தரத்தின் இதயத்தில் சுருக்கெனத் தைத்தன. கிராம வாசம் அவனுக்குப் பிடித்திருந்தது; சகவாசம்தான் பிடிக்கவில்லை.

மணி நாலு இருக்கும். ''மல்லீ...யப்!'' என்று வழக்கமாகக் கூவிக் கொண்டு வரும் பூக்காரப் பெண்ணின் குரல் கேட்டது.

சுந்தரத்தின் மனைவி வெளியே வந்து நின்றாள். ''ஏம்மா, உங்க வூட்டுக்காரரா வந்திருக்காரு? பட்டணம் போவப் போறியாம்மா?'' என்று அந்தப் பெண் கேட்டாள்.

''போடி, உனக்கெதுக்கு அந்தச் சங்கதியெல்லாம்?... பூவைப் பாரு! விட்டு விட்டு வெலத்தியாகத் தொடுத்திருக்

கிறுயே? முழம் என்னடி விலை?'' என்று கேட்டாள் சுந்தரத்தின் மனைவி.

''ஒரு துட்டம்மா!''

''அநியாயக்காரியடி, நீ! முழம் போடுகிற அழகைப் பார்; இன்னும் கொஞ்சம் விட்டுக் கிள்ளு!''

பூச்சரத்தை வாங்கிப் போய், சுவரிலே வைத்து நகத்தால் கீறி மூன்று துண்டாக்கினாள் அவள். ஒன்றை அம்மன் படத்துக்குச் சூட்டிவிட்டு, ''தேவி, அவருக்கு நல்ல வழியைக் காட்டு, தாயே!'' என்று மனமுருக வேண்டிக் கொண்டாள்;

இன்னொரு துண்டைத் தன் தாயிடம் தந்துவிட்டு, மற்றொன்றைத் தன் தலையில் வைத்துக் கொண்டாள்.

''என் நரைத்த தலைக்குப் பூ ஒன்றுதான் கேடு!... குழந்தை ஓயாமல் அழுகிறது; பசிக்கிறதோ, என்னவோ? வாசலில் போய்ப் பூக்காரியுடன் எத்தனை நேரம் பேச்சு? போய்க் குழந்தையை எடுத்துவிடு, போ!'' என்று அதட்டினாள் தாய்.

குழந்தையை எடுத்து விட்டதும், தாய் கொடுத்த பலகாரத் தட்டுடன் சுந்தரத்தின் முன்னால் போய் நின்றாள் அவள்.

சஞ்சலத்துடன் காணப்பட்ட கணவனைப் பார்த்ததும் அவளுக்கு வேதனையாயிருந்தது. ''ஏன் ஒரு மாதிரியாக இருக்கிறீர்கள்?'' என்று கேட்டாள்.

''ஒன்றுமில்லை; நாளை நாலு மணிக்கு நான் புறப்படுகிறேன்!'' என்றான் சுந்தரம்.

''இன்னும் பத்து நாள் இருந்துவிட்டுப் போகிறேன் என்று சொன்னீர்களே, அதற்குள் என்ன நினைத்துக் கொண்டீர்கள்?''

''நான் வேலையில்லாமல் இருப்பது எல்லோருக்கும் கேவலமாக இருக்கிறது. சீக்கிரமே ஒரு வேலையில் அமர்ந்து உன்னை

அழைத்துக் கொண்டு போய்க் குடித்தனம் போட்டால்தான் என் மனம் நிம்மதி அடையும்.''

''இந்தக் கிராமத்துப் பீடைகளுக்கே வாய் அதிகம்; என் அத்தைக்கும் புத்தி கிடையாது. அவர்கள் ஏதோ சொல்லி விட்டார்கள் என்று நீங்கள் அவசரப்பட்டுப் போகவேண்டாம். உங்களை அனுப்புவதற்கே எனக்குச் சங்கடமாயிருக்கிறது.''

''நான் லெட்டர் போடுகிறேன். இரண்டே மாதத்துக்குள் உன்னை அழைத்துக் கொள்கிறேன். நீ கண்கலங்காதே!''

மறுநாள் இரண்டரை மணிக்குள்ளாகவே புறப்பட்டு விட்டான் சுந்தரம். அவன் மாமனார்கூட எவ்வளவோ சொல்லிப் பார்த்தார். அவன் பிடிவாதமாக புறப்பட்டு விட்டான்.

கணவன் புறப்படும் சமயத்தில் ஒரு காகிதப் பொட்டலத்தைக் கொண்டுவந்து கொடுத்து, ''இந்தாருங்கள், இதை வைத்துக் கொள்ளுங்கள்!'' என்றாள் அவன் மனைவி.

சுந்தரம் அதைப் பிரித்துப் பார்த்தான். அதில் ஐந்து ரூபாய் நோட்டுக்கள் இரண்டும், ஒற்றை ரூபாய் நாணயங்கள் ஐந்தும் இருந்தன—பதினைந்து ரூபாய்.

''இது ஏது உனக்கு?''

''பிறந்த குழந்தையைப் பார்க்க வந்தவர்கள் ஆசீர்வாதமாகக் கொடுத்துவிட்டுப் போனார்கள். குழந்தைக்கு ஒரு வெள்ளி அரைஞாண் செய்து போடலாமென்று இருந்தேன். இந்தச் சமயம் அது உங்களுக்கு உதவியாயிருக்குமே என்று தோன்றியது. ஓட்டலில் சாப்பாட்டு டிக்கெட் புத்தகம் ஒன்று வாங்கிக் கொள்ளுங்கள்'' என்றாள். சுந்தரத்தின் நெஞ்சம் நெகிழ்ந்து விட்டது.

'புறப்படும் சமயத்தில் கண்ணீர் விடக்கூடாது' என்று மனைவிக்கு ஆறுதல் கூறியவன், தன் துக்கத்தை அடக்கிக் கொள்ள முடியாமல் தவித்தான். குழந்தைக்குத் தன் கையால் அரைஞாண் வாங்கிப் போட வேண்டியது போக,

அதற்கு ஆசீர்வாதமாக வந்த பணத்தைத் தான் எடுத்துப் போக வேண்டியிருக்கிறதே!' என்பதை நினைக்கும் போது அவனுக்குச் சங்கடமாயிருந்தது. மனைவி கொடுத்த அந்தப் பொட்டணத்தை அப்படியே மடித்துத் தன் கைப் பைக்குள் வைத்துக் கொண்டான்.

குழந்தையைக் கொண்டு வந்து அவனுக்கு முன்னால் நீட்டினாள் அவன் மனைவி. அந்தப் பச்சை மண்ணின் சிவந்த உதடுகளைத் தன் விரலால் தொட்டுப் பார்த்தான் சுந்தரம்.

''அப்பாவைச் சீக்கிரம் வந்து அழைத்துப் போகச் சொல்லுடா, கண்ணு!'' என்றாள் அந்தப் பேதை. மாமனாரிடமும் மாமியாரிடமும் சொல்லிக்கொண்டு சுந்தரம் சரேலெனக் கிளம்பிவிட்டான்.

**பொ**ழுது சாய்ந்து, மேற்றிசை வானமெங்கும் மஞ்சளும் சுண்ணும்பும் சேர்த்துக் கரைத்து ஆரத்தி கொட்டியது போல் இந்திர ஜாலம் நடந்து கொண்டிருந்தது. எந்தச் சைத்திரிகன் தீட்டிய வண்ண ஜாலமோ அது!

பாலாற்றுக்குள் சரிவாக இறங்கும் பாதைக்கருகே வந்து விட்டான் அவன். ஊர்ப் பெண்கள் தலையில் சும்மாடிட்டுப் பளபளக்கும் நீர்க்குடங்களில் ஊற்று நீர் சுமந்து சென்று கொண்டு இருந்தனர். தொலைவில் சிறு பிள்ளைகள் எக்களிப்புடன் கும்மாளமிட்டு விளையாடிக் கொண்டு இருந்தனர். ஆவினங்கள் கிண்கிணி ஓசை எழுப்பியவண்ணம் வீடு திரும்பிக்கொண்டு இருந்தன.

ஆற்று மணலில் தோண்டப் பெற்ற பளிங்கு போன்ற ஊற்றுச் சுழல்தான் நீண்டகாலமாகச் சுற்றுப்புற மக்களுக்குக் குடிதண்ணீர் வழங்கி வருகிறது.

அதன் கரையில் ஒரு பிள்ளையார் கோயில். அந்தக் கோயிலின் முன்னால் ஒரு விளாமரம். சுந்தரம், விநாயகர்

கோயிலை வலமாக வந்தான். அந்த விளாமரத்தின் கீழே இருந்த அகலமான பாறைமீது போய் அமர்ந்து யோசிக்கலாஞன்.

'டொக்'கென விழுந்த விளாம்பழம் ஒன்று அவன் சிந்தனையைக் கலைத்தது. அதை எடுத்துப் பார்த்தான். நன்ருகக் கனிந்து உள்ளுக்குள்ளேயே பற்றற்றுப் பக்குவப்பட்டிருந்தது அப்பழம்.

அந்த விளாம்பழத்தைக் கண்டதுமே சுந்தரத்துக்கு அவளுடைய நினைவு தோன்றிவிட்டது. தன் இளம் பிராயத்தில், இதே பிள்ளையார் கோயில் எதிரில், இதே விளாமரத்தடியில் அவளுடன் சிரித்து விளையாடி மகிழ்ந்த நாட்களெல்லாம் அவன் நினைவில் பசுமையாகத் தோன்றத் தொடங்கின.

"டேய், சுந்தர்! எனக்கு ஒரு பழம் பறித்துப் போடுடா!" சகுந்தலா கெஞ்சினுள்.

"போட முடியாது, போடி!"—இது விளாமரத்தின்மீது உட்கார்ந்திருந்த சுந்தரின் மறுப்பு.

"இரு, இரு; என் தாத்தாவிடம் போய்ச் சொல்கிறேன், சுந்தர் ஆற்றங்கரை விளாமரத்தில் ஏறி உட்கார்ந்திருக்கிருன் என்று!"

சுந்தரின் வயிற்றில் 'பகீர்' என்றது. பாடம் படிக்காமல் அவன் ஆற்றங்கரைக்கு வந்திருக்கும் விஷயம் சகுந்தலாவின் தாத்தாவுக்குத் தெரிந்தால்?......

"ஐயோ வேண்டாமடி! உனக்கு வேண்டிய பழம் போடுகிறேன், இந்தா!"

பழம் நிறைந்த கிளையொன்றைப் பலமாக ஓர் உலுக்கு உலுக்கிஞன் அவன். அந்த உலுக்கலில் 'டொக், டொக்' கென்று இரண்டு கீழே விழுந்தன.

அவற்றைத் தொடர்ந்து சுந்தரம் குதித்தான்.

''பிள்ளையாருக்கு விளாம்பழம் என்றால் பிரியமாம். இதில் ஒன்று பிள்ளையாருக்கு; இன்னொன்று எனக்கு!' என்றாள் சகுந்தலா.

''எனக்கு?''

''உனக்கு வீட்டிலே தாத்தா பிரம்பம் பழம் கொடுப்பார்! அவருக்கு டிமிக்கி கொடுத்துவிட்டு ஆற்றங்கரையிலா ஆடிக் கொண்டிருக்கிறாய்?''

''தாத்தா என்னைத் தேடினாரா?''

''சுந்தர் எங்கே தொலைந்தான்? பள்ளிக்கூடம் விட்டு அரைமணி நேரம் ஆச்சே?'' என்று கேட்டார்.

''நீ என்ன சொன்னாய்?''

''ஆற்றங்கரையிலே ஆடிக் கொண்டிருப்பான்னு சொன்னேன்!''

''நிஜம்மா?''

சகுந்தலா சிரித்துவிட்டாள். ''இல்லேடா, இல்லே; டிரில் கிளாசிலே இருக்கான்னு சொன்னேன்!'' என்றாள்.

சுந்தர் அவளை நன்றியோடு பார்த்தான். சகுந்தலா விளாம்பழத்தைத் தின்று தீர்த்தாள். பிறகு கையில் குடத்துடன் ஊற்று நீரை நோக்கி நடந்தாள் சகுந்தலா; அவளுக்குப் பின்னால் சுந்தரும் நடந்தான்.

பாறையின் மீது உட்கார்ந்திருந்த சுந்தரம் அந்தப் பழைய இன்ப நினைவுகளில் ஊன்றித் தன்னை மறந்தவனாய், சகுந்தலாவின் பின்னால் செல்வதாக எண்ணிக்கொண்டு நடந்தான். அந்த இன்ப மயக்கத்தில் தன் கையோடு கொண்டு வந்த பையைப் பாறைக்குப் பக்கத்திலேயே மறந்து வைத்துவிட்டுப் போய்க்கொண்டிருந்தான்.

# 2

ஆற்காட்டிலிருந்து ஏழு மைல் தூரத்தில் உள்ளது மாங்குடி கிராமம். சுந்தரம் பிறந்தது அந்தக் கிராமத்தில் தான்.

சுந்தரம் வீட்டில் ஒரே மகன்; செல்லப்பிள்ளை. எனவே "அவன் மேலே படிக்க வேண்டிய அவசியமில்லை. ஊரோடு இருந்து நிலங்களைப் பார்த்துக் கொண்டாலே போதும்; உட்கார்ந்து சாப்பிடலாம்" என்று கூறிவிட்டார் அவன் தந்தை. நாலாம் வகுப்போடு படிப்பை முடித்துக் கொண்ட சுந்தரத்தின் புத்தி குரங்காட்டம் ஆடியது. அதை அவன் எத்தனை நாட்களுக்கு அடக்கி மடக்கி வைத்திருக்க முடியும்?

சித்திரக் கலையில் அவனுக்குக் கொள்ளை ஆர்வம் இருந்தது. அவனிடம் மறைந்துள்ள கலைத் திறமையை, ஆர்வத்தைத் தூண்டிவிட யாருமே முன்வரவில்லை. ஆகவே, தனக்குத் தானே முயற்சி கொண்டான் அவன். பாடப் புத்தகங்களிலும் காலண்டர்களிலும் காணப்பட்ட படங்களைப் பார்த்துப் பார்த்து அவற்றைப் போலவே எழுதிப் பழகினான்.

அப்போது கோடை விடுமுறை. வெளியூருக்குப் படிக்கச் சென்றிருந்த மாங்குடி கிராமத்துப் பிள்ளைகள் எல்லோரும் விடுமுறையைக் கழிக்க ஊருக்கு வந்திருந்தார்கள். அந்தப் பிள்ளைகளைக் காணும் போதெல்லாம் சுந்தரத்துக்குத் தானும் அவர்களைப் போல் படித்து முன்னுக்கு வரவில்லையே என்ற ஏக்கமும் வெட்கமும் ஏற்படும்.

"ஊர்ப் பிள்ளைகளெல்லோரும் வெளியூருக்குப் போய்ப் படித்து விட்டு வருவதைப் பார்க்கும்போது எனக்கு வெட்கமாயிருக்கிறதம்மா! அவர்களைப் போல் நானும் படிக்கப் போகிறேன்." உறுதியோடு, உணர்ச்சியோடு கூறினான்— துணிவுடன் தவம் செய்யக் கிளம்பிவிட்ட துருவனைப் போல!

"என்னடி அங்கே, அம்மாவும் பிள்ளையும் என்ன பேசிக் கொண்டிருக்கிறீர்கள்?" என்று கேட்டுக்கொண்டே வந்தார் கங்காதரய்யர் அச்சமயத்தில்.

"மேலே படிக்க வேண்டுமாம், அவனுக்கு. அவனை அழைத்துக் கொண்டு போய் ஆற்காட்டுப் பள்ளிக்கூடத்தில் சேர்த்து விடுங்களேன்!" என்ருள் தாய்.

"கழுதைக்குப் படிப்பில் அவ்வளவு அக்கறை வந்து விட்டதாமா? ஆற்காட்டில் போய்க் கரிக்கோலம் போடுவான் அவன்!" என்ருர் அவர்.

"படிக்கிறேன் என்று அவனுக விரும்பிக் கேட்கும்போது படிக்க வைத்துத்தான் பாருங்களேன்?"

"ஆற்காட்டில் இவனை யார் வைத்துப் படிப்புச் சொல்லிக் கொடுப்பார்கள்?"

"ஏன், நெல் மண்டி நடேச சர்மாவிடம்தான் கொண்டு போய் விடவேண்டும். ஆயிரம் பேருக்கு ஆயிரம் உதவி செய்கிருர் அவர். உங்களுக்குத்தாளு மாட்டேன் எனப் போகிருர்?"

"ஓகோ! எல்லாம் திட்டம் போட்டு வைத்திருக்கிருயா? சர்மாவேகூட இதைப்பற்றி என்னிடம் ஒரு முறை கேட்டார். நம் குடும்பத்தில் உண்மையான அன்பும் பற்றுதலும்கொண்டவர் அவர். நம் பெண் கலியாணத்தின்போது அவரிடம் கடன் வாங்கச் சென்றபோது அவர் என்ன சொன்ஞர், தெரியுமா? 'அவ்வளவு பணம் எதற்கு? இன்றைக்கு வாணவேடிக்கைப் பார்க்க வருகிறவர்களெல்லாம் நாளைக்கு நீ சறுக்கும் போதும் வேடிக்கை பார்ப்பவர்கள்தான். பணத்தை விரயமாக்காதே!' என்று புத்திமதி கூறிஞர். நான்தான் அவருடைய பேச்சைக் கேட்காமல் ஐயாயிரம் கடன் வாங்கிக் கலியாணத்தை நடத்தினேன். ஐந்து வருஷத்துக்கெல்லாம் அதற்கு வட்டி மட்டும் இரண்டாயிரம் ஆகிவிட்டது. நிலத்தை விற்று வட்டியும் முதலுமாக ஏழாயிரம் எடுத்துக்கொண்டு போனேன். சர்மா அப்போது என்ன சொன்ஞர், தெரியுமா? 'அன்றே சொன்

னேன்; நீ கேட்கவில்லே' என்று கூறி, வட்டியைத் தள்ளிவிட்டு அசலே மட்டுமே பெற்றுக்கொண்டார்!'' என்ருர் அவர் நெஞ்சம் நெகிழ.

''அவரிடம் கொண்டுபோய் விட்டால் சுந்தரம் எப்படியும் முன்னுக்கு வந்துவிடுவான்!'' என்ருள் அவர் மனேவி.

''என்னிடம் அவர் கொண்டுள்ள நட்புக்கும், மதிப்புக்கும் இவனுல் பங்கம் வந்துவிடக் கூடாதே என்றுதான் யோசிக் கிறேன்!'' என்ருர் அவர்.

''அவனே அவர் நல்வழியிலேயே கொண்டு செல்வார். நீங்கள் ஒன்றுக்கும் கவலேப்படாதீர்கள். அதோ கவுளி சொல் கிறது. நாளேக்கே சுந்தரத்தை அழைத்துக்கொண்டு புறப் படுங்கள்!'' என்று அந்த அம்மாள் அவரைத் தைரியப்படுத் திஞள்.

''சரி; உங்கள் இருவர் ஆசையையும் கெடுப்பானேன்? நாளேக்கே புறப்படுகிறேன்!'' என்ருர் அவர் தீர்மானத்துடன்.

மறு நாள் காலே.

புதிய இடமாகையால், ஏதோ கூண்டில் பிடித்துப் போட்ட மாதிரி இருந்தது.

சுந்தரம் மெதுவாகப் படுக்கையை விட்டு எழுந்து தோட்டத்துப் பக்கம் சென்ருன். குளிக்கும் அறை கரிப்புகை படிந்து ஒரே இருட்டாயிருந்தது. அந்த அறைக்குள் நுழைந்த சுந்தரம் பாசித் தரையில் காலே வைத்துவிடவே, சறுக்கிக் கீழே விழுந்துவிட்டான். யாரோ குபீரெனச் சிரிக்கும் குரல் கேட்டு வெட்கத்துடன் திரும்பிப் பார்த்தான். அங்கேதான் அந்தப் பெண் நின்றுகொண்டிருந்தாள்—அவள்தான் சகுந்தலா!

பில்ட்டரிலிருந்த வடி கட்டிய காப்பித் தூளே எடுத்து ரோஜாச் செடித் தொட்டியில் போட்டுக் கொண்டிருந்தாள் அவள். சுந்தரத்தையும், அவன் குடுமியையும், பித்தான்

போடாத நலுங்கிய சட்டையையும் பார்த்தபோது அவளுக்குச் சிரிப்புத் தாங்கவில்லை!

"பாவம், விழுந்துட்டியா? அடி பட்டுதா?" சகுந்தலா கேட்டாள்.

"இல்லே!" என்று கூறிய சுந்தரம் சட்டையைச் சரி செய்து கொண்டே வேதனையுடன் எழுந்து நின்றான்.

"பொத்தான் எங்கே? கீழே விழுந்துட்டுதா?"

"இருந்தாத்தானே விழும்? என் சட்டைக்குப் பொத் தானே கிடையாது!"

"இந்தா, இந்தப் பின்னைப் போட்டுக்கோ!" என்று கூறித் தன் கை வளையலில் மாட்டியிருந்த பின் ஒன்றைக் கழற்றி அவனிடம் கொடுத்தாள் அவள். கொடுத்துவிட்டு, "நீ யாரு?" என்று கேட்டாள்.

"நான் சுந்தரம்; படிக்க வந்திருக்கேன். நீ...?"

"நான்தான் ஆர். சகுந்தலா. பஸ்ட் பாரம் ஏ செக்ஷன்; போர்டு ஹைஸ்கூல், ஆற்காடு. எங்கப்பா டில்லியிலே இருக் கார்!" என்றாள் பெருமிதத்துடன்.

"அம்மா?"

"அம்மா இல்லே; செத்துப் போயிட்டா!" உதட்டைக் கோணலாகச் சரித்துக்கொண்டாள் சகுந்தலா.

சுந்தரம் பல் துலக்கிக்கொண்டு உள்ளே வருவதற் குள்ளாகவே சகுந்தலா பாட்டியிடமிருந்து அவனுக்குத் தயாராகக் காப்பி வாங்கி வைத்திருந்தாள். ஊரில் பழையது சாப்பிட்டுப் பழகிப்போன சுந்தரத்துக்கு, சகுந்தலா கொடுத்த காப்பி தேவாமிருதமாயிருந்தது!

"மாடிக்கு வா, என் கொலுப் பொம்மைகளையெல்லாம் காட்டறேன் உனக்கு!" என்று சுந்தரத்தின் கையைப் பிடித்து மாடிக்கு அழைத்துச் சென்றாள் அப்பெண். அவளுக்கு என்ன வோ சுந்தரத்தை ரொம்பப் பிடித்துவிட்டது. கண்ணாடி

பீரோ ஒன்றை திறந்து, அதிலிருந்த பொம்மைகளையெல்லாம் ஒவ்வொன்றாக எடுத்துக் காட்டினாள். இன்னொரு பீரோ நிறையப் புத்தகங்கள் நெட்டுக் குத்தாக அடுக்கி வைக்கப் பட்டிருந்தன. அவற்றின் முதுகுப்புறத்தில் பொறிக்கப் பட்டிருந்த பொன் எழுத்துக்கள் கண்ணைப் பறித்தன.

''இதெல்லாம் என் தாத்தாவின் புத்தகங்கள்'' என்றாள் சகுந்தலா பெருமையோடு.

கீழே, பூஜை அறையிலிருந்து மணி ஓசை கேட்டுக் கொண்டிருந்தது. சகுந்தலா ஒரு சின்ன அட்டைப் பெட்டி யைக் கொண்டு வந்து, ''இதோ பார்த்தாயா?'' என்றாள் கட்டுக்கடங்காத பூரிப்புடன். அதில் உடைந்த வளையல் துண்டுகள், கனமான அரையணாக் காசு ஒன்று, சாக்லேட்டி லிருந்து உரித்த வெள்ளி நிற ஜிகினாத் தகடு, ஏழெட்டுச் சோழிகள், சிவப்பு உல்லன் நூல், மயில் இறகு, ஒரு முழுப் பென்சில்—அவ்வளவும் இருந்தன.

''இந்தப் பென்சில் உனக்கு வேணுமா? இந்தா எடுத்துக் கோ, தாத்தா எனக்கு நிறையப் பென்சில் வாங்கிக் கொடுப் பாரே! வரயா, ஊஞ்சல்லே விளையாடலாம்?'' என்று உற் சாகத்துடன் ஊஞ்சலுக்குத் தாவினாள் சகுந்தலா.

'கிரீங்...கி...ர்...ரீ...ங்' என்று ஊஞ்சல் இரண்டு சுருதி யில், இரண்டு கதியில் இயங்கிக் கொண்டிருந்தது. அந்த ஓசை கேட்ட சர்மா கீழே இருந்தபடியே, ''சகுந்தலா! அங்கே என்ன சத்தம்?'' என்று குரல் கொடுத்தார். அவருடைய குரலில் ஒரு கனமும் கண்டிப்பும் இருந்தது.

''ஒண்ணுமில்லே, தாத்தா! நானும் சுந்தரமும் ஊஞ்சல்லே விளையாடறோம்!'' என்றாள் சகுந்தலா.

''சுந்தரத்தை இங்கே வரச் சொல்லு!''

சுந்தரம் பயந்தபடி அவருக்கு எதிரே போய் நின்றான்.

''ஏண்டா, காப்பி சாப்பிட்டாயா?''

''சாப்பிட்டேன்!''

''தினமும் காலையில் ஆறு மணிக்குள் எழுந்து விட வேண்டும்; தெரிஞ்சுதா? இது மாங்குடி இல்லே; ஆற்காடு. ராத்திரியில் பத்து மணி வரை படிக்க வேண்டும். ஹெட் மாஸ்டரிடம் சொல்லி உன்னை பஸ்ட் பாரத்தில் சேர்த்து விடுகிறேன். காலையில் எழுந்ததும் குளித்துவிட்டு, நெற்றிக்கு இட்டுக்கொள்ள வேண்டும். பிறகு, ஒன்பது மணிவரை படிப்பு; அப்புறம் சாப்பிட்டு விட்டுப் பள்ளிக்கூடம். என்ன?

சுந்தரம் பயந்தபடியே தலையை ஆட்டினான். அன்று மாலை சர்மா மண்டியிலிருந்து திரும்பி வந்தபோது ஞாபக மாக சுந்தரத்துக்கு நாலு சட்டைகளும் நிஜார்களும் வாங்கி வந்து, ''இந்தா இவற்றைப் போட்டுக் கொள்; துணிகளை அழுக்காக்காமல் வைத்துக்கொள்!'' என்றார்.

ஆறு மாதங்களுக்குள்ளாகவே சுந்தரத்துக்கும் சகுந்தலா வுக்கும் இடையே நட்பு வளர்ந்துவிட்டது. சர்மா அதைக் கவ னிக்காமல் இல்லை. இருவரும் ஒரே வகுப்பில் ஒரே செக்ஷனில் படித்துக்கொண்டிருந்தார்கள். ஆயினும் படிப்பிலே சுந்தரத் தினால் சகுந்தலாவோடு போட்டி போட முடியவில்லை.

சித்திரம் வரைவதில் மட்டும் அவனுக்கு முன்னைக் காட் டிலும் அப்போது நல்ல தேர்ச்சி ஏற்பட்டிருந்தது. அதாவது, முன்னெல்லாம் அவன் ஒரு யானையின் படத்தைப் பார்த்து எழுதினால் அது ஒட்டகம் மாதிரி இருக்கும். இப்போது அப்படி இல்லை; பார்க்காமல் எழுதினாலே ஒட்டகம் மாதிரி இருக்கிறது!

சர்மா வீட்டிலே இல்லாத நேரங்களில் சகுந்தலாவுக்கும் சுந்தரத்துக்கும் ஒரே கும்மாளம்தான்! பாட்டிதான் செவிடாயிற்றே? இவர்கள் அடிக்கும் ''லூட்டி'' அவர்கள் காதிலே விழாது.

# 3

செடியில் இருக்கும் மொட்டுகள் மலரும் வரை வண்டு அவற்றை அண்டி வட்டமிடவும், ஊதிக் களிக்கவும் அனுமதிக் கப்படுகின்றன. மலர்ந்துவிட்ட மறுகணமே அந்தப் பூக்கள் கடவுளின் வழிபாட்டுக்குரிய புனித சின்னங்களாகி செடியி லிருந்து பறிக்கப்பட்டு விடுகின்றன. அப்புறம் அம் மலர்களை வண்டுகள் அண்டவோ, தீண்டவோ முடிவதில்லை.

பூரண மலர்ச்சியுடன், புதுமைப் பொலிவுடன், மோகன வசீகரத்துடன் பூஜை அறையில் காத்திருக்கும் புஷ்பமென விளங்கினாள் சகுந்தலா.

அவள் இப்போது சுந்தரத்தின் நெருக்கத்துக்கு எட்டாத ஒரு புனிதப் பொருள். சுந்தரம் அவளை அண்ட விரும்பிய போதெல்லாம் அவள் எட்டாத பொருளாகத் தொடுவானம் போல் தொலைவில் நகர்ந்து போய்க் கொண்டிருந்தாள். அதற்குக் காரணம், அவ்விருவருக்கும் இடையே சர்மா ஒரு பெரும் வேலியைப் போட்டுத் தடுத்து வைத்திருந்ததுதான். கட்டுப்பாடு என்னும் அவ்வேலியைக் கடக்கவோ, கலைக்கவோ முடியவில்லை அவர்களால்.

இளமைத் தொடக்கத்தில் நின்று தயங்கிக் கொண்டி ருந்த சுந்தரத்தின் உள்ளத்தை ஏதோ ஒரு கவர்ச்சி மயக்கி அழைத்தது.

மலர்ந்த தாமரையெனக் குலுங்கி நின்ற சகுந்தலாவின் வனப்பும் வசீகரமும் சுந்தரத்தைக் கவர்ந்திழுக்கும் மயக்கத் தின் மாயமாயிருக்குமோ?

சுந்தரம் எப்படியோ ஐந்தாவது பாரத்தை எட்டிப் பிடித்துவிட்டான். சகுந்தலா மட்டும் மூன்றாவது பாரத் தோடு படிப்பை முடித்துக்கொண்டு விட்டாள். 'போதும் படிப்பு' என்று சர்மாதான் அவள் படிப்புக்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டார்.

சுந்தரம் எந்நேரமும் மாடியிலேயே புத்தகமும் கையுமாகக் கிடந்தான். காரியமின்றி அவன் கீழே இறங்கி வரக் கூடாது; சகுந்தலாவும் மாடிப் பக்கம் செல்லக் கூடாது என்று சர்மாவின் உத்தரவு. உத்தரவுகூட அல்ல; அன்புக் கட்டளை!

விளையாட்டாகவே நான்கு வருடங்கள் ஓடிவிட்டன. இப்போதெல்லாம் சகுந்தலாவுக்குச் சுந்தரைக் கண்ணால் காண்பதே அரிதாகிவிட்டது. குளிக்கவும் சாப்பிடவும், பள்ளிக்கூடம் போகவும் அவன் மாடியிலிருந்து கீழே இறங்கி வரும் சமயங்களில் அவள் எங்கேயோ ஒரு மூலையில் பதுங்கி விட்டிருப்பாள். எங்கேயாவது ஒளிந்து நின்றபடியே மாடிப் படிகளில் இறங்கிவரும் சுந்தரத்தின் அழகிய முகத்தையும், மிடுக்கான நடையையும், நன்கு வளர்ந்துவிட்ட கம்பீரமான தோற்றத்தையும் கண்கொட்டாமல் பார்த்துக் கொண்டிருப்பாள்.

சில நேரங்களில் அவர்கள் இருவரும் எதிர்பாராத விதமாகச் சந்தித்துக் கொள்வதும் உண்டு. அத்தகைய சந்தர்ப்பங்களில் சகுந்தலா கண்ணிமைகள் படபடக்க, புன் முறுவல் பூத்தபடியே அந்த இடத்தினின்றும் நழுவி மின்னலென மறைந்து விடுவாள்.

கூடத்து கடிகாரத்தில் மணி எட்டு அடித்தது. சர்மாவின் சகோதரி காவேரிப் பாட்டி மணைக்கட்டையைத் தலைக்கு அணையாக வைத்துக் கொண்டு தூங்க ஆரம்பித்துவிட்டாள். மாடி அறையில் மேஜை முன் உட்கார்ந்து சுவாரசியமாக சித்திரம் வரைந்து கொண்டிருந்தான் சுந்தரம். அழகிய தாமரை மலர் ஒன்று இதழ் விரித்துச் சிரிக்கிறது; வண்டு ஒன்று அதை நாடி வருகிறது. இதுதான் சித்திரம். 'சுந்தரம் கை தேர்ந்த சித்திரக்காரனாகிவிட்டான்' என்பதை அம் மலர் வண்டினிடம் சொல்லிக் கொண்டிருந்தது!

திடீரெனப் பின் பக்கத்திலிருந்து முல்லை மொட்டின் நறுமணம் கமழ்ந்து வருவதை உணர்ந்த சுந்தரம், 'சகுந்தலா வருகிறாள்!' என்பதைக் கண்டு கொண்டுவிட்டான்.

தான் எழுதிக்கொண்டிருந்த சித்திரத்தைச் சட்டென எடுத்து மறைத்துவிட்டுப் படிப்பதில் தீவிரமாக ஈடுபட்டான். முல்லையின் மணம் வெகு அருகில் நெருங்கிவிட்ட போதுங்கூட அவன் தலை நிமிராமல் அத்தாழம்பூ மேனியாளின் தந்தக் கைகளை ஒருமுறை கீழ்க் கண்களாலேயே கவனித்துக் கொண்டான். பூனைபோல் நடந்துவந்த சகுந்தலா தன் தலையிலிருந்த முல்லை அரும்புகளில் ஒன்றை எடுத்துச் சுந்தரத்தின் பின் கழுத்தில் சீண்டி விளையாடினாள்.

''சட், பூச்சி!'' என்று திரும்பிப் பாராமலேயே பின் கழுத்தைத் தட்டினான் அவன்.

''பூச்சி இல்லே, வண்டு!'' என்றாள் சகுந்தலா.

திரும்பிப் பார்த்த சுந்தரம். ''முல்லை மொட்டு!'' என்றான்.

''இல்லே; தாமரைப் பூ!'' என்றாள் அவள்.

''நான் எழுதிக்கொண்டிருந்த படத்தைப் பார்த்துவிட்டாயா? நீ ஏன் இங்கே வந்தே?''

''வரக்கூடாதா? அப்படித்தான் வருவேன்! நீ சரியாகப் படிக்கிறாயா? என்று பார்க்கத்தான் வந்தேன்; படமா வரைந்து கொண்டிருக்கிறாய்? இரு, இரு; தாத்தாகிட்டே சொல்றேன்!''

சுந்தரம் அவளுடைய கைகளைப் பிடித்துக்கொண்டான்.

''என்னவாம்'' என்றாள் அவள்.

''தாத்தாவிடம் சொல்லாம இருந்தால்......''

''சொல்லாம இருந்தால்......?''

''உனக்கொன்னு கொடுப்பேன்!''

''என்ன கொடுப்பே......?''

''உன் எம்ப்ராய்டரியிலே படம்போட்டுக் கொடுப்பேன்!''

''படமா?...ம்...என்ன படம்?''

"இதோ பாரு!"

'ரொம்ப அழகாயிருக்கு! இந்தத் தாமரை மலருக்கு என்ன வர்ணம் கொடுப்பாய்? தாமரைன்னு அசலாயிருக்கணும்!"

"எனக்கு ஒரு ஐடியா தோண்றது!"

"என்னது?"

"நீ அப்படியே கொஞ்ச நேரம் இங்கே நில்லு; பூவிதழ் போன்ற உன் உதட்டிலிருந்து அதை நான் எடுத்துக்கிறேன்!"

"போ...டா!"

சட்டென நாக்கைக் கடித்துக் கொண்டாள் சகுந்தலா. மறுகணமே அந்த 'டா'வை நீக்கிவிட்டுப் "போ, சுந்தர்!" என்று கொஞ்சும் மொழியில் கூறினுள்.

பின்னர், "வண்டுக்குக் கறுப்பு வர்ணம் வேண்டுமே, அதற்கு என்ன செய்வே?" என்று கேட்டாள்.

"உன் கருங் கூந்தலிலிருந்து எடுத்துக்கொள்வேன்!" என்று அவள் சடையைப் பற்றி இழுத்தான் அவன்.

"சுந்தர், என் பின்னலை விடு!"

"விடமாட்டேன்!"

"விடப்போறியா, தாத்தாவைக் கூப்பிடட்டுமா?"

"கூப்பிடு; தாத்தாதான் கீழே இல்லையே?"

"அது உனக்கு எப்படித் தெரியும்?"

"அவர் இருந்தால் நீ வந்திருப்பியா?"

"ஓகோ! அந்தத் தைரியம்தானு? அவர் கதை கேட்கப் போயிருக்கார்னு தெரியுமா உனக்கு?"

"அது சரி; நீ இப்போ ஏன் இங்கே வந்தே?"

"எதுக்கோ வந்தேன்!"

"சொல்லப் போறியா இல்லையா? இல்லே, இந்த விளக்கை அணைச்சுடட்டுமா?" அவனைப் பயமுறுத்திக்

கொண்டே சுந்தர் விளக்கை அணைக்க எழுந்தான். சகுந்தலா வுக்கு இருட்டென்றால் ஒரே பயம் என்பது அவனுக்குத் தெரியும்.

"ஐயோ சுந்தர் வேண்டாம், வேண்டாம். எனக்குப் பயமாயிருக்கு!" என்று பதறினாள் அவள்.

"எதுக்கு வந்தேன்னு சொல்லு?"

"உன்னைப் பார்க்கத்தான்!"

"அப்படி வா, வழிக்கு; ஓர் ஆண்பிள்ளை தனியாயிருக்கிற இடத்துக்கு ஒரு பெண் பிள்ளை வரலாமா!"

"வந்தால் என்னவாம்?"

"வரக் கூடாது!"

"சரி, அப்படின்னா நான் போறேன்" சகுந்தலா திரும்பி னாள்.

"நீ போகக்கூடாது."

"நீதானே வரக்கூடாது என்றாய்?"

"ஆமாம்; இப்போ போகக்கூடாதுன்னு சொல்றேன்!" சுந்தர் அவள் கரங்களைப் பிடித்துக்கொண்டு அவளுடைய முகத்தையே பார்த்தான். "இந்தப் பின்னலும் நேர் வகிடும் உனக்கு எவ்வளவு அழகாயிருக்கு, தெரியுமா?" என்றான்.

"ம்ம்ம்......உனக்குக்கூடத்தான் இந்தக் கிராப்பும் கோணல் வகிடும் ரொம்ப நன்றாயிருக்கு!" என்றாள் சகுந்தலா.

"அதுக்கு ஏன் பெருமூச்சு விடறே?"

"உனக்குத் தலைவாரிப் பின்ன முடியலையேன்னுதான்!"

"அப்படின்னா மறுபடியும் குடுமியே வைத்துக் கொள்ளட் டுமா?"

"ஐயோ, வேண்டாம்! உன் கிராப்புத் தலையை வேண்டு மானால் வாரி விடட்டுமா இப்போ?"

சுந்தரம் அவள் முகத்துக்கு எதிரே தன் முகத்தைக் கொண்டுபோய் காட்டினான். சகுந்தலா அவன் தலையை அழகாக வாரி விட்டாள். அவன் முன் நெற்றி முடியில் கொஞ்சம் எடுத்து, 'ஸ்பிரிங்' போல் சுருட்டி, நெற்றியிலே தவழவிட்டாள்!

"வாசலில் யாரோ கதவைத் தட்டறாப்போல இருக்கு...!"

"ஐயோ, தாத்தா வந்துவிட்டார்!" என்று அலறிக் கொண்டே கீழே ஓடினாள், சகுந்தலா.

# 4

சகுந்தலா மாடியிலிருந்து கீழே இறங்கிச் சென்றதும், அவள் கூந்தலில் இருந்த முல்லையின் நறுமணம் வெகு நேரம் வரை சுந்தரையே சுற்றிக் கமழ்ந்து, அவன் உள்ளத்தில் ஒரு விதக் கிளர்ச்சியையும் ஏக்கத்தையும் உண்டாக்கி விட்டது. தன்னை வாட்டிக்கொண்டிருந்த அந்த உணர்ச்சியையும் ஏக்கத்தையும் பெருமூச்சுக்களாக வெளிப்படுத்திக் கொண்டிருந்தான். பொழுது விடிந்ததும் படுக்கையை விட்டு எழுந்தபோது, மேஜைக்கு அருகில் விழுந்து கிடந்த அந்த முல்லைமொட்டு வாடி வதங்கியிருப்பதை அவன் கண்டான். காலையில் அரும்பும் காதல் மொட்டு, மாலையில் மலர்ந்து, இரவெல்லாம் மணம் வீசிப் பொழுது விடியுமுன் வாடி வதங்கியல்லவா போய்விடுகிறது!

அந்த மலரைத் தூக்கித் தூர எறிவதற்கு மனமில்லாமல் எடுத்து மேஜைக்குள் பத்திரப்படுத்திவிட்டு அவன் கீழே இறங்கிச் சென்றான். தோட்டத்தில் எறும்புகளுக்கு அரிசி போட்டுக் கொண்டிருந்தார் சர்மா. அவரைக் காணவே அவனுக்கு அச்சமாக இருந்தது. தானும் சகுந்தலாவும் முதல் நாள் இரவு மாடியில் கூடிப் பேசிக் கொண்டிருந்ததை அவர் அறிந்திருக்கமாட்டார் என்றே

அவன் எண்ணியிருந்தான். ஆனுல் அவரோ எல்லாவற்றையும் கவனித்துவிட்டு, ஏதும் அறியாதவர் போல் இருந்தார்.

காலட்சேபத்திலிருந்து திரும்பிய அவர், வந்ததும் கதவைத் தட்டவில்லை. வராந்தாவிலுள்ள படிகளின் வழியாக மாடிக்கு ஏறிச் சென்ருர். அங்கே சுந்தரும் சகுந்தலாவும் சிரித்துப் பேசி விளையாடிக் கொண்டிருந்ததைக் கண்டுவிட்டுச் சந்தடி செய்யாமல் கீழே இறங்கிச் சென்று கதவைத் தட்டினுர். அதைக் கேட்டுத்தான் சகுந்தலா வந்து கதவைத் திறந்தாள்!

சகுந்தலாவின் திருமணத்தை சீக்கிரமே முடித்துவிட வேண்டுமென்ற கவலை அன்றே தோன்றிவிட்டது அவருக்கு. ஆயினும், அதற்கு முன் அவள் கலியாண விஷயமாக டில்லியிலுள்ள தம் மாப்பிள்ளையின் கருத்து என்னவென்பதை அறிந்துகொள்ள வேண்டும் என்று அவர் எண்ணினுர். அப்புறம் சுந்தரின் ஜாதகத்தையும் வாங்கிப் பார்த்தாக வேண்டும். ஒரு வேளை இது சரியாக இருந்தால் சுந்தரைச் சுவீகாரம் எடுத்துக் கொள்ளக் கங்காதரய்யரின் சம்மதத்தைப் பெற்ருக வேண்டும். சுந்தரம் கங்காதரய்யரின் ஒரே மகன். அவரிடம் சுவீகார விஷயமாக எப்படிப் பேசுவது? இத்தகைய ஒரு கெட்ட எண்ணத்தை மனதில் வைத்துக் கொண்டே சுந்தரைத் தாம் ஆற்காட்டில் படிக்க வைத்துக் கொண்டிருப்பதாக அல்லவா அவர்கள் நினைப்பார்கள்?

சகுந்தலாவோ சுந்தரை மனமார நேசிக்கிருள். அவள் விரும்பும் ஒரு பொருளை அவளுக்கே உரியதாக்கி மகிழ வேண்டும் என்பதுதான் சர்மாவின் எண்ணமும்.

சகுந்தலா, சர்மாவின் பெண் வயிற்றுப் பேத்தி. சிறு வயதிலேயே தாயாரை இழந்துவிட்ட அப்பேதை இவ்வளவு காலமும் சர்மாவின் ஆதரவிலேயே வளர்ந்து வந்தாள். அவளைக் காணும்போதெல்லாம் சர்மாவுக்குத் தம் மனைவியின் நினைவு வந்துவிடும். காரணம் அவருடைய மனைவி

சகுந்தலாவின் வயதில் இவள் ஜாடையாகவே இருந்தது தான்!

**கோ**டை விடுமுறை தொடங்க இன்னும் சில நாட்களே இருந்தன. மண்டித் திண்ணையில் உட்கார்ந்திருந்த சர்மா விடம் தபால்காரர் இரண்டு கடிதங்களைக் கொடுத்துவிட்டுப் போனார்.

"அன்புள்ள சர்மாவுக்கு,

சுந்தரத்துக்குப் பரீட்சை நடந்து முடிந்திருக்குமென்று நினைக்கிறேன். மாங்குயில் மாரியம்மன் திருவிழாவுக்குக் காப்புக் கட்டியிருக்கிறார்கள். இன்றைக்கு எட்டாவது நாள் விழா. தாங்கள் அவசியம் சகுந்தலாவையும் சுந்தரையும் அழைத்துக் கொண்டு வரவும்.

இப்படிக்கு,
கங்காதரய்யர்."

அடுத்தபடியாக மாப்பிள்ளையின் கடிதத்தை எடுத்துப் படித்தார் சர்மா.

"மாமாவுக்கு, நமஸ்காரம்.

நான் டில்லியிலிருந்து புறப்பட்டுச் சனிக்கிழமையன்று ஆற்காடு வருகிறேன். டிசம்பரில் நான் இங்கிலாந்துக்குப் போகவிருப்பதால், அதற்குள் சகுந்தலாவின் கலியாணத்தை நடத்தி முடித்துவிட விரும்புகிறேன். திருமணத்தை ஆற்காட்டிலேயே வைத்துக்கொண்டு விடலாம்.

அங்கே இரண்டு நாட்கள் நான் தங்கியிருப்பேன். அப்போது சகுந்தலாவின் கலியாண விஷயமாக நாம் ஒரு முடிவுக்கு வரலாம்.

இப்படிக்கு,
ராமநாதன்."

கடிதங்கள் இரண்டையும் பெட்டியில் வைத்தபோது, 'மாப்பிள்ளை வருவதும் நல்லதுதான்,' மாங்குடி செல்லுமுன்

அவன் விருப்பத்தையும் தெரிந்து கொள்ளலாம் அல்லவா?' என்று எண்ணிக்கொண்டார் சர்மா.

**ரா**மநாதன் ஐ. சி. எஸ். டெல்லி செக்ரடேரியட்டில் ஒரு முக்கிய அதிகாரி. சர்மாவின் மகளைத் திருமணம் செய்து கொண்ட பிறகு அவருடைய அதிருஷ்டம் மேலும் மேலும் உயர்ந்துகொண்டே போய் உச்ச நிலையை அடைந்தது. அவ்வளவு அதிருஷ்டம் கூடாது என்பதாலோ என்னவோ சகுந்தலாவை ஈன்றெடுத்த மறு வருடமே அவருடைய மனைவி இறந்துவிட்டாள். இந்த அதிர்ச்சியிலிருந்து மீள ராமநாதனுக்கு நீண்ட காலம் ஆயிற்று. அப்புறம் அவருக்கு மறுமணம் செய்துகொள்ளும் யோசனையே எழவில்லை. வாழ்நாள் முழுதும் ஏகாங்கியாகவே வாழ்ந்து விடுவதென முடிவு செய்து, அதன் படியே வாழ்ந்தும் வந்தார் அவர். இப்போது சீமைக்கு செல்லுமுன் ஆற்காட்டுக்கு ஒருமுறை வந்து, சகுந்தலாவின் திருமணத்திற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து முடித்து விட விரும்பினார்.

தாம் எழுதியிருந்தபடியே சனிக்கிழமை இரண்டு மணிக்கெல்லாம் பெரிய கார் ஒன்றில் பெட்டியும், படுக்கையும், பழக்கூடைகளுமாக வந்து இறங்கினார் அவர். சகுந்தலாவுக்குப் பட்டுத் துணிகள், சர்மாவுக்குக் காஷ்மீர் சால்வை, சுந்தரத்துக்கு 'ட்வீட்' துணி, காவேரி பாட்டிக்கு மான் தோல் ஆசனம்—இவ்வளவும் வாங்கி வந்திருந்தார் அவர்.

மாப்பிள்ளை தனியாகக் காரில் வந்து இறங்குவதைக் கண்டபோது, சர்மாவுக்குத் தம் மகளின் நினைவு தோன்றிக் கண்ணீர் வந்துவிட்டது. கண்களைத் துடைத்துக்கொண்டே, "வாங்க, மாப்பிள்ளை!" என்று வரவேற்றார்.

சுந்தரும் சகுந்தலாவும் பெரியவர்களாக வளர்ந்து விட்டிருப்பதைக் காண ராமநாதனுக்கு விசித்திரமாயிருந்தது. சுந்தரை முன் ஒரு முறை ஆற்காட்டுக்கு வந்தபோது பார்த்ததுதான்; இப்போது அவன் முன்னிலும் அதிகமாகக் கவர்ச்சியும் கம்பீரமும் வாய்ந்தவனாகக் காணப்பட்டான்.

'நம் சகுந்தலாவுக்கு ஏற்ற ஜோடி இவன்!' என்று எண்ணிப் பூரித்தது அவர் உள்ளம்.

''சகுந்தலாவை சுந்தருக்கே கொடுத்து விடலாம் என்று எனக்குத் தோன்றுகிறது. அவர்கள் இருவரும் பொருத்த மான ஜோடியாக இருக்கிறார்கள். உங்கள் அபிப்பிராயம் என்னவோ?'' என்றார் ராமநாதன்.

''எனக்கு இதில் பூரண சம்மதமே. கங்காதரய்யர் என் ஆப்த நண்பர்தான். ஆயினும் பையனுக்கு...''

''படிப்பு போதவில்லை; வயசாகி விட்டது என்று நினைக் கிறீர்கள். அவ்வளவுதானே? அதைப்பற்றி கவலையில்லை. அப்படி அவனுக்கென்ன வயசாகி விட்டது? அவனை நாமே படிக்க வைத்தால் போகிறது!'' என்றார் ராமநாதன்.

''எதற்கும் சுந்தரின் ஜாதகத்தைப் பார்த்த பிறகே எதையும் முடிவு செய்ய வேண்டும்.''

''நீங்கள் வேறு எந்தப் பையனையாவது மனதில் வைத்துக் கொண்டிருந்தால் என்னிடம் தாராளமாகச் சொல்லுங்கள். உங்களுக்கு எது சரியாகப் படுகிறதோ, அதுவே எனக்கும் சரி. சகுந்தலாவின் நன்மையில் உங்களுக்கு இல்லாத அக்கறையா எனக்கு?'' என்றார் மாப்பிள்ளை.

''நான் இன்னும் ஒரு முடிவுக்கும் வரவில்லை; வரவும் முடியவில்லை. எல்லாம் ஒரே குழப்பமாயிருக்கிறது எனக்கு!'' என்றார் சர்மா.

அவர்கள் இருவரும் பேசிக்கொண்டிருக்கும்போதே அந்த அனுதைப் பையன் சாம்பசிவம் அங்கே வந்தான்.

''இந்தப் பையன் யார் தெரியுமா, உனக்கு?'' என்று மாப்பிள்ளையிடம் கேட்டார் சர்மா.

''தெரியவில்லையே?'' என்று இழுத்தார் ராமநாதன்.

''உனக்கொரு சமையற்கார அம்மாள் தேவையென்று எழுதியிருந்தாயே, ஏழெட்டு வருஷத்துக்கு முந்தி, ஞாபகம் இருக்கிறதா?''

"ஆமாம்; அன்னபூரணி என்று ஓர் அம்மாளை அனுப்பி யிருந்தீர்கள். அந்த அம்மாள் இப்போது டில்லியில் வேறொருவர் வீட்டில் வேலை செய்து கொண்டிருக்கிறாள்."

"தெரியும், எனக்கு. அவளுடைய மகன்தான் இவன். பாவம் பரம ஏழை அந்த அம்மாள். எட்டு வருஷங்களுக்கு முன் இந்தப் பையனைக் கொண்டு வந்து என்னிடம் ஒப்படைத் தாள்; தனக்கும் ஒரு வழி காட்டவேண்டும் என்றாள். இவனைத் தீனபந்து ஆசிரமத்தில் சேர்த்துவிட்டேன். ஒரு வருஷம்கூடத் தவறாமல் பாஸ் செய்து, இப்போது, பத்தாவது வகுப்பை முடித்திருக்கிறான். ரொம்ப கெட்டிக்காரப் பையன். படிப்பில் ரொம்ப அக்கறையாயிருக்கிறான். மேற்கொண்டு படிக்க வேண்டுமாம், இவனுக்கு!" என்றார் சர்மா.

"அன்னபூரணியின் மகனா இவன்? பேஷ்!" என்றார் ராமநாதன். 'பேஷ்!' என்று கூறினாரே தவிர, 'மனம் கறுப்பா யிருக்கிறானே!' என்று எண்ணிற்று.

"சரிடா, அடுத்த வாரம் வந்து பார்!" என்று சொல்லி அனுப்பினார் சர்மா.

அந்தப் பையன் போனபிறகு, "இவனை உனக்குப் பிடிக் கிறதா" என்று கேட்டார் அவர் தம் மாப்பிள்ளையிடம்.

"ரொம்பக் கறுப்பாயிருக்கிறானே...!" என்று இழுத்தார் ராமநாதன்.

"இவனுடைய ஜாதகம் என்னிடம் இருக்கிறது. அடக்க மான பையன்; ஆயுசும் கெட்டியாக இருக்கிறது. புருஷனுக்கு நிறமா முக்கியம்? குணம்தான் முக்கியம். இவனையே சகுந்தலா வுக்குப் பிணைத்து விடலாமா என்று சில சமயம் எனக்குத் தோன்றுகிறது. ஆனால் எந்த முடிவுக்கும் வந்துவிடவில்லை நான். இப்படி ஒரு பையன் இருக்கிறான் என்று சொல்லி வைத்தேன் அவ்வளவுதான். கங்காதரய்யரிடம் இருந்து சுந்தரத்தின் ஜாதகத்தை வாங்கிப் பார்த்த பிறகே வேறு யோசனை!" என்றார் சர்மா.

எனக்கென்னவோ சுந்தரத்தை ரொம்பப் பிடித்திருக்கிறது. உங்களுக்குத் தெரியாத யோசனையை நான் என்ன புதிதாகச் சொல்லிவிடப் போகிறேன்......இன்றைய மெயிலுக்கே நான் மெட்ராசுக்குப் போய், நாளை டில்லிக்குப் புறப்பட வேண்டும். எல்லாவற்றையும் முடிவு செய்து, இன்னும் ஒரு மாதத்துக்குள் எனக்குக் கடிதம் எழுதுங்கள்!" என்று கூறிய ராமநாதன், அன்று இரவே புறப்பட்டு விட்டார்.

# 5

"நேற்றிலிருந்து காகம் கரைகிறது; ஒருவேளை சர்மா பசங்களை அழைத்துக்கொண்டு வருகிறாரோ, என்னவோ?" என்றாள் பார்வதி.

"ஆமாம்; காகம் எப்பவும்தான் கரைந்து கொண்டிருக்கிறது. சர்மா வருவதாயிருந்தால் கடிதம் போட்டிருக்க மாட்டாரா?" என்றார் கங்காதரய்யர்.

"காக்கா கத்துவதில் எத்தனையோ தினுசு இருக்கிறது. விருந்தாளி வருவதை அறிவிக்கும்போது அது கத்துகிற மாதிரியே வேறு. அதெல்லாம் பெண்களுக்குத்தான் தெரியும்!" என்றாள் பார்வதி அம்மாள்.

அப்படிச் சொல்லிக் கொண்டிருக்கும் போதே, "உன் வாய்க்குச் சர்க்கரைதான் போட வேண்டும். அதோ சர்மாவே வந்துவிட்டார்!" என்றார் கங்காதரய்யர் உற்சாகத்துடன்.

"சுந்தரம்கூட வரானே! அந்தண்டை யாரு? சகுந்தலாவா? ஏதேது!" என்று வியந்தாள் பார்வதி அம்மாள்.

சகுந்தலாவும் சுந்தரும் சேர்ந்து வரும் அழகைக் கண்ட போது பார்வதியம்மாள் என்னென்னவோ கோட்டை கட்டி

ணுள். தாய்க் கண் பொல்லாதது' என்று தனக்குத்தானே சொல்லிக் கொண்டவளாய், 'பரபர' வென்று உள்ளே சென்று ஆரத்தி கரைத்து வந்தாள்.

திருஷ்டி சுற்றிக் கொட்டிய பார்வதி, "வாடி அம்மா, வா! ' என்று அந்த ஆரத்தியிலேயே கையை நனைத்து அந்தப் பெண்ணின் நெற்றியில் பொட்டிட்டு அவளைக் கையைப் பிடித்து உள்ளே அழைத்துச் சென்ருள்.

சகுந்தலா சிரித்துக்கொண்டே உள்ளே நுழைந்தாள். அப்போது அவள் கன்னங்களில் சுழித்த குழியைச் சுந்தரம் கவனிக்கத் தவறவில்லை.

'இது சொந்த வீடு. இங்கே சர்மாவின் கட்டுப்பாடு இருக்காது. சகுந்தலாவுடன் தாராளமாக பழகலாம்!' என்று எண்ணிக் கொண்டான் அவன்.

அன்று முழுதும் தாரை தப்பட்டை வாத்தியங்களின் அமர்க்களத்தில் ஊரே செவிடாகியிருந்தது. மாரியம்மன் கிரகம் ஊர்வலமாக வந்துவிட்டுப் போன பிறகுதான் அந்த ஓசை கொஞ்சம் அடங்கிற்று.

திருவிழாவை முன்னிட்டு இரவு தெருக்கூத்து ஒன்றுக்கும் ஏற்பாடு செய்திருந்தார்கள்.

"மயில் ராவணன் சரித்திரம். ரொம்ப நன்ருக நடிப்பார் கள் கூத்தாடிகள். அவசியம் நீங்கள் பார்க்க வேண்டும்" என்று சர்மாவை வற்புறுத்திஞர் கங்காதரய்யர்.

"ஆகட்டுமே, பார்க்கலாம்," என்ருர் சர்மா. சகுந்த லாவை அழைத்து, "நீயும் கூத்துப் பார்க்க வருகிருயா?" என்று கேட்டார்.

"நான் வருகிறேன்!" என்ருள் அவள் மகிழ்ச்சியுடன்.

அந்தப் பெண் கிராமத்து ஜனங்களுக்கு மத்தியிலே புழுதியில் உட்கார்ந்து கூத்துப் பார்ப்பதில் கங்காதரய்ய ருக்குச் சம்மதமில்லை. எனவே, "அவள் எதற்கு? வேண்டாம். வீட்டிலேயே இருக்கட்டும்," என்ருர் அவர்.

"அதுவும் சரிதான்; மாமிக்குத் துணையாக இருப்பாள்!" என்றார் சர்மா.

"என்னடா, நீ வரப்போகிறாயா கூத்துக்கு?" என்று சுந்தரத்தைப் பார்த்துக் கேட்டார் கங்காதரய்யர்.

"நான் வரவில்லை; நிறையப் பார்த்திருக்கிறேன். மயில் ராவணன் கதைதானே?" என்றான் சுந்தர் சுவாரசியமின்றி.

சாப்பிட்டு முடிந்ததும் சர்மாவும் கங்காதரய்யரும் திறந்த வெளியில் பாயைப் பிரித்துப் போட்டு உட்கார்ந்த வண்ணம் பேசிக்கொண்டிருந்தனர்.

"வெற்றிலை போட்டுக் கொள்கிறீர்களா?" என்று கேட்டார் கங்காதரய்யர்.

"அந்தப் பழக்கம் கிடையாது எனக்கு; ஆனாலும் கொண்டுவரச் சொல்லுங்கள். இன்றைக்குப் போட்டுக் கொள்கிறேன்!" என்றார் சர்மா.

"சுந்தர்!" என்று குரல் கொடுத்தார் கங்காதரய்யர். வீட்டுக்குள் சகுந்தலாவையே சுற்றிச் சுற்றி வட்டமிட்டபடி, அவளிடம் ஏதோ பேச்சுக் கொடுத்துக் கொண்டிருந்தான் அவன். தந்தை கூப்பிட்டதும் அவன் எரிச்சலுடன் காலைத் தரையில் உதைத்தபடியே வெளியே வந்து, "என்னப்பா, கூப்பிட்டீர்களா?" என்று கேட்டான்.

"ஆமாண்டா, உள்ளே போய் வெற்றிலைப் பாக்குத் தட்டை எடுத்து வா!" என்றார் கங்காதரய்யர்; அவன் உள்ளே சென்றான்.

"சுந்தருக்கு இப்போது என்ன வயசாகிறது?" என்று பேச்சுக்கிடையே கேட்டு வைத்தார் சர்மா.

"நள வருஷம் பிறந்தான்; வரும் ஆனியுடன் பதினெட்டு நிரம்பப் போகிறது" என்றார் கங்காதரய்யர்.

"மூல நட்சத்திரம் என்று சொன்னதாக ஞாபகம்" என்றார் சர்மா.

''ஆமாம்; 'ஆண்மூலம் அரசாளும்' என்பார்கள். இவனே இப்போதுதான் ஐந்தாவது பாரம் படிக்கிறான். எந்தக் காலத்தில் அரசாளப் போகிறானோ'' என்று குறைப்பட்டுக் கொண்டார் கங்காதரய்யர்.

''படிப்பு வேறு. வாழ்க்கை வேறு. நன்றாகப் படித்தவர்கள் எல்லாம் சீராக வாழ்ந்து விடுவதில்லை; சீராக வாழ்பவர்களெல்லாம் நன்றாகப் படித்தவர்களும் இல்லை...சுந்தரத்தின் ஜாதகம் இருக்கிறதா? அதை நான் பார்க்க வேண்டும்'' என்றார் சர்மா.

''இருக்கிறதே, இதோ கொண்டு வருகிறேன்!'' என்று உள்ளே போய் ஜாதகத்தை எடுத்து வந்து சர்மாவிடம் கொடுத்தார் கங்காதரய்யர்.

அதை கையில் வாங்கிக் கொண்ட சர்மா வெகு நேரம் வரை அதையே ஆழ்ந்து பார்த்துக் கொண்டிருந்தார். பிறகு விரல்களை மடக்கி, உதடுகளை அசைத்து, மனக்கணக்குப் போட்டுப் பார்த்தார். கடைசியாக, ''சரிதான்; இப்போது சனி தசை நடக்கிறது!'' என்றார்.

''சனி தசை இன்னும் எத்தனை வருஷம்?'' என்று கேட்டார் கங்காதரய்யர்.

''இப்போதுதான் ஆரம்பித்திருக்கிறது; இன்னும் ஏழரை வருஷத்துக்கு ஒரு மாதிரியாகத்தான் இருக்கும். அப்புறம் சந்திர தசையில் நன்றாயிருக்கும். அதையெல்லாம் நன்றாகக் கவனித்துப் பார்த்துத்தான் சொல்ல முடியும். இந்த ஜாதகத்தை நான் ஆற்காட்டுக்கு எடுத்துக்கொண்டு போகிறேன். இது என்னிடமே இருக்கட்டும்'' என்றார்.

''எடுத்துக்கொண்டு போங்களேன்!'' என்றார் கங்காதரய்யர்.

இந்தச் சமயத்தில், ''கூத்து ஆரம்பிச்சுட்டாங்க; மணியக்காரர் உங்களை இட்டாரச் சொன்னாரு!'' என்று ஊர்த் தலையாரி வந்து அழைத்தான்.

"சரி, புறப்படுவோமா?" சர்மாவைப் பார்த்துக் கேட்டார் கங்காதரய்யர்.

சர்மா உள்ளே போய் ஜாதகத்தைப் பத்திரப்படுத்தி விட்டுவந்து, சகுந்தலாவிடம் சொல்லிக்கொண்டு புறப்பட்டார். ஆயினும், அவருக்கு மனதில் நிம்மதி இல்லை. சகுந்தலாவும் சுந்தரும் வீட்டில் தனியாக இருக்கிறார்கள். ஆற்காட்டில் தம் வீட்டு மாடியில் கண்ட காட்சி சர்மாவின் நினைவுக்கு வந்துவிட்டது. எனினும், எதையும் வெளிப் படையாகச் சொல்லிக்கொள்ள முடியாதவராகக் கங்காதரய்யருடன் புறப்பட்டார்.

அவருடைய உள்ளத்தை நன்கு அறிந்திருந்த சுந்தர், நல்ல பிள்ளை போல் தான் படுக்கையைக் கொண்டு வந்து வாசல் திண்ணையில் போட்டுக் கொண்டான். அவன் திண்ணையில் வந்து படுப்பதைக் கண்டபோதுதான் சர்மாவுக்குக் கொஞ்சம் நிம்மதி பிறந்தது.

"நாங்க போயிட்டு வரோம்டா! வீட்டை ஜாக்கிரதையாப் பார்த்துக்கோ; உன் அம்மா தூங்குறா!" என்று கங்காதரய்யர் தன் மகனை எச்சரித்து விட்டுக் கிளம்பினார்.

"போயிட்டு வாங்கப்பா, நான் பார்த்துக்கறேன்!" சுந்தர் உற்சாகத்துடன் கூறினான்.

சற்று நேரத்துக்கெல்லாம் உள் கதவைத் தாளிட்டுக் கொள்வதற்காக சகுந்தலா வாசலுக்கு வந்தாள்.

"கதவைத் தாளிடாதே, எனக்குத் தாகமெடுத்தால் தண்ணீர் குடிக்க உள்ளே வரவேண்டியிருக்கும்!" என்றான். சுந்தர்.

"உக்கும்...எடுக்கும் தாகம்!" என்று சொல்லிவிட்டுக் கதவைத் தாளிடாமலேயே உள்ளே போனாள் அவள்.

"அம்மா தூங்கியாச்சா?" என்று கேட்டான் சுந்தர்.

"இல்லை!"

''நீ கூடத்திலே படுத்துக்கொள்; முற்றத்தின் வழியாய் நல்ல காற்று வரும்.''

''நான் எங்கேயாவது படுத்துக்கொள்கிறேன்; உனக்கென்ன?'' என்ருள் சகுந்தலா.

''இது ஆற்காடு இல்லே, மாங்குடி!'' என்ருன் சுந்தர்.

''அதனுலே நீ என்னே அதிகாரம் செய்ய முடியாது!'' என்ருள் சகுந்தலா.

''இரு, இரு; இன்னும் எத்தனே நாளேக்கு உன் பிகுவெல்லாம்? என் ஜாதகம் இப்போ யாரிடம் இருக்கு, தெரியுமா?''

''யாரிடம் இருந்தால் எனக்கென்ன?'' என்று சொல்லிக் கொண்டே உள்ளே போய்விட்டாள் அவள்.

'சகுந்தலா பலே திருடி! கதவைச் சாத்தாமலே போருளே!' என்று எண்ணித் தனக்குள் மகிழ்ந்து கொண்டான் சுந்தர். அவ்வாறு அவன் எண்ணிக்கொண்டிருக்கும் போதே, சகுந்தலா மீண்டும் வாசலுக்கு வந்தாள். வந்தவள் 'டக்'கென்று கூஜாவைக் கீழே வைத்து, ''இது நிறையத் தண்ணீர் இருக்கிறது. தாகம் எடுக்கும்போது குடிக்கலாம் என்று கூறிவிட்டு சட்டென உள்ளே மறைந்து, கதவை உட்பக்கம் தாளிட்டுக்கொண்டு விட்டாள்!

உள்ளே சென்ற சகுந்தலா கூடத்தில் பாயை எடுத்துப் போட்டுப் படுத்தாள். அவளுக்குத் தூக்கமே பிடிக்கவில்லே. கதவைத்தான் தாளிட முடிந்ததே தவிர தன் உள்ளத்தை அவளால் தாளிட முடியவில்லே; சுந்தரையே நினேத்துக் கொண்டிருந்தாள். கூடத்தின் மற்ருெரு புறத்தில் படுத்துக் கொண்டிருந்த பார்வதி அம்மாள் நிம்மதியாகத் தூங்கிக் கொண்டிருந்தாள்.

திடீரென வானத்தில் சிம்மம் கர்ஜிப்பதுபோல் ஓர் இடி முழக்கம் கேட்டது. கோடை இடி! சகுந்தலா பயந்துபோய்ப் பார்வதி அம்மாளே எழுப்பினுள்.

என்ன சகுந்தலா? என்று கேட்டாள் பார்வதி.

"மழை வரும்போல் இருக்கிறதம்மா, சுந்தரை உள்ளே வந்து படுத்துக்கொள்ளச் சொல்லட்டுமா?"

"கதவைத் திறந்து அவனை இந்தக் கட்டிலில் வந்து படுத்துக்கச் சொல்!" என்றுள் பார்வதி.

சகுந்தலா எழுந்துபோய் வாசல் கதவைத் திறந்து பார்த்தாள். அங்கே சுந்தர் பொய்த் தூக்கம் தூங்கிக் கொண்டிருந்தான்.

"சுந்தர்! சுந்தர்!" என்று கூப்பிட்டாள் சகுந்தலா. அப்போதும் அவன் எழுந்திருக்கவில்லை, அவள் தன்னைத் தொட்டுத்தான் எழுப்பட்டுமே என்பதற்காக!

அவள் கூஜாவிலிருந்து கொஞ்சம் தண்ணீரை எடுத்து அவன் முகத்திலே தெளித்தாள்.

"மழை! மழை!" என்று வாரிச் சுருட்டிக்கொண்டு எழுந்தான் சுந்தர்.

"ஆமாம். மழை! உள்ளே வந்து படுத்துக்கோ! புளுகுத் தூக்கமா தூங்கறே?" என்று கூறிவிட்டு, உள்ளே போனுள் அவள். சுந்தர் அவளுடைய கைகளைப் பற்றி இழுத்தான். அவனிடமிருந்து திமிறிக்கொண்டு அவள் உள்ளே ஓடி விட்டாள்.

சுந்தர் இயற்கையை வாழ்த்திக்கொண்டே கூடத்தில் போடப்பட்டிருந்த கயிற்றுக் கட்டிலில் படுத்துக் கொண்டான். அந்தக் கட்டிலுக்குப் பக்கத்தில் சகுந்தலா படுத்திருந்தாள். அவளுக்கு அடுத்தாற்போல் படுத்திருந்தாள் பார்வதி அம்மாள். தூக்கம் அவளை நன்றுக வசப்படுத்தியிருந்தது. அறைகுறையாக ஒளி வீசிக்கொண்டிருந்த சிம்னி வெளிச்சத்தில் அவளுக்கு எதுவும் தெளிவாகத் தெரியவில்லை.

"அம்மா நீ தூங்கிவிட்டாயா?" என்று கேட்டான் சுந்தர்; பதில் இல்லை.

அம்மா தூங்கிவிட்டாள் என்பது அவனுக்கு மகிழ்ச்சியைத் தந்தது.

"இந்த விளக்கு ஏன் சகுந்தலா; இதைக் கொண்டுபோய் மறைவாக வைத்துவிடேன்!" என்றான் மெல்லிய குரலில்.

"ஐயோ நான் மாட்டேன்; எனக்குப் பயமாயிருக்கும்!" என்றாள் சகுந்தலா.

சுந்தர் அவளையே சிறிது நேரம் கண்கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தான். கட்டிலின் விளிம்பு வரை மெதுவாகப் புரண்டு சென்று, சிரித்தால் சுழிக்கும் அவள் சதுப்புக் கன்னத்தைக் கையால் எட்டிக் கிள்ளவேண்டும் போலிருந்தது அவனுக்கு. மெதுவாகப் புரண்டான்; கயிற்றுக் கட்டிலானதால் 'கர், கர்' என்று சத்தமிட்டது.

'இந்தக் கட்டில் போடும் கூச்சலில் அம்மா விழித்துக் கொண்டால்...?'

சுந்தருக்குப் பயம் தோன்றிவிட்டது.

'இந்தப் பாழும் கட்டிலும் எனக்கு எதிராகச் சதி செய்கிறதே!' என்று பல்லைக் கடித்துக் கொண்டான்.

அப்போது பலமாக காற்று அடிக்கவே, சிம்னி விளக்கு அணைந்துவிட்டது. கூடம், முற்றம், தாழ்வாரம் எங்கும் ஒரே இருட்டு!

'சகுந்தலா பயப்படவில்லையே! ஒரு வேளை தூங்கிப்போய் விட்டாளோ?'

மீண்டும் ஓர் இடிமுழக்கம்; அந்தச் சந்தர்ப்பத்தை நன்றாகப் பயன்படுத்திக் கொண்டான் சுந்தரம். இப்போது எழுந்தால் கட்டிலின் ஓசை இடி ஓசையில் அமுங்கிப் போகும்; அம்மாவுக்கும் நான் எழுந்திருப்பது தெரியாது. மெல்ல எழுந்து போய், சகுந்தலாவை நெருங்கி...

சுந்தரத்தின் உள்ளம் 'படபட' வென்று அடித்துக் கொண்டது. அடுத்த இடி ஓசைக்காக அவன் காத்திருந்தான்.

'கிடுகிடு' வென்ற இடியின் உறுமல் வானமெங்கும் ஓடிக் கொண்டிருந்தது.

சுந்தரம் மெதுவாக கட்டிலில் புரண்டான். இரு கால் களையும் ஆகாயத்திலே தூக்கி, அப்படியே தரைப் பக்கமாகச் சாய்த்துச் சரித்துத் தரையிலே பாதங்களைப் பூப்போல் பதிய வைத்தான். கட்டில் ஓசையும் இடிக் குரலும் இரண்டறக் கலந்த சந்தர்ப்பம்...

அடிமேல் அடிவைத்து சகுந்தலாவை நெருங்கிவிட்டான். அவள் அப்போது தூங்கிக் கொண்டிருந்தாளா, விழித்துக் கொண்டிருந்தாளா என்று அவனுக்கும் தெரியவில்லை; நமக் கும் தெரியவில்லை!

சுந்தர் கீழே குனிந்து, மெதுவாகக் காலடி எடுத்துவைத்த போது, சட்டென அவன் கால்கள் சகுந்தலாவின் மீது பட்டு விடவே, "ஐயோ!" என்று அலறிவிட்டாள். பார்வதி அம்மாள் பதறி விழித்துக்கொண்டு, "என்ன சகுந்தலா, என்ன?" என்று கேட்டாள்.

சுந்தர் இரண்டே எட்டில் தாவிப் போய்க் கட்டிலில் படுத்துக் கொண்டான். விஷயத்தைப் புரிந்துகொண்ட சகுந்தலா, "ஏதோ பூனைபோல் இருக்கிறது; எழுந்து விளக்கை ஏற்றுகிறேன்!" என்று கூறிச் சமாளித்தாள்.

சுந்தருக்கு அப்புறம்தான் மூச்சு வந்தது.

"சரி, உனக்குப் பயமாயிருந்தால் என் பக்கத்தில் வந்து படுத்துக்கொள்!" என்றாள் பார்வதி அம்மாள்.

விளக்கை ஏற்றிய சகுந்தலா, "திருட்டுப் பூனை, ஓடி விட்டது போலிருக்கிறது!" என்று சுந்தரைக் கடைக் கண்ணால் பார்த்துக் கொண்டே கூறினாள்.

பிறகு, பார்வதி அம்மாளை ஒட்டிப் படுத்துக்கொண்டாள் அவள்.

# 6

சற்று நேரத்துக்கெல்லாம் இடியும் மின்னலும் அதிகமாகி மழை பிடித்துக்கொள்ளவே தெருக்கூத்து பாதியிலேயே நின்றுவிட்டது. அவ்வளவுதான்; கூத்துப் பார்த்துக்கொண்டிருந்த மக்கள் அனைவரும் ஒரு நொடியில் கலைந்து விட்டனர். சிறிது சிறிதாகச் சேர்த்த பணம் ஒரே விநாடியில் கரைந்து விடுவதைப்போல.

சர்மாவும் கங்காதரய்யரும் வீட்டுக்குத் திரும்பி வந்த போது திண்ணையில் படுத்திருந்த சுந்தரைக் காணவில்லை. சர்மாவுக்குத் 'திக்' கென்றது. கங்காதரய்யர் கதவைத் தட்டியதும் சுந்தரம்தான் வந்து கதவைத் திறந்தான். உள்ளே சென்ற சர்மாவின் கண்கள் முதல் காரியமாக 'சகுந்தலா எங்கே இருக்கிறாள்' என்று தேடின.

கூடத்தில் அவளும் பார்வதியம்மாளும் ஒருவரையொருவர் கட்டிக்கொண்டு படுத்திருப்பதைக் கண்டபோதுதான் அவருக்கு நிம்மதி பிறந்தது.

மறு நாளே சர்மா ஆற்காட்டுக்குப் புறப்பட்டுவிட்டார்.

"என்ன சுந்தர், நீயும் வருகிறாயா?" என்று கேட்டார் சர்மா.

"இப்போது விடுமுறைதானே? அவன் இன்னும் கொஞ்ச நாட்கள் மாங்குடியிலேயே இருந்துவிட்டுப் பிறகு வரட்டும்" என்றார் கங்காதரய்யர்.

"சகுந்தலாவும் பத்து நாட்கள் இங்கேதான் இருக்கட்டுமே? மாங்குடிக்கு அவள் வந்ததே இல்லை!" என்றாள் பார்வதி அம்மாள்.

"ஆகட்டும்; இன்னும் எத்தனையோ முறை வரவேண்டியிருக்கும். அப்போது பார்த்துக் கொள்ளலாம். இப்போது

அவனை நான் அழைத்துச் செல்கிறேன்; ஆற்காட்டில் பாட்டிக்கு ஒத்தாசையாக யாருமே இல்லை" என்றார் சர்மா.

சகுந்தலா கங்காதரய்யரையும் பார்வதி அம்மாளையும் நமஸ்காரம் செய்துவிட்டு, குதிரை வண்டியில் ஏறி உட்கார்ந்தாள். வண்டி நகர்ந்தது.

சுந்தர் வாசலுக்கு வந்து நின்று சகுந்தலாவையே ஏக்கத்தோடு பார்த்துக் கொண்டிருந்தான். அவள் பிரிவால் அவனுக்கு மாங்குடியே வெறிச்சென்றாவது போல் இருந்தது.

**ஆ**ற்காட்டுக்குத் திரும்பிய சர்மா மனம் குழம்பி, அமைதி அற்றவராய் அலைந்து கொண்டிருந்தார். அதற்குக் காரணம் சுந்தரின் ஜாதகத்தை அவர் கட்டம் கட்டமாக அலசிப் பார்த்துவிட்டதுதான். பார்த்தபின் அவர் அவனிடம் அந்தரங்கமாகக் கொண்டிருந்த அன்பு, அபிமானம், நம்பிக்கை எல்லாமே துகள் துகளாகச் சிதறிவிட்டன.

காலமெல்லாம் கஷ்டப்பட்டுச் சேர்த்துவைத்த நோட்டுக்கள் 'இனி செல்லாது' என்று திடுமென அறிவிக்கப் பட்டது போன்ற அதிர்ச்சியை அவர் அடைந்தார். சுந்தரின் ஜாதகத்தில் வேறு எவ்விதக்கோளாறுகள். இருந்திருந்தாலும் அவர் அவற்றைப் பொருட்படுத்தியிருக்க மாட்டார். அவனுடைய ஆயுள் பாவமே சரியில்லாதபோது, அதை அவரால் எப்படி அலட்சியம் செய்ய முடியும்?

சுந்தரைத் தத்து எடுத்துக் கொண்டு, தம்முடைய சொத்துக்களுக்கெல்லாம் அவனை வாரிசாக்கி, சகுந்தலாவை மணம் முடித்து வைத்து, தம்முடைய அந்திம கால ஈமக் கடனையும் அவன் கையாலேயே முடித்துக்கொள்ள வேண்டும் என்று மனக்கோட்டை கட்டியிருந்த சர்மாவைக் கண்டு சுந்தரின் ஜாதகம் எக்காளச் சிரிப்புச் சிரித்து எள்ளி நகையாடியது!

அன்று முதலே சர்மாவின் அறிவு குழம்பிற்று மேற்கொண்டு சுந்தரை ஆற்காட்டில் வைத்துக்கொண்டு படிப்புச்

சொல்லிக் கொடுப்பதா, வேண்டாமா என்று குழம்பித் தவிக்கலானார்.

சகுந்தலா வயது வந்த பெண்ணாகிவிட்ட பிறகு அவளுக்கு உரியவன் அல்லாதவனாகி விட்ட ஓர் ஆண் மகனை, தம் வீட்டுக்குள் புழங்க விடுவதில் அவருக்குச் சிறிதளவும் சம்மதமில்லை. ஆயினும் இத்த இக்கட்டான, தர்ம சங்கட மான நிலையைத் தம் ஆருயிர் நண்பரான கங்காதரய்யரிடம் எப்படிச் சொல்வது?

சுந்தரைப் பிரிந்து வந்தது முதல் சகுந்தலாவுக்கும் மன நிம்மதி இல்லை. அவளுடைய நினைவெல்லாம் மாங்குடியிலேயே இருந்தது. அன்றிரவு நடந்த நிகழ்ச்சிகள், சுந்தரின் பொல்லாத்தனம், தான் கதவைத் தாளிட்டுக்கொண்டு அவனை அழ வைத்தது, பூனை என்று கூக்குரலிட்டுப் பயமுறுத்தியது— இவ்வளவும் தன் நினைவில் நிழலாடியபோது அவள் கன்னம் குழியச் சிரித்துக்கொண்டாள். அந்த மாயக் கள்ளனின் நினைப்பிலேயே மயங்கிக் கிடந்தாள். மாடிக்குப் போனால் அவன் ஆசை முகம்; தோட்டத்துக்குச் சென்றால் அவனுடைய அழகிய தோற்றம்!...

மாடியிலுள்ள சுந்தரின் அறைக்குள் சென்று பார்த்தாள் அவள். அங்கே அவன் உட்கார்ந்திருப்பது போலவும், சித்திரம் வரைவது போலவும், சிரிப்பது போலவும், பின்னலைப் பிடித்து இழுப்பது போலவும் பிரமை தட்டிற்று அவளுக்கு. மேஜை டிராயரைத் திறந்தபோது, அவன் வரைந்து விட்டுப் போயிருந்த அவ்வழகிய தாமரை மலர் அவளைக் கண்டு இதழ் விரித்துச் சிரித்தபடி, "ஏ, கறுவண்டே! எங்கே வந்தாய்?" என்று கேலி செய்வது போலிருந்தது.

'சுந்தருக்கு எவ்வளவு அழகாகச் சித்திரம் வரைய வந்து விட்டது?'. என்று தன்னுள் வியந்துகொண்டே அதை எடுத்துத் தன் பெட்டிக்குள் வைத்துக்கொண்டாள் அப் பேதை.

ஊஞ்சலில் போய் உட்கார்ந்தபோது சுந்தரும் தானும் அதில் விளையாடிய காட்சியும், அவனுக்குத் தலை பின்னிய காட்சியும் நினைவுக்கு வந்தன.

சுந்தரின் மாய உருவத்தை மறக்கும் நோக்குடன் அவள் கீழே இறங்கித் தோட்டத்தின் பக்கம் சென்ருள். அங்கே அவன் அந்த இருட்டறையில் வழுக்கி விழுந்ததும், அதைக் கண்டு தான் சிரித்ததும் புகைப் புலஞகக் காட்சி அளித்தது.

சகுந்தலா அந்த அறைக்குள் சென்று பார்த்தாள். அங்கு சுந்தர் வைத்துவிட்டுப் போயிருந்த சோப்புப் பெட்டி அப்ப டியே கிடந்தது, அதிலிருந்த சந்தன சோப்பின் மணத்தை நுகரும்போது அவளுடைய கண்கள் ஏன் அப்படிச் சொக்கிச் சுழல்கின்றன?

'விடுமுறை கழிந்து சுந்தர் ஆற்காட்டுக்குத் திரும்ப இன்னும் ஒரு மாதம் ஆகுமே! அது வரை இந்த வீட்டில் எப்படித் தனியாக இருப்பேன்?'...சகுந்தலாவின் இதயத்தி லிருந்து ஒரு கனத்த பெருமூச்சு வெளிப்பட்டது.

மாலைப் பொழுது மயங்கும் நேரத்தில், வாசல் வராந்தா வில் விளக்கைக் கொண்டுபோய் வைப்பதற்காகச் சென்ருள் சகுந்தலா. அப்போது சுந்தருடைய பள்ளித் தோழன் சாமி நாதன் அங்கே தயங்கியவாறு நின்றுகொண்டிருப்பதைக் கண்ட அவள், "சுந்தர் ஊரில் இல்லையே, வருவதற்கு ஒரு மாதம் ஆகும்" என்ருள்.

"சுந்தர் பெயிலாயிட்டான்; பள்ளிக்கூடத்திலே இன்றைக் குத்தான் 'ரிசல்ட்' போட்டிருக்கிருர்கள். பாஸ் செய்தவர்கள் பெயர்களையெல்லாம் போர்டிலே போட்டிருக்கிருர்கள். அதில் சுந்தர் பெயரைக் காணும். இதைச் சொல்லிவிட்டுப் போகத் தான் வந்தேன்!" என்ருன் அவன்.

அப்போதுதான் மண்டியிலிருந்து வந்துகொண்டிருந்த சர்மா, "பெயிலாகிவிட்டான் அல்லவா? ரொம்ப சரி; எனக்கு அப்பவே தெரியும். எந்நேரமும் வாசகசாலை, இல்லாவிட்டால் டிராயிங், எப்படிப் பாஸ் பண்ணமுடியும்? இருக்கட்டும், நாளைக்கே மாங்குடிக்குக் கடிதம் எழுதிப் போடுகிறேன். மேற்கொண்டு படிக்க போகிருனே இல்லையோ?" என்று கூறிக் கொண்டே உள்ளே போய்விட்டார் அவர்.

“அப்போ சுந்தர் இன்னும் இரண்டு வருஷங்கள் ஆற்காட்டிலேயே இருந்து படிப்பான்!” என்று மனதிற்குள்ளாகவே மகிழ்ந்து கொண்டாள் சகுந்தலா.

சர்மாவோ, ‘சுந்தரம் பரீட்சையில் தவறிவிட்டதும் ஒரு விதத்தில் நல்லதாய்ப் போயிற்று. இப்போது அவனுக்கு வயது பதினெட்டுக்கு மேல் ஆகிறது. ஐந்தாவது பாரத்துக்கு மீறிய வயசு. இதற்கு மேலும் அவன் ஆற்காட்டில் தங்கிப் படிக்க விரும்ப மாட்டான் அல்லவா?’ என்று எண்ணித் திருப்தி அடைந்தார்.

சுந்தரத்தின் ஜாதகத்தை வாங்கிப் பார்த்ததிலிருந்தே அவர் தம்முடைய மனதை மாற்றிக்கொண்டு விட்டார். அவனைச் சுவீகாரமாக்கிக் கொண்டு சகுந்தலாவின் வாழ்வைப் பாழாக்குவதுடன், தாமும் அனுதையாகச் சாவதற்கு அவர் மனம் ஒப்பவில்லை. எனவே, சுந்தரத்துக்கும் தமக்கும் ஏற்பட இருந்த உறவு பந்தத்தை அப்போதே அறுத்தெறிந்துவிட அவர் முடிவு செய்துவிட்டார்.

தபாற்காரர் கொடுத்துவிட்டுப் போன கடிதத்தைப் பிரித்துப் படித்துக்கொண்டிருந்த கங்காதரய்யரின் முகம் ஒரு மாதிரியாக மாறுவதைக் கண்ட பார்வதி அம்மாள் கவலையுடன், “யார் கடிதாசு அது? சர்மாவா போட்டிருக்கார்?” என்று கேட்டாள்.

“ஆமாம்; உன் பிள்ளையாண்டான் பெயிலாகி விட்டானும்!” என்ருர் கங்காதரய்யர் கலக்கத்துடன்.

“பெயிலாயிட்டானு! ராத்திரியெல்லாம் கண் விழிச்சுப் படிச்சிருக்கேன்னு சொன்னுனே?” என்ருள் பார்வதி.

“ராத்திரியெல்லாம் கண் விழித்து டிராயிங் போட்டிருப்பான்!” என்ருர் அவர். கிணற்றடியிலிருந்த சுந்தரம் அப்போதுதான் அங்கே வந்து நின்ருன்.

“இந்தா, சர்மா என்ன எழுதியிருக்கார் பார்?” என்று கூறிய கங்காதரய்யர் கடிதத்தைக் கோபமாக வீசி எறிந்தார்

அதை எடுத்துப் படித்த சுந்தரத்தின் முகம் கறுத்தது; உதட்டைக் கடித்துக்கொண்டான். சற்று நேரத்துக்கெல்லாம் தன் மனதைத் தேற்றிக் கொண்டவனாய், "உம் என்ன செய்ய லாம்? அக்கறையாகத்தான் படித்தேன்; போய்விட்டது. இந்தப் படிப்பு போதும் எனக்கு. பட்டணத்துக்குப் போய் ஏதாவது ஒரு வேலைத் தேடிக்கொள்கிறேன்!'' என்றான்.

''ஆமாம், பி.ஏ. பாஸ் பண்ணியிருக்கிறாய் அல்லவா? போனவுடனே வேலை கிடைத்துவிடும் உனக்கு. முதலில் ஆற்காட்டுக்குப் போய் சர்மா என்ன சொல்கிறாரோ அதன்படி செய்; பட்டணம் போவதாயிருந்தாலும் அவர் உத்தரவைப் பெற்றுக்கொண்டே போக வேண்டும்; தெரிந்ததா? நம் குடும் பத்தின் தெய்வம் அவர். மேற்கொண்டு நீ படிக்க வேண்டும் என்று அவர் சொன்னால் படி; பட்டணம் போகச் சொன்னால் போ. மனதிற்குள்ளாகவே ஆயிரம் திட்டங்கள் போட்டு வைத்திருப்பார் அவர்! எதையும் வெளியே சொல்லிக்கொள்ள மாட்டார். அவருடைய அன்பு குடத்திலிட்ட விளக்கைப் போன்றது; சமயம் வரும்போது அவர் செய்யும் காரியத்தி லிருந்துதான் அது வெளிப்படும். தம் மனதில் ஏதோ இருக்கக் கொண்டுதான் அவர் உன் ஜாதகத்தை எடுத்துக்கொண்டு போயிருக்கிறார்'' என்றார் கங்காதரய்யர்.

சர்மா மண்டிக்குப் புறப்பட்டுக் கொண்டிருந்த நேரம்; அவருக்கு எதிரே போய் நின்றான் சுந்தர்.

''என்ன சுந்தர், இப்போதுதான் வருகிறாயா? ஊரில் எல் லோரும் சவுக்கியமா?'' என்று விசாரித்தபடியே வாசல் பக்கம் மெதுவாக நடந்தார் சர்மா.

''ஆமாம்'' என்று தலைகுனிந்தபடியே பதில் அளித்தான் சுந்தர்.

''மேற்கொண்டு என்ன செய்யப் போகிறாய்? மறுபடியும் படிக்கப் போகிறாயா?'' என்று சிரித்துக்கொண்டே கேட்டார்

"வேண்டாம் மாமா, நான் பட்டணத்துக்குப் போகலாம் என்று இருக்கிறேன். அதற்காகத் தங்களுடைய உத்தரவைப் பெற்றுப்போகவே வந்திருக்கிறேன்."

"பட்டணத்துக்கா? உன் அப்பா சரி என்று சொன்னாரா?"

"உங்கள் அபிப்பிராயப்படி செய்யச் சொல்லி அனுப்பியிருக்கிறார்."

"பட்டணம் போய் என்ன செய்யப் போகிறாய்?"

"ஒரு நல்ல வேலை கிடைக்கிறவரை விளம்பர போர்டு எழுதிச் சம்பாதிக்கலாமென்று இருக்கிறேன்"

"அதற்கெல்லாம் அனுபவம் வேண்டுமே! உனக்கு போர்டு எழுதத் தெரியுமா?"

"தெரியும்; ஆற்காட்டில்கூட ஒரு சோடா பாக்டரிக்கு எழுதிக் கொடுத்திருக்கிறேன்!"

"சரி; உனக்குத் தைரியமிருந்தால் புறப்பட்டுப் போ! பத்தாவது வரையே படித்தாலும் என்ன வேலை கிடைத்து விடப் போகிறது? இப்படி ஒரு கைத்தொழிலைப் பழகிக் கொள்வது நல்லதுதான். ஆமாம்; ஒரு தொழிலில் புகுந்து அதில் நிரந்தர வருமானம் வருகிறவரை ரொம்பக் கஷ்டப் படுவாயே, அதுவரை பணத்துக்கு என்ன செய்யப் போகிறாய்?"

"இன்றைக்கு லட்சாதிபதிகளாக இருப்பவர்கள் எல்லா ஒரு காலத்தில் பட்டணத்துக்கு வெறுங்கையுடன் போ வர்கள்தான். என் கையிலாவது ஒரு பிரஷ் இருக்கிறது. மே போகிற மாடு தலையில் புல்லைக் கட்டிக்கொண்டா போகிற எப்படியோ சமாளித்துக் கொள்வேன். எனக்குத் தைரிய உண்டு. பிறர் உதவியை எத்தனை நாட்களுக்கு எதிர்பார்த்து கொண்டிருக்க முடியும்? நானே என் கால்களை ஊன்றி நிற் பார்க்கிறேன்!"

''உனக்கு நெஞ்சில் உறுதி உண்டு; உன்னைப்பற்றிய கவலை எனக்குத் துளியும் கிடையாது. ஆனால், உன் தந்தை இளகிய மனம் படைத்தவர்; நீ பட்டணம் செல்வது பற்றி அவர்தான் கவலை கொள்வார். நானே அவருக்குக் கடிதம் எழுதிப் போடு கிறேன்; நீ புறப்படு!'' என்று தைரியமூட்டினார் சர்மா.

தன்னைச் சுற்றிலும் இறுக்கிப் பிணைக்கப்பட்டிருந்த இரும்புச் சங்கிலிகள் மளமளவென்று கட்டவிழ்த்துக் கொண்டதைப்போல் இருந்தது சுந்தருக்கு. சர்மா இத்தனை இலகுவில் தனக்கு விடுதலை அளிப்பார் என்று அவன் சொப்ப னத்திலும் கருதவில்லை. தன் பயணத்துக்கு அவர் முட்டுக் கட்டை போடுவார் என்றே அவன் எதிர்பார்த்தான். ஆனால் அவரோ அதற்கு நேர்மாறாக அவனை பட்டணத்துக்கு அனுப்பி வைப்பதில் மிகுந்த உற்சாகம் காட்டினார்.

''சரி நீ இன்றைய இரவு மெயிலுக்கு புறப்படலாம். உன் பெட்டி படுக்கைகளையெல்லாம் தயாராக எடுத்து வைத்துக் கொள். சாயுபுவிடம் சொல்லி உன்னை ராணிப்பேட்டை ஸ்டேஷன் வரை ஜட்காவில் கொண்டுபோய் விட ஏற்பாடு செய்கிறேன் என்று கூறிவிட்டு அவர் மண்டிக்கு கிளம்பி விட்டார்.

சர்மா வெளியே சென்றதும், சுந்தர் மாடியிலிருந்த தன் அறைக்கு விரைந்தான். ஒரு புறம் சகுந்தலாவைக் காண வேண்டும் என்று அவன் உள்ளம் துடித்தாலும் இன்னொரு புறம் அவளைப் பார்ப்பதற்கே அவனுக்கு வெட்கமாயிருந்தது. மளமளவென்று தன் துணிமணிகளை எடுத்துப் பெட்டியில் வைத்துக்கொண்டான். மேஜையிலிருந்த புத்தகங்களையும் நோட்டுப் புத்தகங்களையும் எடுத்து அடுக்கி வேறொரு பக்கத் தில் கொண்டுபோய் வைத்தான். தலையணையையும் போர்வை யையும் எடுத்து ஜமக்காளத்துக்குள் வைத்துச் சுருட்டிக் கட்டிப் பெட்டிக்குப் பக்கத்தில் கொண்டு போய் வைத்தான்.

வளையல் ஒலி கேட்டது!

''சு...ந்...த...ர்!''

மெல்லிய குரலில் மெதுவாக அழைத்தாள் சகுந்தலா

''ம்...''

''கோபமா?''

''இல்லே!''

''பட்டணத்துக்கா போகிருய்?''

''ஆமாம்.''

''ஆற்காட்டிலேயே இருப்பாய் என்று சந்தோஷப்பட்டுக் கொண்டிருந்தேன்!'' அவள் கண்களிலிருந்து சிந்திய நீர் முத்துக்கள் கீழே விழுந்து சிதறின. குனிந்தபடியே உட்கார்ந் திருந்த சுந்தரத்துக்கு அதைக் கண்டபோது இதயமே வெடித்துச் சிதறுவதுபோல் இருந்தது!

''அழாதே, சகுந்தலா!'' அவள் கைகளைப் பிடிக்கப் போனவன் ஏனோ சட்டெனப் பின் வாங்கிக்கொண்டான்.

''பட்டணத்திலே எங்கே தங்கப் போறே?''

''எங்கேயோ!''

''எங்கே சாப்பிடுவே?''

''எங்கேயோ!''

''லெட்டர் போடுவியா?''

''பார்க்கலாம்.''

''இந்தா...''

''என்னது?''

''பணம்!''

''ஏது?''

''ஏதோ, வாங்கிக்க மாட்டாயா?''

''சரி, கொடு!'' அவளிடமிருந்து இரண்டு பத்து ரூபாய் நோட்டுக்களை வாங்கிப் பெட்டியில் வைத்துக் கொண்டான்.

# 7

மண்டியிலிருந்து சீக்கிரமே திரும்பிவிட்ட சர்மா, "தயாராயிருக்கிருயா, சுந்தர்?" என்று கேட்டுக்கொண்டே உள்ளே வந்தார்.

"பெட்டி படுக்கையெல்லாம் கட்டி வைத்துவிட்டேன்; புறப்பட வேண்டியதுதான்!" என்ருன் சுந்தர்.

"கையில் பணம் வைத்திருக்கிருயா?" என்று கேட்டார் சர்மா.

"ஐம்பத்தைந்து ரூபாய் இருக்கிறது. அப்பா இருபத்தைந்து ரூபாய் கொடுத்தார்; சோடா ·பாக்டரிக்கு போர்டு எழுதிக் கொடுத்ததில் கிடைத்த முப்பது ரூபாயும் அதனுடன் சேர்ந்து இருக்கிறது" என்ருன் சுந்தர்.

"வருமானத்தோடுதான் கிளம்புகிருய் என்று சொல்! ம், நான் ஏதாவது கொடுக்கட்டுமா?"

"வேண்டாம், மாமா! உங்கள் ஆசீர்வாதம் போதும்" என்ற சுந்தர், அவர் கால்களில் விழுந்து நமஸ்கரித்தான்.

"என் ஆசிர்வாதம் நிறைய இருக்கிறது. பட்டணவாசம் புதுசு உனக்கு. துர்ச்சகவாசம் எதுவும் வைத்துக்கொள்ளாதே! எந்தக் கஷ்டங்கள் வந்தாலும் நேர்மையாக நடந்துகொள். அடிக்கடி கடிதம் போடு இந்தா, இந்தக் கம்பராமாயணத்தை கையோடு எடுத்துக்கொண்டு போ! மனம் சோர்வடைகிற போது இதை எடுத்துப் படி; கவலைகள் தீர்ந்து போகும்!" என்று கூறிப் பார்சலாகக் கட்டியிருந்த அப் புத்தகத்தை அவனிடம் கொடுத்தார் அவர். சுந்தரம் அதைப் பெற்றுக் கொண்டு புன்சிரிப்புடன் சர்மாவைப் பார்த்தான்.

"என்ன பார்க்கிருய்? ராமாயணம் படித்தால் கவலைகள் எப்படித் தீரும் என்றுதானே யோசிக்கிருய்? ராமனுடைய கஷ்டங்களைப் படிக்கும்போது அவனைக் காட்டிலும் நாம் என்ன

கஷ்டப்பட்டு விட்டோம் என்று ஓர் ஆறுதல் ஏற்படும். அதுவே நம் கவலையைத் தீர்க்கும்'' என்றார் சர்மா.

''போய் வருகிறேன், மாமா!'' என்று சுந்தரம் விடை பெற்றுக் கொண்டபோது, அவனுக்கு இதயத்தின் அடிவாரத்திலிருந்து துக்கம் பொங்கிக்கொண்டு வந்தது.

''சாயபு, சுந்தரை ஜாக்கிரதையாகக் கொண்டுபோய் ரெயிலேற்றிவிட்டு வா!'' என்றார் சர்மா. சுந்தர் வண்டியில் ஏறுமுன் காவேரிப் பாட்டியிடம் சொல்லிக்கொள்ளும் சாக்கில் உள்ளே போனான். சகுந்தலா அங்கே கண்ணீரும் கம்பலையுமாக நின்று கொண்டிருந்தாள்.

''போயிட்டு வரேன், பாட்டி!'' என்று சொல்லிக் கொண்டு புறப்பட்ட சுந்தரின் தொண்டையிலிருந்து 'வரேன், சகுந்தலா!' என்று கிளம்பிய வார்த்தைகள் வெளியே வராமலேயே தடைப்பட்டு நின்றுவிட்டன. தலை குனிந்தவாறே வாசலுக்குப்போய் வண்டியில் ஏறிக்கொண்டான். இதயமில்லாத வண்டி மீண்டும் அந்த இரு இளம் உள்ளங்களையும் பிரித்துவிட்டுப் புறப்பட்டது.

வாசலில் வந்து நின்ற சகுந்தலாவுக்கு உலகமே தன் கால்களிலிருந்து நழுவி ஓடுவதைப்போல் இருந்தது!

அதே ராணிப்பேட்டை ஸ்டேஷன்.

மனைவியிடம் சொல்லிக்கொண்டு சென்னைக்குப் போய்க் கொண்டிருந்த வழிப்போக்கன் சுந்தரம், பாலாற்றங்கரைக்கு வந்தபோது தன்னுடைய பால்ய வயது நினைவுகளில் லயித்தவனாய்த் தன்னை மறந்து தன் கையிலிருந்த பையை வினா மரத்தடியில், பிள்ளையார் கோயிலுக்கு எதிரிலேயே வைத்து விட்டு வந்துவிட்டான் அல்லவா? ஸ்டேஷன் வரை நடந்து வந்துவிட்ட பிறகுதான் அவனுக்குச் சுய நினைவு வந்தது.

கையிலிருந்த பையைக் காணாமல் துணுக்குற்றவனாய், ''அடடா! பிள்ளையார் கோயிலுக்கு எதிரில் அல்லவா மறந்து

வைத்துவிட்டு வந்துவிட்டேன்? இனி திரும்பிப் போனாலும் அது கிடைப்பது நிச்சயமில்லையே! குழந்தைக்கு வெள்ளி அரை ஞாண் செய்துபோட வேண்டும் என்று வைத்திருந்த பதினைந்து ரூபாயைச் சாப்பாட்டு டிக்கெட் வாங்கிக் கொள்ளுங்கள் என்று அவள் என்னிடம் கொடுத்தனுப்பினாள். எனக்கு அது கிட்ட வில்லை. என்னைக் காட்டிலும் கஷ்டப்படுகிறவர்கள் யாருக் கேனும் அது போய்ச் சேரவேண்டும் போலிருக்கிறது. அதனா லேயே நான் அதை அங்கேயே மறந்து வைத்துவிட்டு வந்திருக் கிறேன். பாவம், யாருக்காவது அது உபயோகப்படட்டும். தகுதியுள்ள ஓர் ஆசாமியிடம் பிள்ளையார் அதைச் சேர்த்து விடுவார். ஆனால், இப்போது நான் சென்னைக்குப் போய்ச் சேர ரெயிலுக்கு டிக்கெட் வாங்க வேண்டுமே! பணத்துக்கு என்ன செய்வது? ஒரு வழியும் புரியவில்லையே!'' என்று தவித்துக் கொண்டிருந்தான் வழிப்போக்கன் சுந்தரம்.

அப்போது சற்றுத் தூரத்தில் இருந்த மைதானத்தில் இருந்து ஒலி பெருக்கியின் மூலம் வந்துகொண்டிருந்த ஒரு பிரசங்கியின் கணீரென்ற குரல் சுந்தரத்தின் செவிகளில் தேனாகப் பாய்ந்தது. ஆம்; அது அவனுடைய நண்பனின் குரல் தான்!

வழிப்போக்கன் சுந்தரம் முகம் மலர, அகம் குளிர, குரல் வந்த அந்தத் திக்கை நோக்கி நம்பிக்கையுடன் நடந்தான்.

ஆயிற்று; அப்படியும் இப்படியும் ஒரு மாதம் ஓடியே போய்விட்டது. கையிலுள்ள பணம் இன்னும் ஒரு வேளைக்குத் தான் காணும். அப்புறம்? பட்டணத்து நடைபாதையில் தவிக்கும் எத்தனையோ அனாதைகளைப்போல் தானும் நடுத் தெருவில் நிற்க வேண்டிய நிலை வந்துவிடுமோ? சுந்தரம் கண் களில் நீர் சுரந்துவிட்டது.

இந்த ஒரு மாத காலமாக அவன் சென்னையில் அலையாத இடமே இல்லை. போர்டு எழுதிப் பிழைத்துவிடலாம் என்று நம்பிக்கொண்டு வந்த அவனுக்கு நேர்மாறான அனுபவமே

கிட்டியது. எங்கே போய்க் கேட்டாலும், 'இப்போது வேண்டாம்' அல்லது 'இப்போதுதான் எழுதினோம்' என்ற இரண்டு விதமான பதில்களே கிடைத்தன. அவர்களாகத் தேடிக்கொண்டு வந்து கொடுக்க வேண்டிய ஒரு வேலையை நாமாகத் தேடிச் செல்லும்போது வேறு என்ன பதிலை எதிர் பார்க்க முடியும்?

நாளை ராயருக்கு ரூம் வாடகை கொடுத்தாக வேண்டும். இன்றே அவர் ஒரு மாதிரியாகப் பார்த்துவிட்டுப் போய்விட்டார். கையிலிருப்பதோ பத்தணுதான். ஆமாம், பத்தே அணு!

எங்கேயாவது போய், யாரையாவது கேட்டு, எப்படி யாவது ஒரு போர்டுக்கு ஆர்டர் பிடித்துக்கொண்டு வந்தே தீருவதென்ற திட சங்கல்பத்துடன் அந்தப் பத்தணுவை எடுத்துப் பையில் போட்டுக்கொண்டு வெளியே கிளம்பினுன் சுந்தரம்.

கால் நடையாகவே பெல்ஸ் ரோடு வழியாகச் சென்று வாலாஜா ரோடில் திரும்பினுன். அப்போது யாரோ கை தட்டிக் கூப்பிடும் சத்தம் கேட்ட சுந்தரம் திரும்பிப் பார்த்தான். அவனை அழைத்தது ஒரு போலீஸ்காரர்; "இங்கே வா!" என்று கூப்பிட்ட அவர் போலீஸ் ஸ்டேஷன் வாசலில் நின்று கொண்டிருந்தார். சுந்தருக்குத் தூக்கி வாரிப் போட்டது.

"உன்னைத்தாம்பா, இங்கே வா!" போலீஸ்காரர் சற்று அதிகாரமாகவே கூப்பிட்டார்.

சுந்தரம் பயந்தபடியே ஸ்டேஷனுக்குள் சென்றுன். அவனைப் பின்தொடர்ந்து வந்த கான்ஸ்டேபிள் தன் கேள்விக் கணைகளைத் தொடுத்தார்.

"எங்கிருந்து வரே?"

"திருவல்லிக்கேணியிலிருந்து."

"எங்கே போறே?"

"தங்கசாலைத் தெருவுக்கு."

"இன்னு வேலை செய்யறே?"

"ஒண்ணுமில்லை!"

"ஆள் வாட்டசாட்டமாகத்தான் இருக்கே, இப்படி வந்து நில்லு!"

சுந்தரம் அவன் காட்டிய இடத்தில் நின்றான்.

"கை இரண்டையும் மேலே தூக்கு!"

சுந்தரம் கைகளை உயர்த்தினான்.

"மூச்சை உள்ளுக்கிழுத்து 'டம்' பிடி!"

சுந்தரம் மூச்சை அடக்கினான்.

"சரி, மூச்சை விடு!"

மூச்சை விட்டான்.

"குனிந்து கால் கட்டை விரலைத் தொடு!"

தொட்டான்.

"உன் விலாசம் என்ன?"

சொன்னான்.

"போட்டோ வெச்சிருக்கிறயா?"

"இல்லை."

"சரி, உள்ளே போ!"

சுந்தரம் விழித்தான்.

"போப்பா, உள்ளே!"

"உள்ளேயா! நான் ஒரு தப்பும் செய்யலையே?"

சுந்தரம் கெஞ்சினான்.

"உள்ளே போய் அந்தப் பெஞ்சியிலே உட்காரு இன்ஸ்பெக்டர் வந்ததும் விசாரிப்பாரு. மத்தியானம் சாப்பாடு உனக்கு இங்கேதான்!"

சுந்தருக்குத் துக்கம் துக்கமாக வந்தது.

"ஏன் பயப்படறே? பயப்படாதே! உனக்கு நல்ல பர்சனலிடி இருக்குது; போலீசிலே சேர்ந்துடு; ஹெட் கான்ஸ்டேபிளாக்கூட ஆவலாம், என்ன படிச்சிருக்கே நீ?"

"ஐந்தாவது பாரம்!"

"அடேயப்பா! அவ்வளவு படிப்பு அதிகம் இதுக்கு. என்ன சொல்றே? சேர்ந்துக்கிறியா? இப்போ ஆள் எடுக்கிறாங்க அப்புறம் இந்தச் சான்ஸ் கெடைக்காது. சொல்லிட்டேன்!"

சுந்தருக்குப் போன உயிர் திரும்பி வந்தது. ஒருகணம் போலீசில் சேர்ந்து விடலாமா என்று சபலம் தட்டியது. ஆனாலும் அடுத்த கணமே அவ்வெண்ணத்தை மாற்றிக் கொண்டான்.

"வீட்டிலே உள்ள பெரியவங்களைக் கேட்டுக்கொண்டு வந்து அப்புறம் சேருகிறேன்; இப்போது நான் போகிறேன்!" என்றான் சுந்தரம்.

"சரி, அப்புறம் உன் இஷ்டம். உன்னை இன்ஸ்பெக்டர் பார்த்தா அப்படியே க வ் வி க் கு வ ா ரு!" என்றான் கான்ஸ்டேபிள்.

'தப்பினேன், பிழைத்தேன்' என்று வெளியே வந்தான் சுந்தரம்.

அவனுக்கு ஒன்றுமே தோன்றவில்லை. அந்த அதிர்ச்சியிலிருந்து மீள அவனுக்கு வெகு நேரமாயிற்று.

"புறப்பட்ட வேளை சரியில்லை; நேரமும் ஆகிவிட்டது. அறைக்கே திரும்பிவிடுவது நல்லதென்று நடந்தான் சுந்தரம். வீட்டை அடைந்தபோது வாசலில் ராயர் உட்கார்ந்திருந்தார். சுந்தரைக் கண்டதும், "இந்த மாச வாடகையைத் தரீங்களா?" என்று அவர் கேட்டே விட்டார்.

"தருகிறேன்!" என்று கூறிவிட்டு மாடிப்படி ஏறிச் சென்ற சுந்தரம், தன் அறைக்குப் போய் உட்கார்ந்து யோசிக்கலானான்.

அவன் மனம் குழம்பிப் போயிருந்தது. பசி ஒரு பக்கம்; "ராயருக்கு எப்படி வாடகை கொடுப்பது? நாளைச் சாப்பாட்டுக்கு என்ன செய்வது?" என்ற கவலை இன்னொரு பக்கம்.

"ஆண்டவனே! எனக்கு என்ன வழி காட்டப் போகிறாய்?" என்று உள்ளம் உருகக் கடவுளை வேண்டினான் அவன்.

"கஷ்டங்கள் வருகிறபோது கம்பராமாயணத்தை எடுத்துப் படி!" என்று சர்மா சொன்ன மணிமொழிகள் அவன் காதுகளில் ஒலித்தன.

பார்சலாகக் கட்டப்பட்டிருந்த அந்தக் கம்பராமாயணத்தை எடுத்துப் பிரித்து, ஒவ்வொரு ஏடாகத் தள்ளிக் கொண்டே வந்தான். சுந்தர காண்டத்துக்கு வந்தபோது அவன் முகம் ஆச்சரியத்தால் மலர்ந்தது.

என்ன அதிசயம்! அந்தப் பகுதியில் ஐந்து பத்து ரூபாய் நோட்டுக்கள் அடுக்காக வைக்கப்பட்டிருந்தன! சுந்தரத்தின் கஷ்ட காலத்துக்கு உதவட்டும் என்று சர்மாதான் அதை வைத்திருந்தார்!

# 8

சுந்தரம் தமிழ் போதினி காரியாலயத்தைத் தேடிச் சென்ற சமயம் அந்தப் பத்திரிகை முதலாளி தபாற்காரருடன் பேசிக்கொண்டிருக்கவே, சுந்தரம் வெளியிலேயே காத்திருந்தான்.

தபாற்காரர் வெளியே சென்றார். போஸ்ட்மேன் எப்போது போகப் போகிறார் என்று காத்துக்கொண்டிருந்த கம்பாசிட்டர் ஒருவர், அடுத்த கணமே முதலாளியின் முன் பிரசன்னமானார்.

"என்னய்யா, மணியார்டரைக் கண்டுட்டு வந்துட்டியா? போய் வேலையைப் பாருய்யா! எனக்குத் தெரியும், எப்பேய கொடுக்கணும்னு?"—இது முதலாளியின் குரல்.

"மூணு மாசமா சம்பளப் பாக்கி நிக்குதுங்களே? பத்து ரூபாயாவது கொடுங்க!"—இது கம்பாசிட்டரின் குரல்.

"முனுசாமிக்கு நாலு மாசச் சம்பளம் நிக்குதுய்யா! அவன் வாயைத் திறந்து கேட்கிறானா, பார்த்தாயா? என் குணம் தெரியும் அவனுக்கு. உனக்கு வேலை வேணுமா, பணம் வேணுமா?"

"ரெண்டும்தான்!"

"ரெண்டுக்கும் ஆசைப்பட்டா எப்படிய்யா முடியும்? ஆவட்டும் போ, நானே கூப்பிட்டுத் தரேன்!"

கம்பாசிட்டர் உள்ளே சென்றதும் பேப்பர் கடை குமாஸ்தா வந்தார். பத்திரிகை முதலாளி சுருட்டை ஊதிக் கொண்டே, "வாய்யா, ராமானுஜுலு! காப்பி சாப்பிடறயா? எங்கே இவ்வளவு தூரம்?" என்றார்.

"உங்களைப் பார்க்கத்தான்; எங்க முதலாளி பார்த்துட்டு வரச் சொன்னாரு!"

"என்னய்யா, விஷயம்? அதுதான் செக் கொடுத்துட்டேனே?"

"அதை நீங்க போடச் சொன்ன தேதிக்கு ரெண்டு நாள் கழிச்சே போட்டோம்; பாங்கிலேருந்து திரும்பி வந்துட்டுது!"

"அதான் தப்பு! அதையெல்லாம் சொன்ன டயத்துலே போட்டு வாங்கிடணும்யா! பிசினெஸ்னா அப்படித்தான். சரி அந்தச் செக்கைக் கொண்டா, இப்படி. இருநூறு ரூபாதானே? நாலு நாளில் நானே பணத்தை அனுப்பி வைக்கிறேன்!"

"மறந்துடாதீங்க!"

"மறக்கிறதாவது? நீ போய் வாய்யா!"

அன்றைய நிலைமையைச் சமாளித்துவிட்ட திருப்தியுடன், மணியார்டரில் வந்த பணத்தை எடுத்துக்கொண்டு அவசர மாக வெளியே புறப்பட்டுக்கொண்டிருந்தார் அவர்.

அப்போதுதான் அவருக்கு எதிரேபோய் நின்றான் சுந்தரம்.

"யார் நீ?"

"பெயிண்டர்! உங்க ஆபீஸ் போர்டு..." என்று இழுத்தான் சுந்தரம்.

"ஆமாம் பழசாப் போடுச்சு! வேறே புதுசா எழுதிகிட்டு வரயா? என்ன சார்ஜ் பண்ணுவே?"

"என்ன கொடுத்தாலும் வாங்கிக்கறேன்!" என்றான் சுந்தரம். அந்தப் பத்திரிகையுடன் எப்படியாவது தொடர்பு வைத்துக்கொள்ள வேண்டும் என்பது அவனுடைய நீண்ட நாளைய அவா. அதற்கு வாய்த்துள்ள சந்தர்ப்பத்தை நழுவ விட மனம் இன்றியே 'கொடுப்பதை வாங்கிக் கொள்கிறேன்!' என்றான் அவன்.

"சரி, போர்டை எடுத்துக்கிட்டுப் போ! சீக்கிரம் முடிச்சு கொண்டாரணும்!"

"ஆகட்டும், அட்வான்ஸ் ஏதாவது .."

"அட்வான்ஸா? உன்னை நம்பி போர்டைக் கொடுக்கிறேனே, அது போதாது?"

போர்டைக் கழற்றிச் சென்ற சுந்தரம் ஒரே வாரத்துக்குள் அதை எழுதியும் முடித்துவிட்டான்; பணம்தான் கைக்கு வரவில்லை.

'நாளைக்கு, நாலு நாள் கழித்து, ஒரு வாரத்துக்கப்புறம்' என்று எத்தனையோ கெடு வைத்தும்கூட சுந்தரம் திரும்பத் திரும்பச் சளைக்காமல் போய்க்கொண்டே இருந்தான். அந்த முதலாளிக்கே அவனிடம் ஒரு தயையும் தாட்சணியமும் பிறந்துவிட்டது. ஒரு ரூபாயை எடுத்துக் கொடுத்தார்.

முழுப் பணம் வராதது பற்றிச் சுந்தரத்துக்கு ஒரு விதத்தில் மகிழ்ச்சியே! அந்தத் தாட்சணியத்தை வைத்துக் கொண்டு, முதலாளியிடம் இருந்து வேறொரு காரியத்தைச் சாதித்துக் கொள்ளச் சமயத்தை எதிர் நோக்கியிருந்தான் அவன்.

ஒரு நாள் அவர் ஒய்வாக உட்கார்ந்திருந்தபோது, "எனக்குச் சித்திரம்கூட வரையத் தெரியும். ஏதாவது படம் எழுதிக் கொடுத்தால் உங்கள் பத்திரிகையில் போடுவீர்களா?" என்று கேட்டான்.

"ஓ, எழுதிக்கிட்டு வாயேன்; போடறேன்!" என்றார் அவர்.

அவ்வளவுதான். அப்போதே மூர்மார்க்கெட்டுக்குச் சென்று பழைய இங்கிலீஷ் பத்திரிகை ஒன்றை விலைக்கு வாங்கி வந்து, அதிலிருந்த ஒரு சித்திரத்தைக் காப்பி அடித்துக்கொண்டு போய்க் கொடுத்து விட்டான் அவன்.

அடுத்த "தமிழ் போதினி" சஞ்சிகையை வாங்கிப் பிரித்த போது, என்ன ஆச்சரியம், சுந்தரம் எழுதிய படம் அதில் வெளியாகியிருந்தது! 'அதிசயம், ஆனல் உண்மை!' என்ற பகுதியின் கீழ், தான் வரைந்த படம் வெளியாகியிருப்பதைக் கண்ட சுந்தருக்குத் தலை கால் புரியவில்லை; அன்றெல்லாம் கால்கள் தரையில் பாவாமல் அவன் ஆகாசத்திலேயே மிதந்து கொண்டிருந்தான். அந்த நிகழ்ச்சியே அவனுக்கு அதிசயம்; ஆனல் உண்மையாக இருந்தது!

"தமிழ் போதினி" பத்திரிகையைத் தன்னுடைய அறைக்கு எடுத்துக்கொண்டு போய், அதிலுள்ள தன் சித்திரத்தையே வெகுநேரம் பார்த்துக் கொண்டிருந்தான் அவன். தான் போட்டிருந்த கோடுகள் ஒவ்வொன்றும் அப்படி அப்படியே அதில் வந்திருப்பதைக் கண்டபோது அவனுக்குப் பெருமை தாங்கவில்லை. 'சுந்தர்' என்னும் கையெழுத்துக்கூட அப்படியே பிரதியாகியிருந்தது. ஏதோ மகத்தான காரியத்தைச் சாதித்து விட்டது போன்ற ஒரு பரபரப்பும் ஆவேசமும் அவனை ஆட்கொண்டது. 'இந்தச் சித்திரத்தை சகுந்தலா பார்த்தால் ஆச்சரியப்படுவாள்!' என்று நினைத்த அவனுக்கு, உடனே அந்தப் பத்திரிகையோடு அப்படியே ஆற்காட்டுக்குப் பறந்துபோய் சகுந்தலாவுக்கு அதைக் காட்ட வேண்டும் போல் இருந்தது!

இந்தச் சமயத்தில் 'போஸ்ட்' என்ற குரல் கேட்கவே, திரும்பிப் பார்த்தான். தபாற்காரர் அவனிடம் இரண்டு கடிதங்களைக் கொடுத்து விட்டுப் போனார். ஒன்று மஞ்சள் நிறக் கலியாண அழைப்பிதழ்; இன்னொன்று மாங்குடியிலிருந்து அவன் அப்பா எழுதிய கடிதம். முதலில் அந்த மஞ்சள் நிறக் கவரையே பிரித்தான். பிரித்தவன் சற்றுநேரம் அதையே கண்கொட்டாமல் பார்த்துக்கொண்டு நின்றான்!"

'சகுந்தலாவுக்கும் சாம்பசிவத்துக்கும் அடுத்த ஞாயிற்றுக் கிழமை ஆற்காட்டில் திருமணம்!

இதுதான் அந்த அழைப்பிதழில் அடங்கியிருந்த விஷயம். திடீரென்று வானமெங்கும் கருமேகங்கள் சூழ்ந்துகொண்டு, ஒளியும் காற்றும் ஸ்தம்பித்து விட்டதுபோல் தோன்றியது சுந்தருக்கு. துக்கத்தை அடக்க எவ்வளவோ முயன்றும், அவனையும் மீறிக்கொண்டு கண்ணீர்த் துளிகள் வெளிப்பட்டு விட்டன.

'சாம்பசிவம், சாம்பசிவம்' என்று இரண்டு முறை அவன் உதடுகள் முணுமுணுத்தன. 'யார் இந்த சாம்பசிவம்? அந்தக் கறுப்புப் பையனா? சமையற்காரியின் மகனா? சகுந்தலா! உனக்கா இந்தத் தலைவிதி? அழகையே நாடும் உன் மனம் சாம்பசிவத்தை மணந்துகொள்ள எப்படித் துணிந்தது?'

அப்பாவின் கடிதத்தை எடுத்துப் பார்த்தான் அவன்.

"சுந்தருக்கு, ஆசீர்வாதம்.

நேற்று சர்மா இங்கே வந்தார். சகுந்தலாவுக்கு அடுத்த ஞாயிற்றுக் கிழமை ஆற்காட்டில் திருமணம் நடக்கிறது. என்னையும் உன் அம்மாவையும் கட்டாயம் கலியாணத்திற்கு வரவேண்டும் என்று வற்புறுத்தி அழைத்துவிட்டுப் போயிருக்கிறார். நாங்களும் போகிறோம். உனக்கும் அழைப்பு அனுப்புவதாகச் சொன்னார். 'திருமணம் என்பது பெரியோர்களால் நிச்சயிக்கப்படுவதில்லை; பிறக்கும்போதே நிச்சயமாகி விடுகிற

விஷயம்' என்று சர்மா இங்கு வந்திருந்தபோது சூசகமாகச் சொன்னார்.

எங்களுக்கும் உன்னைப் பார்க்க வேண்டும்போல் இருக்கிறது. அவசியம் புறப்பட்டு வரவும்.

இப்படிக்கு,
கங்காதரய்யர்.

அறையைப் பூட்டிக்கொண்டு வெளியே புறப்பட்டான் சுந்தரம். கடற்கரை பக்கமாகவே நடந்தான். உள்ளச் சுமை அவனை அழுத்தியது; உடல் கனத்தது; உலகம் சூனியமாய்க் காட்சி அளித்தது. எதிரே வந்த உருவங்கள் நீரில் கரைந்த சித்திரமெனத் தெளிவின்றிக் காட்சி அளித்தன.

ஈர மணலில் கொஞ்ச தூரம் நடந்து போய் அலைகளுக்கருகே உட்கார்ந்து கொண்டான். உள்ளச் சுமை உடலைக் கனக்க வைத்ததால், கால் சுவடுகள் மணலில் ஆழமாகப் பதிந்தன.

மனம் எதிலும் லயிக்கவில்லை; அவன் கைவிரல் ஈர மணலில் மூன்று பெயர்களை எழுதியது.

சாம்பசிவம், சகுந்தலா, சுந்தரம்—திடுமெனச் சீறி வந்த அலை ஒன்று சாம்பசிவம் என்ற எழுத்தை அழித்துவிட்டுப் போய்விட்டது. 'இயற்கைக்கே பொறுக்கவில்லை இது' என்று கூறியது அவன் உள்ளம்; அங்கே இருக்கப் பிடிக்காமல் எழுந்து நடந்தான்.

சகுந்தலா—சாம்பசிவம் திருமணம் இனிதே நடந்தேறியது. விடியற்காலையில் இருந்தே 'கும்'மென்று காதை நிரப்பிக்கொண்டிருந்த மேள வாத்திய இசை ஓய்ந்து கலியாண வீட்டில் ஒருவித கலகலப்பும் சலசலப்பும் ஏற்பட்டன. முதல் பந்திக்கு வேண்டிய ஏற்பாடுகள் துரிதமாக நடந்து கொண்டிருந்தன. புது மணத் தம்பதியர் பூ மாலை

யுடன் ஜோடியாகச்சென்று பெரியோர்களை வரிசைக்கிரமமாக நமஸ்கரித்து ஆசீர்வாதம் பெற்றுக் கொண்டிருந்தனர்.

கங்காதரய்யரையும் பார்வதி அம்மாளையும் நமஸ்கரித்த போது, சகுந்தலாவின் கண்ணில் நீரே பெருகிவிட்டது; பார்வதி அம்மாளுக்கும் கூடத்தான்!

சாப்பிட்டு முடித்த மறுகணமே சகுந்தலா மாடியறைக்குச் சென்று விட்டாள். இனி இரண்டு மணி வரை அவளுக்கு ஓய்வுதான். மணப் பந்தலில் உட்கார்ந்தபடியே சுந்தரின் வரவை எதிர்பார்த்து எதிர்பார்த்துப் பெரும் ஏமாற்றத்துக் குள்ளாகியிருந்தாள் அவள்.

மன அமைதியின்றிச் சுந்தரின் அறைக்குச் சென்றவள் கதவை ஒருகணித்துச் சாத்திக்கொண்டாள். கழுத்திலிருந்த மணமாலையைக் கழட்டி, சுவரிலிருந்த ஆணியில் மாட்டினாள். அப்போது அவளுடைய அடி வயிற்றிலிருந்து துக்கம் பொங்கி வந்தது. அந்த இடத்தில்தான் சுந்தர் தன் சட்டையை மாட்டி வைப்பது வழக்கம். சோகத்தின் சிகரமாக, உணர்ச்சி களின் உறைவிடமாக, ஏமாற்றத்தின் சின்னமாக, ஏக்கத்தின் வடிவமாக, சுந்தரின் நாற்காலியில் அமர்ந்து கண்ணீர் உகுத் துக் கொண்டிருந்தாள் அப் பேதை! யாரோ கதவைத் திறந்து கொண்டு உள்ளே வரும் ஓசை; திரும்பிப் பார்த்தபோது...

அவன் மவுனமாக வந்து அவளுக்கு எதிரேயிருந்த மேஜை மீது அமர்ந்துகொண்டான்.

"சுந்தர்!"

அவனுடைய கைகளைப் பற்றிக் கொள்ளும் ஆவலோடு எழுந்தாள் அவள்; அவளுடைய பிடியிலிருந்து விலகிக் கொண் டான் அவன்!

"சுந்தர், நீ ஏன் நேற்றே வரவில்லை? உன்னைக் காணுமல் எவ்வளவு நேரமாக நான் அழுதுகொண்டிருக்கிறேன், தெரியுமா?"

"ஏன் அழவேண்டும்? உனக்குப் பிடித்த கணவனைத் தேர்ந்தெடுத்துக்கொண்ட பிறகு, என் வரவை எதற்காக நீ எதிர்பார்க்கிறாய்?"

"சுந்தர், என்னை வாள் கொண்டு அறுக்காதே! தாத்தா வாகப் பார்த்து முடிவு செய்த பிறகு, நான் என்ன செய்ய முடியும்?"

"உன் தாத்தாவுக்கு என்மீது என்ன வெறுப்பு? அவருக்கு நான் என்ன துரோகம் செய்துவிட்டேன்?"

"உன் ஜாதகம் சரியில்லையாம்; உனக்கு ஆயுள் பலம் இல்லையாம். ஆனால், அதை வெளியே சொல்ல இஷ்டப்பட வில்லை அவர். என் அப்பாவுக்குக்கூட இந்தத் திருமணத்தில் கொஞ்சமும் சம்மதமில்லை. அவர் எவ்வளவோ சொல்லிப் பார்த்தார். தாத்தாதான் ஒரே பிடிவாதமாக இருந்துவிட் டார். அவரை மீறி அப்பாவால் ஒன்றுமே செய்ய முடியவில்லை சுந்தர், காப்பி சாப்பிட்டாயா?"

"எனக்கு ஒன்றும் வேண்டாம்!"

"உன் கையிலே என்ன அது?"

"உனக்குக் கலியாணப் பரிசு கொண்டு வந்திருக்கிறேன்!"

"எங்கே?"

சகுந்தலா ஆவலுடன் அதை வாங்கிப் பார்த்தாள்.

"நீ வரைந்த படமா அது? எவ்வளவு அழகாயிருக்கிறது! இயற்கைக் காட்சியா?" என்றாள் அவள் மகிழ்ச்சியுடன்.

"இல்லை; செயற்கைக் காட்சி!" என்றான் சுந்தர் வெறுப் புடன்.

அந்தப் படத்தில் மூன்று மரங்கள் இருந்தன.

ஒன்று அரசமரம், மற்றொன்று வேப்புமரம், இன்னொன்று கலியாண முருங்கை மரம்.

அரசமரத்துக்கும் வேப்பமரத்துக்கும் இடையே ஒரு வேலி இடையிலிருந்த வேம்பு புதிதாக முளைத்த கலியாண முருங்கை

மரத்தைத் தழுவிக்கொண்டிருந்தது. அந்தச் சித்திரம் சகுந்தலாவின் இதயத்தைத் தாக்கியது.

"நான் வருகிறேன், சகுந்தலா!"

சுந்தர் எழுந்து நடந்தான்.

"சுந்தர்!"

சகுந்தலா வாய்விட்டுக் கூவிவிட்டாள். அங்கே அவனைக் காணவில்லை; அவன் வரவேயில்லை. இத்தனை நேரமும் அப்படி ஒரு பிரமை!...

காலையில் அவசரமாகப் புறப்பட்டுச் சென்ற சுந்தரம் பார்க் டவுன் கந்தசாமிக் கோயில் பக்கம் சென்றான். ஞாயிற்று கிழமையானதால் அங்கே உள்ள பெயிண்டு ஷாப்புகள் அத்தனையும் மூடிக் கிடந்தன. மறுபடியும் டிராம் வண்டியைப் பிடித்துத் திருவல்லிக்கேணிக்குப் போய்ச் சேர்ந்தான். அதற்குள் மணி பதினொன்று ஆகிவிடவே, நல்ல பசி எடுத்து விட்டது. எனவே, வழக்கமாகச் சாப்பிடும் ஓட்டலுக்குச் சென்று, இலைக்கு முன்னால் உட்கார்ந்தான் அவன். சாப்பிடும் போது அவன் மனமெல்லாம் ஆற்காட்டிலேயே இருந்தது.

"இந்த நேரத்தில் முகூர்த்தம் முடிந்து, எல்லோரும் வடை பாயசத்துடன் சாப்பிட்டுக்கொண்டிருப்பார்கள்!" என்று எண்ணிக் கொண்டான்.

"சார், பாயசம் போடட்டுமா?"

ஓட்டல் சர்வர் பாயசத்தை இலையில் பரிமாறினான்.

"பாயசமா! இன்றைக்கு என்னப்பா விசேஷம்?"

"ஸ்பெஷல் சார்! சண்டே ஸ்பெஷல்!" என்றான் அவன்.

"பாயசம் எனக்குப் பிடிக்காது!" என்று கூறிய சுந்தர், அதை ஒதுக்கிவிட்டுச் சாப்பாட்டை அவசரமாக முடித்துக் கொண்டு எழுந்துவிட்டான்.

நேராகத் தன் அறைக்குச் சென்று படுத்தவன்தான்; அன்றெல்லாம் ஒரு வேலையும் ஓடவில்லை அவனுக்கு.

சாயந்திரம் கடற்கரைக்குப் போய்விட்டு வந்து மீண்டும் படுத்துக்கொண்டான். புரண்டுப்புரண்டு படுத்ததுதான் மிச்சம்; தூக்கம் எப்படி வரும்?

திடீரென்று வாசலில் நாதசுவர இசை கேட்கவே, படுக்கையைவிட்டு எழுந்து போய்க் கீழே எட்டிப் பார்த்தான்.

காஸ் லைட் வெளிச்சத்தில் நாதசுவர இசை முழங்க, ஆடவரும் பெண்டிரும் சூழ்ந்து வர, கலியாண ஊர்வலம் ஒன்று மெதுவாக நகர்ந்து கொண்டிருந்தது. காருக்குள் மணப் பெண்ணும் மாப்பிள்ளையும் உட்கார்ந்து இருந்தனர். அவர்களை சுற்றிலும் துளி இடம்கூட இல்லாதபடி வாண்டுகளின் கூட்டம்! பெண்கள் சூடியிருந்த மலர்களின் நறுமணம் ஜம்மென்று காற்றிலே மிதந்து வந்தது. அந்த மணத்தை நுகர்ந்தபோது, அன்றொரு நாள் சகுந்தலா முல்லைமொட்டால் தன்னைச் சீண்டி விளையாடிய காட்சி அவன் நினைவுக்கு வந்தது.

''இந்த நேரத்தில் ஆற்காட்டிலும் ஊர்வலம் நடந்து கொண்டிருக்கும்!'

சுந்தரம் பெருமூச்சு விட்டான். அந்த மூச்சில் எத்தனையோ இன்ப நினைவுகளும், இன்ப நிகழ்ச்சிகளும் பொதிந்து கிடந்தன!

சுந்தரம் 'தமிழ் போதினி' காரியாலயத்துக்குள் எட்டிப் பார்த்தபோது, வழக்கம்போல் நாலைந்து கடன்காரர்களுக்குச் ''சால்ஜாப்பு'' சொல்லிக்கொண்டிருந்தார் அந்தப் பத்திரிகை யின் முதலாளி. கடன்காரர்களுக்குப் பதில்கூறி அனுப்புவதில் அவருக்கு நிகர் அவரேதான்!

சுந்தரைக் கண்டதும் அவர், ''என்ன சுந்தர், ஏதாவது படம் எழுதிக்கிட்டு வந்திருக்கிறாயா?'' என்று கேட்டார்.

''ஆமாம், சார்!''

''எங்கே, காட்டு பார்க்கலாம்?'' சுருட்டுப் புகையை ஒரு முறை உறிஞ்சி ஊதினார்; பிறகு, சுந்தர் கொடுத்த படத்தை

வாங்கிப் பார்த்தார். புருவத்தைச் சுளித்துக்கொண்டே, 'ரொம்ப நல்லாயிருக்குதே!'' என்றார். அவர் ரசிக்கிற விதம் அப்படித்தான்.

''இண்டியன் இங்க்கும், டிராயிங் பேப்பரும் சரியில்லே!'' இழுத்தான் சுந்தர்.

''அதெல்லாம் நானே வாங்கித் தரேன் உனக்கு; நீ எத்தனை படம் வேணும்னாலும் எழுது; கவலைப்படாதே!'' என்று உற்சாகப்படுத்தினார் அவர்.

''உங்களை இன்னொரு விஷயம் கேட்கணும்னு...''

''என்ன அது?''

''உங்க ஆபீசிலேயே என்னை ஒரு ஆர்ட்டிஸ்ட்டா சேர்த்து கொண்டால்......''

''சேர்ந்துக்கயேன்! இப்பவே வேணும்னாலும் சேர்ந்துக்க!''

சுந்தருக்குத் தன் காதுகளையே நம்ப முடியவில்லை.

''நிஜமாகத்தான் சொல்றீங்களா?''

''இதிலே என்ன விளையாட்டு? நிஜமாத்தான் சொல்றேன்; உன் மாதிரி ஒரு ஆர்ட்டிஸ்ட் எனக்குத் தேவைதான்!''

''ஆரம்பத்திலே என்ன கொடுப்பீங்க?''

''அம்பதுதான் கொடுப்பேன்! போகப்போக உன் வேலையைப் பார்த்துக் கூட்டுவேன். நூறு, இருநூறுகூடக் கொடுப்பேன். எல்லாம் உன் திறமையிலே இருக்கு.''

''அம்பது ரூபாயா? அதிகம் சார்!''

''ரூபாயா! யார் சொன்னது ரூபாய்ன்னு? அம்பது பிரதி 'தமிழ் போதினி' கொடுப்பேன்னு சொன்னேன். ஒண்ணு நாலணுவாச்சே? மாசத்துக்கு இரண்டு முறை வருது நம்ம பத்திரிகை. ஆக, மாசம் நூறு பிரதி கிடைக்கும் உனக்கு. அந்த நூறையும் கொண்டுபோய்க் கடைகளிலே விற்றுக்கலாம். கடைக்காரன் கமிஷன் போக உன் கைக்கு எப்படியும் இருபது ரூபா 'நெட்' டாக் கெடைச்சுடும்'' என்றார் முதலாளி.

சுந்தரம் அவரை வெறிக்கப் பார்த்தான்.

"ஏன் அப்படிப் பார்க்கிறே? பத்திரிகை ஆபீசிலே பணமா கண்ணுலே பார்க்கிறது ரொம்பக் கஷ்டம். என் கைக்கே அது சிக்கறதில்லையே, இந்தக் கடன்காரனுங்க எங்கே விட்டு வைக்கிறானுங்க?"

சுந்த்ரம் வேலையை ஒப்புக்கொண்டான். வேறு வழி? இரண்டு மாதங்கள் கஷ்டப்பட்டு வேலை செய்ததன் பயனாகச் சித்திரம் எழுதுவதிலும் அவனுக்கு நல்ல தேர்ச்சி ஏற்பட்டு விட்டது. அதுதான் அவன் கண்ட பலன்!

திருவல்லிக்கேணியிலிருந்து சிந்தாதிரிப்பேட்டைக்குத் தினமும் நடந்தேதான் போய் வருவான் அவன். சம்பளமாகக் கிடைக்கும் தமிழ் போதினி பிரதிகளை வழியிலுள்ள வெற்றிலைப்பாக்குக் கடைகளில் கொடுத்து விற்கச் சொல்லி, போகும்போதும் வரும்போதும் அவை விற்று விட்டனவா என்று பார்த்துக்கொண்டே இருப்பான். சில சமயங்களில் அவை விற்றுப் போவதும் உண்டு! மொத்தத்தில் சுந்தரம் அந்தப் பத்திரிகையில் 'ஆர்ட்டிஸ்'டாகச் சேர்ந்த பிறகு, தமிழ் போதினியின் விற்பனை எண்ணிக்கை உயர்ந்துவிட்டது. ஆமாம்; முன்பெல்லாம் ஆயிரத்து இருநூறு பிரதிகளே அச்சிடப்பட்டு வந்த அப் பத்திரிகை, இப்போது 1250 பிரதிகளாக உயர்ந்து விட்டது! சுந்தரத்துக்கு ஐம்பது கொடுக்க வேண்டும் அல்லவா?

## 9

ஒரு நாள் மாலை அறைக்கதவைத் திறந்துகொண்டு உள்ளே நுழைந்தவன், கதவின் கீழே விழுந்து கிடந்த கடிதத்தைக் கையிலே எடுத்துப் பார்த்தான்.

"சுந்தருக்கு, ஆசீர்வாதம். வரும் ஆனி மாதம் 27-ந் தேதி வெள்ளிக்கிழமை உனக்குத் திருமணம் செய்வதாக நிச்சய

மாகியிருக்கிறது. நம் பக்கத்து ஊர்ப் பெண்தான்; நானும் உன் தாயாரும் போய்ப் பெண்ணைப் பார்த்தோம். பெண் எங்கள் மனசுக்குப் பிடித்திருக்கிருள். கலியாணத்துக்கு இன்னும் பத்தே நாட்கள்தான் இருக்கின்றன. இத்துடன் அச்சிடுவதற்காக முகூர்த்தப் பத்திரிகை எழுதி அனுப்பியிருக்கிறேன். நீ வரும்போது அதைப் 'பிரிண்ட்' செய்துகொண்டு வரவும். ஒரு வாரம் முன்னதாகவே வந்து விடவும்.

இப்படிக்கு,
கங்காதரய்யர்."

கடிதத்தைப் படித்து முடித்ததும் சுந்தரின் முகம் சட்டென வாட்டமுற்றது. சகுந்தலாவின் இனிய முகம் அவன் கண்முன் தோன்றியது. கலங்கிய கண்களைத் துடைத்துக் கொண்டான் அவன். தன் தந்தைமீது அவனுக்குக் கோபமாகக்கூட இருந்தது.

குறிப்பிட்ட பஸ்ஸை ஒருவன் எதிர்பார்த்துக் காத்துக் கொண்டு நிற்கும்போது, அந்த பஸ் மெதுவாக அவன் அருகில் வந்து, நிற்காமலேயே போய்விடுகிறது. அதே சமயத்தில் வேருெரு 'ரூட்'டில் செல்லும் பஸ் ஒன்று அங்கே வந்து, அவனை அதில் ஏறிக்கொள்ளுமாறு கட்டாயப்படுத்திஞல் அவனுக்கு எப்படி இருக்கும்?

"சார்! எனக்குக் கலியாணம் நிச்சயமாகியிருக்கிறது; பத்து நாட்கள் லீவு வேண்டும்" என்ருன் சுந்தரம் முதலாளியிடம்.

"ரொம்ப சந்தோஷம்; எப்போ போகணும்? பத்து நாட்கள் லீவு வேணுமா அதுக்கு?"

"ஆமாம், சார்! அத்துடன் கலியாணப் பத்திரிகை பிரிண்ட் பண்ணணும்; நம்ம பிரஸ்லே......"

"நம்ம பிரஸ்லே வெறும் கம்போசிங்தான்; மிஷின் கிடைகாது. உனக்குத்தான் தெரியுமே! நம்ம வாடிக்கையா 'ஸ்டிரைக்' பண்ணிகிட்டு வருவோமே, 'காடிகாளு' பிரஸ்,

அவங்ககிட்டே கொண்டு போய்க் கொடு, செஞ்சு கொடுப் பாங்க?''

''ப...ண...ம்?''

''பணமா! நம்ம பத்திரிகை அச்சடிக்கவே எங்கிட்டே பணம் கிடையாது; கலியாணப் பத்திரிகை அச்சடிக்க நான் எங்கே போவேன் பணத்துக்கு? விளம்பரப் பணத்தை வசூல் பண்ணிக்கிட்டு வா; அப்புறம் பார்க்கலாம்.''

சுந்தரம் அந்தக் 'காடிகானு' பிரஸ்ஸுக்குப் போய்க் கலியாணப் பத்திரிகையை அச்சிடக் கொடுத்தான். அச்சுக் கூலியும் காகிதமும் சேர்ந்து ஐந்தேகால் ரூபாய் 'சார்ஜ்' செய்துவிட்டார்கள் அந்தப் பிரஸ்சில்.

அன்று மாலேயே அவன் மாங்குடிக்குப் புறப்பட்டான்.

**வே**தகோஷம் முழங்க, கெட்டி மேளம் ஒலிக்க, பெண் கள் மங்கள கீதம் இசைக்க, பெரியவர்கள் ஆசீர்வதிக்க, சுபயோக சுப வேளையில் காமுவின் கழுத்தில் மூன்று முடிச்சுக் களைப் போட்டான் சுந்தரம். அப்போதே அந்தப் பெண்ணின் அழகிய முகத்தையும் நன்ருகப் பார்த்துக் கொண்டான் அவன். குனிந்த தலே நிமிராமலேயே சுந்தரின் அழகிய வதனத்தை அடிக்கடி கடைக்கண்ணுல் கவனித்துக் கொண் டிருந்தாள் காமு. மணப்பந்தலில் கணவனின் கரம் பிடித்து உட்கார்ந்திருந்த அவளுடைய கரங்கள் கூறின.

''இன்று உங்கள் கை பிடித்த நான் இதைப் போலவே என்றென்றும் நம் இல்லற வாழ்க்கையில் ஏற்படக் கூடிய சுக துக்கங்களுக்கெல்லாம் கை கொடுப்பேன்.''

முகூர்த்தம் முடிந்து ஆசீர்வாதம் நடந்து கொண்டிருந் தது. மணமக்களுக்குப் பின்னுல் உட்கார்ந்திருந்த பெண்களின் கூட்டத்தில் ஒரே வேடிக்கையும் விளேயாட்டும் சந்தோஷ ஆரவாரமுமாக இருந்தன. எட்டு மணிக்கே வருவதாகக் கூறியிருந்த சர்மாவைக் காணுததால் கங்காதரய்யருக்கு

சதிலுமே மனம் ஓடவில்லை. வாசலுக்கும் உள்ளுக்குமாக அலைந்து கொண்டிருந்தார் அவர்.

"அதோ வந்து விட்டாரே சர்மா!" என்றது ஒரு குரல். அதைக் கேட்டபோதுதான் கங்காதரய்யரின் முகம் மலர்ந்தது "எங்கே?" என்று கேட்டுக்கொண்டே வாசலுக்கு விரைந்தார். இதற்குள் சர்மாவின் குதிரை வண்டி வாசலில் வந்து நின்றது.

"வாங்கோ, வாங்கோ! என்ன இப்படிச் செய்து விட்டீர்கள்?" என்றார் கங்காதரய்யர்.

"வழியில் குதிரை 'மக்கர்' செய்துவிட்டது!" என்றார் சர்மா. சகுந்தலாவும் குதிரை வண்டியிலிருந்து இறங்கி வருவதைக் கண்ட சுந்தரின் தாயார் பார்வதி அம்மாள், "வாடி அம்மா, வா! எங்கே வராமல் இருந்துவிடுவாயோன்னு நினைத்தேன்; நல்ல வேளை!" என்று அன்புடன் அவள் கைகளைப் பிடித்துப் பந்தலுக்குள் அழைத்துச் சென்றாள்.

"ஆசீர்வாதமெல்லாம் ஆகிவிட்டதா?" என்றார் சர்மா.

"நடந்துகொண்டே இருக்கிறது; நல்ல சமயத்தில் வந்தீர்கள்!" என்று சர்மாவை அழைத்துச் சென்றார் கங்காதரய்யர்.

திடுமென சகுந்தலாவைக் கண்டதும் சுந்தருக்கு ஒரு கணம் ஒன்றுமே தோன்றவில்லை.

அல்லி மலர் ஒன்று ஆடி வருவதுபோல் அழகாக நடந்து வந்தாள் சகுந்தலா.

'சகுந்தலாவா இவள்! எவ்வளவு அதிசயமாக, அழகாக மாறிப் போயிருக்கிறாள்!' சுந்தர் வியந்தான்.

சகுந்தலா கன்னங் குழியச் சிரித்தாள். அந்த மோகனச் சிரிப்பு அவன் உள்ளத்தை அசைத்துவிட்டது. ஆனாலும், 'இவளுடன் இனி எனக்கென்ன பேச்சு?' என்பதைப்போல் முகத்தை வேறு பக்கம் திருப்பிக் கொண்டான் சுந்தரம். சகுந்தலா வந்ததும் ஆயிரம் கேள்விகள் கேட்கவேண்டும்

என்று திட்டம் போட்டு வைத்திருந்தவன், இப்போது அவளை நேரில் கண்டதும் தன் ஆசைகளையெல்லாம் அடக்கிக் கொண்டவனாய் முகத்தைத் திருப்பிக் கொண்டான்.

ஆற்காட்டில் இருந்தபோது சகுந்தலாவின் இதயமும் சுந்தரைக் காணத் துடித்துக்கொண்டிருந்தது. இங்கே வந்த பிறகோ, பொய்க் கோபம் குறுக்கிட்டு, சுந்தருடன் பேசாமலே இருந்துவிட்டாள்.

பக்தர்கள் கோயிலுக்குச் செல்லுமுன் கடவுளைக் கண்ணாரக் கண்டு தரிசிக்க ஆசைப்படுகிறார்கள். கோயிலுக்குப் போன பிறகோ, ஆண்டவன் சந்நிதியில் போய் நின்று கொண்டு, பக்தி மேலீட்டால் கண்களை மூடிக்கொண்டு விடுகிறார்கள். ஒருவர் சந்நிதியில் ஒருவர் நின்ற சுந்தரும் சகுந்தலாவும் பக்தர்களின் நிலையிலேதான் இருந்தார்கள்!

சற்று நேரத்துக்கெல்லாம் மணப்பெண்ணுக்கும் மாப்பிள்ளைக்கும் முடிச்சுப் போடும் விளையாட்டில் ஈடுபட்டிருந்த பெண்கள் கோஷ்டியில் சகுந்தலாவும் சேர்ந்து கொண்டாள்.

சுந்தர் அவளைக் கவனிக்காததுபோல் இருந்தான். எல்லாம் முடிந்து, பெண்ணும் பிள்ளையும் மணையை விட்டு எழுந்து, திசைக்கு ஒருவராகச் சென்றபோது அந்தப் பெண்கள் எல்லோரும் கை தட்டிச் சிரித்துவிட்டார்கள். காரணம், சுந்தரும் காமுவும் எதிர் எதிராகப் போக முடியாதபடி இருவரையும் முடிச்சுப் போட்டுப் பிணைத்து விட்டிருந்தாள் சகுந்தலா!

"என்னுடன் முடிச்சுப் போட்டுக் கொண்டிருக்கவேண்டிய இவள் தப்பித்துக் கொண்டு, எனக்கும் காமுவுக்கும் முடிச்சுப் போடுகிறாளே?" என்று எண்ணிக் கொண்டான் சுந்தர்.

'இவள் வேறொருவனுக்குச் சொந்தமாகி விட்டபிறகு. நான் இன்னொருத்திக்கு உரிமையாகிவிட்ட பிறகு, இனி என்ன விளையாட்டு வேண்டியிருக்கிறது?'

சுந்தரும், அவன் கை பிடித்த காமுவும் சர்மாவை நமஸ்கரித்து எழுந்தார்கள். அப்போது சர்மாவுக்கு சுந்தரின் ஜாதகம் பற்றிய எண்ணம் தோன்றிவிடவே கண்களில் நீர் துளிர்த்துவிட்டது.

'தீர்க்க சுமங்கலீ பவ! தீர்க்காயுஷ்மான் பவ!' என்று மணமக்கள் இருவரையும் மனப்பூர்வமாக ஆசீர்வதித்தார் அவர்.

மணி மூன்று இருக்கும். கலியாண வீடு நிறையக் கூடத்திலும் தாழ்வாரத்திலும் பெண்கள் கூட்டம் ஆங்காங்கே அலங்காரம் செய்து கொள்வதில் ஈடுபட்டிருந்தன.

சுந்தரம் ஒரு மூலையில் போய் முடங்கியபடி அலுப்புத்தீர தூங்கிக் கொண்டிருந்தான். "டேய் சுந்தரம் எழுந்திருடா! நலங்குக்கு நாழியாகிறது. இந்தா காப்பி, இதைக் குடித்து விட்டுப் போய் முகம் அலம்பிக்கொண்டு வா!" என்று அவனைத் தட்டி எழுப்பினாள் பார்வதி அம்மாள்.

சுடச் சுட காப்பியை வாங்கிக் குடித்த பிறகுதான் சுந்தரத்துக்குத் தூக்க மயக்கம் தெளிந்தது. எழுந்து தோட்ட பக்கம் சென்றான். தட்டியினால் மறைத்துக் கட்டப்பட்டிருந்த குளியல்அறைக்குள் சென்றபோது, அங்கே சகுந்தலா கண்களை மூடிக்கொண்டு, முகம் நிறையப் பூத்திருந்த சோப்பு நுரையை கழுவிக் கொண்டிருந்தாள். சுந்தரைக் கண்டதும் வெட்கத்தினால் பதறிப்போய் வெளியே ஓட எத்தனித்தாள் அவள்.

"ஏன் ஓடறே, சகுந்தலா? உன்னை நான் விழுங்கிவிட மாட்டேன்!"

"என்னோடு நீ ஒண்ணும் பேச வேண்டாம், போ!" சகுந்தலா அவனைத் தாண்டிக்கொண்டு ஓடப் பார்த்தாள். சுந்தர் தன் கையிலிருந்த டவலால் அவளை வழி மறித்து, "உன்னைப் போகவிட மாட்டேன்!" என்று மடக்கினான்.

"என்ன விளையாட்டு இது! யாராவது பார்த்தால் ஏதாவது நினைச்சுக்க மாட்டா?"

"நினைக்கட்டும்; என்மீது உனக்கு என்ன கோபம் என்பதை சொன்னால்தான் விடுவேன்!"

"என் கலியாணத்துக்கு நீ ஏன் வரலே?"

"என்னை வரச்சொல்லி நீ லெட்டர் போடலையே!"

"தாத்தா போட்டிருப்பாரே?"

"நீ போட்டாயா?"

"எனக்கு உன் விலாசமே தெரியாதே! நான் எப்படிப் போடுவேன்?"

"உன் தாத்தாகிட்டே என் விலாசம் இருக்குமே?"

"தாத்தாவிடம் இருந்தால் அது எனக்கு எப்படிக் கிடைக்கும்?"

"விலாசம் வேணும்னு எப்படியும் கிடைக்கும்...ம்...என்னை மறந்துட்டேன்னு சொல்லு!"

"சுந்தர், உன்னை நான் மறக்கவே மாட்டேன். அது இந்தப் பிறவியில் முடியாத காரியம்...இதென்ன, பார்த்தாயா?"

"என் சோப்புப் பெட்டி; ஆற்காட்டில் நான் வைத்து விட்டு வந்தது. ஏன் அழறே, சகுந்தலா?...அழாதே! விதிப்படி தான் எதுவும் நடக்கும்....."

"சுந்தர்! எனக்கு வழி விடு; நான் போகிறேன்!" என்றாள் சகுந்தலா.

"ஏன் தடுமாடுகிறாய்? உன் உடம்பு ஏன் இப்படி நடுங்கு கிறது?" என்று கேட்டான் சுந்தரம்.

"எனக்கொன்றும் இல்லை; இது பாத்ரூம்; ஜாக்கிரதை, சறுக்கிவிடப் போகிறது!" என்று சிரித்துக்கொண்டே கூறி விட்டு ஓடிவிட்டாள் சகுந்தலா.

'பொல்லாத பெண்! இதுகூட ஆற்காட்டு வெந்நீர் அறை என்று நினைத்துக் கொண்டாளோ?' என்று எண்ணியவனாய் முகம் கழுவத் தொடங்கினான் அவன்.

சகுந்தலாவின் கூந்தலில் இருந்து வந்த தாழம்பூ வாசனை யும் மல்லிகையின் மணமும் அவனுக்கு இன்ப வேதனையை அளித்தன.

இராணிப்பேட்டை சந்தைத் திடலிலிருந்து ஒலிபெருக்கி மூலம் வந்துகொண்டிருந்த குரல் வேறு யாருடையதும் அல்ல; மலேயா சோமசுந்தரத்தின் குரல்தான்.

"தமிள் மொளி இனிய மொளி. அதனாலேதான் பாரதியார் "யாமறிந்த மொளிகளிலே தமிள் மொளி போல் இனிதாவ தெங்கும் காணோம்' என்று பாடினார்..."

மலேயா சோமசுந்தரத்தைத் தவிர, தமிழ் மொழியை இவ்வளவு 'அள' காக வேறு யாரால் பேச முடியும்?

பணத்தைப் பாலாற்றங்கரையில் மறந்து வைத்துவிட்டு வந்த சுந்தரத்துக்கு, அந்தக் குரல் ஆண்டவனுடைய குரலாகவே தோன்றியது. பழைய நிகழ்ச்சிகளின் எண்ணச் சுழலிலிருந்து விடுபட்ட அவன் உள்ளத்தில் இப்போது ஒரே எண்ணம்தான் குடிகொண்டிருந்தது.

கூட்டத்தை முண்டி அடித்துக்கொண்டு, மேடையருகே போய் நண்பனின் கண்ணில் படும்படியாக நின்றுகொண்டான் சுந்தரம். இவனைக் கண்டதுமே சோமசுந்தரம் புன்முறுவல் பூத்தான்.

'சோமசுந்தரம் தன்னைக் கவனிப்பானா? கவனித்தாலும் பேசுவானா?' என்று சந்தேகப்பட்டுக் கொண்டிருந்த சுந்தரத் துக்கு இது சற்று வியப்பையும் மகிழ்ச்சியையும் அளித்தது.

கூட்டம் முடிந்ததுதான் தாமதம். சோமசுந்தரம் ஆவலோடு சுந்தரரை அருகில் அழைத்து, "எப்போ வந்தீங்க? இங்கே எங்கே வந்தீங்க?" என்று கேட்டான்.

"கிராமத்திலேருந்து வரேன்...ஒலிபெருக்கியிலே உங்க குரல் கேட்டுது..."

“மெட்ராசுக்குத்தானே? என்னேடையே வந்துடுங்களேன். கார் போகுது!”

“ஆகட்டும்” என்ருன் சுந்தரம்.

வெகு நாட்களுக்குப் பிறகு சந்திக்கும் நண்பனிடம் எப்படி முதன் முதலில் பேசுவது? தன் நிலைமையை அவனிடம் எப்படி எடுத்துச் சொல்வது? என்று திகைத்துக் கொண்டிருந்த போது, நண்பனுகவே காரில் வரும்படி அழைத்ததும் சுந்தரத்துக்குப் பாதிக் கவலை தீர்ந்து போயிற்று.

கூட்டம் முடிந்ததும் சுந்தரையும் அழைத்துக்கொண்டு போய் சாப்பிட்டுவிட்டு, காரிலேயே சென்னைக்குப் புறப்பட்டான் மலேயா சோமு. காரில் மவுனமாக உட்கார்ந்திருந்த சுந்தர் ஆழ்ந்த சிந்தனையில் ஈடுபட்டிருந்தான்.

“என்ன சுந்தர், என்ன யோசிக்கிறீங்க? எதையோ பறிகொடுத்துட்ட மாதிரி உட்கார்ந்து இருக்கீங்களே?”

“ஆமாம்; பதினைந்து ரூபாயைப் பாலாற்றங்கரையில் மறந்து வைத்துவிட்டு வந்துவிட்டேன். இங்கே வந்த பிறகு தான் நினைவுக்கு வந்தது. என்ன செய்வதென்று புரியாமல் தவித்துக் கொண்டிருந்தபோதுதான் ஒலிபெருக்கியில் உங்கள் குரலைக் கேட்டேன்” என்ருன் சுந்தரம்.

“பதினைந்து ரூபாய்க்கா இப்படி கவலைப்படறீங்க? போனு போகுது; உங்களைப் போன்ற ஒரு ஆர்ட்டிஸ்ட்டுக்கு பதினைந்து ரூபாய் ஒரு பெரிசா? இப்படியும் அப்படியும் இரண்டு கோடுகளைப் போட்டால் படமாயிடுது!”

“படமாயிட்டாப் போதுமா? பணமாக வேண்டாமா?”

“படத்துக்கும் பணத்துக்கும் ஒரு எழுத்துத்தானே வித்தியாசம்? எழுத்துக்கு” “அடுத்த எழுத்து ‘ண’ தானே?”

“பணம் சம்பாதிப்பது இவ்வளவு சுருக்கத்திலா இருக்கிறது?” என்று வியப்புடன் கேட்டான் சுந்தரம்.

''ஏன் இல்லே? நீங்க படம் எழுதுங்க; நான் பணம்தரேன் நீங்கதான் பளய சிநேகத்தை வெட்டிக்கிட்டுப் போயிட்டீங்க. நான் அப்படி இல்லே! எப்பவும்ஒரே மாதிரிதான் இருக்கேன்!''

சுந்தரம் மவுனமாகவே நண்பனைப் பார்த்தான்.

''என்ன பார்க்கிறீங்க? பளசையெல்லாம் மறந்துடுங்க; அந்தக் காலம் வேறே! இப்ப முன் மாதிரியெல்லாம் இல்லே; செக் வெட்டிக்கிட்டே இருக்கேன். நீங்க மட்டும் சொன்ன டயத்திலே படத்தை எழுதிக் கொடுங்க; பணத்தை உடனே கொடுத்துடறேனு இல்லையா பாருங்கள்?''

''புதுப் புத்தகம் ஏதாவது வெளியிடப் போறீங்களா''

''ஆமாம்; ஆறு புத்தகங்களுக்கு அட்டைப் படம் போட்டுத் தருவீங்களா? அதுக்கு முன்னுலே உங்களுக்கு இன்னெரு அர்ஜண்ட் வேலை இருக்குது. நானே உங்க ரூமுக்கு ஆள் அனுப்பித் தேடினேன். நீங்க இப்போ நல்ல தம்பி தெருவில் இல்லையாமே?''

''ஆமாம், அந்த ரூமைக் காலி பண்ணிட்டேன். இப்போ நான் தமிழ் போதினி பத்திரிகையிலேயும் இல்லே...''

''அதுக்கென்ன ஆயிரம் இடம் இருக்குது; நீங்க மட்டும் எனக்கு......''

''என்ன செய்யணும்?''

''இன்னும் ரெண்டு மாசத்திலே, நான் ஒரு ஆர்ட் எக்சிபிஷன் நடத்தப் போறேன். அதுக்கு உங்க படம் வேணும். புத்தர், காந்தி, தாகூர், பாரதியார்—இவங்க படமெல்லாம் எழுதிக் கொடுத்தீங்கன்னு, எக்சிபிஷன்லே வைக்கலாம். உங்களுக்கு இருக்கிற புகளும் பேரும் அதனுலே இன்னும் அதிகமாகும்.''

''புகழும் பேரும் இருந்தாப் போதுமா? பொருள் வேணுமா?''

''கலைஞர்கள்கஷ்டப்படக் கூடாதுங்கறதுக்காகத்தானே முக்கியமா இப்படி ஒரு சித்திரக்காட்சி நடத்தறேன்?

தமிளனின் புகள் நாடெங்கும் பரவணும். அவங்க பெருமையை மக்கள் உணரணும்..உங்களுக்குச் சம்மதம்னு சொல்லுங்க, மாசச் சம்பளமாகவே கொடுத்துடறேன். நாளை யிலேருந்து நீங்க நம்ம ஆபீசிலேயே வேலை செய்யலாம்.''

''எவ்வளவு கொடுப்பீங்க?''

''நூறு ரூபாய் போதுமா?''

''இப்போதைக்குப் போதும். இரண்டு மாசத்துக்கெல் லாம் குடும்பத்தை அழைத்துக்கொண்டு வரலாம்னு இருக்கேன். அப்போ எனக்கு மொத்தமா முன்னூறு ரூபா வேணும்.''

''அவ்வளவுதானே? எக்சிபிஷன் முடியட்டும் முன்னூறு என்ன ஐந்நூறு தரேன்...இப்போ நாளைக்கே நூறு ரூபா அட்வான்ஸ் தரேன். புத்தர் படத்தை மட்டும் முதல்லே எழுதிடுங்க. அது கொஞ்சம் அவசரம்!'' என்றான் சோமு.

சுந்தர் சிரித்தான்.

''என்ன சிரிக்கிறீங்க?''

''இல்லே; திடீர்னு சித்திரக் கலையிலே இப்படி ஒரு அக்கறை வந்துட்டுதே உங்களுக்கு. அதை நினைச்சு சிரிச்சேன்!''

''இப்படித்தான் ரொம்பப் பேர் என்னைத் தப்பா நினைக்கி றாங்க. ஒரு மனுசன் கலையிலே ஆர்வம் காட்டறதிலே என்னய்யா தப்பு?''

''தப்பு ஒண்ணும் இல்லே; சோழியன் குடுமி சும்மா ஆடாதே!''

''நான் சோளியனுமில்லே, எனக்குக் குடுமியும் இல்லே!''

வேகமாக போய்க்கொண்டிருந்த கார் ஒரு டீக்கடையின் முன்னால் போய் நின்றது.

சுந்தரத்துக்குத் தூக்கம் கண்ணைச் சுழற்றியது.

''டீ சாப்பிடுறீங்களா?''

"வேணும்; நீங்க சாப்பிடுங்க!..." என்று கூறிவிட்டு கண்களை மூடியபடியே பழைய நினைவுகளில் லயித்துவிட்டான் சுந்தரம். அவன் மனக்கண்முன் பழைய நிகழ்ச்சிகள் நிழலாடின.

# 10

மூன்று ஆண்டுக்கு முன்னால் நடந்த நிகழ்ச்சிகள்—சுந்தரம் தமிழ் போதினி காரியாலயத்திலிருந்து தன்னுடைய அறைக்குத் திரும்பிக்கொண்டிருந்தபோது, வாலாஜா ரோடிலிருந்த 'வள்ளுவர் வாசக சாலை' என்ற புதிய போர்டு அவன் கண்ணில் பட்டது.

உள்ளே சென்று பார்த்தான். சிறிய வாசகசாலைதான்; ஆயினும் பார்ப்பதற்குக் கவர்ச்சிகரமாக இருந்தது. ஒரு மூலையில் மலேயா சோமசுந்தரம் உட்கார்ந்திருந்தான்.

சுந்தரம் அவனை முதன் முதலாகக் கண்டது அங்கே தான்.

"வாங்க, என்ன வேணும்?" என்று கேட்டான் மலேயா சோமு கணீரென்ற குரலில்.

"ஒன்றுமில்லை; வாசகசாலைன்னு போர்டு போட்டிருக்கவே பார்த்துட்டுப் போகலாம்னு வந்தேன். நீங்கதான் ஆரம்பிச்சிருக்கீங்களா?"

"ஆமாம்; தமிள் மொளியிலே எனக்கு ஒரு ஆர்வம். இத்தனை வருசமா நான் மலையாவிலே இருந்தேன், அங்கே எங்கப்பாருக்கு பெரிய எஸ்டேட் இருக்குது. எனக்கு அங்கே பொளுது போகல்லே. சொந்தமா ஏதாவது ஒரு தொளில் செய்யணும்னு ஆசைப்பட்டு மெட்ராசுக்கு வந்து இந்த வாசக சாலையை ஆரம்பிச்சிருக்கேன்...நீங்க யாரோ?"

"நான் ஒரு ஆர்ட்டிஸ்ட்; பத்திரிகைகளுக்கெல்லாம் படம் எழுதிக்கொண்டிருக்கிறேன்."

"பேரு?"

"சுந்தரம்."

"அடடே! நீங்கதானா சுந்தரம்? உட்காருங்க, இப்படி. என் பேர் சோமசுந்தரம். மலேயா சோமும்பாங்க. இரண்டு பேருக்கும் ஏறக்குறைய ஒரே பெயர்தான். 'தமிள் போதினி' அட்டைப் படமெல்லாம் எளுதறது நீங்கதானா? ரொம்ப நல்லாருக்குது. போன அட்டையிலே ஒரு பெண் ஈர உடையோடு இடுப்பிலே குடத்துடன் ஆற்றங்கரையிலே நிற்கிறாப் போல எளுதியிருக்கீங்களே, அந்தப் பெண் ரொம்ப அளகா இருக்காளே?"

அவன் சித்திரக்கலையை ரசிக்கிறானா? அல்லது பெண்ணின் அழகை ரசிக்கிறானா? என்று புரியவில்லை சுந்தரத்துக்கு.

"நீங்க ஏன் புத்தகங்கள் பிரசுரிக்கக் கூடாது?"

"பிரசுர லாயம் ஆரம்பிக்கச் சொல்றீங்களா? ஏன்... சிரிக்கிறீங்க? தமாஷாப் பேசறேனேன்னு பார்க்கிறீங்களா? குதிரை லாயம் மாதிரி ஒரு சின்ன இடத்தைப் பிடிச்சு; அதுக்கு பிரசுரலாயம்னு போர்டு போட்டுடறாங்களே? அதனாலேதான் பிரசுரலாயம்னு சொன்னேன்!"

"நீங்களும் அப்படி ஒரு லாயத்தை ஆரம்பிச்சுடுங்களேன்?"

"ஆரம்பிக்கத்தான் போறேன். நீங்கள் அட்டைப் படம் எழுதித் தருவீங்களா?"

"சந்தோஷமா எழுதித் தரேன்."

"அதிகமாப் பணம் கொடுக்க முடியாது. புத்தகம் எளுதற ஆசிரியருக்கே நான் பணம் கொடுக்கப் போறதில்லே..."

"அப்படி எந்த ஆசிரியர் உங்களுக்குப் பணம் இல்லாமல் எழுதிக் கொடுப்பார்?"

"வள்ளுவர், இளங்கோ, கம்பன்—இப்படி எத்தனை ஆசிரியருங்க இல்லெ?"

"அவங்களெல்லாம் உயிரோடு இல்லையே?"

"அதனாலேதான் அவங்களைப் புடிச்சிக்கிட்டேன். செத்துப்போன ஆசிரியர்கள் எழுதினதைப் புத்தகமாப் போட்டால் பணம் கொடுக்க வேண்டாம், பாருங்க...ஆனா உங்களுக்குத் தரேன்!"

"உயிரோடு இருக்கிற ஆசிரியர் புத்தகத்தை வெளியிட்டு, அவங்களுக்குப் பணம் கொடுக்காமல் சாகடிக்கிறதை விட இது மேல்தான்!"

"நான் அப்படிச் செய்ய மாட்டேன்!"

"எவ்வளவு பணம் கொடுப்பீங்க?"

"ஒரு அட்டைக்குப் பத்து ரூபா கொடுப்பேன்; சேர்ந்தாப் போல ஆறு புத்தகங்களைப் போடப் போகிறேன். ஆறுக்கும் நீங்களே படம் போட்டுக் கொடுங்க. அறுபது ரூபா கொடுத்துடறேன்...இந்தாங்க, அட்வான்ஸ் பத்து ரூபா...நீங்க எங்கே இருக்கீங்க?"

"நல்ல தம்பித் தெருவிலே!"

"ரொம்பக் கிட்டத்திலேதான். சவுகரியமாகப் போச்சு, ஒரு மாசத்துக்குள்ளே எழுதி முடிச்சுடுவீங்களா?"

"முடிச்சுடறேன்!"

சொன்னபடி இருபதே நாட்களில் ஆறு படங்களையும் எழுதிக் கொண்டு போனான் சுந்தரம்.

அந்தப் படங்களைப் பார்த்துவிட்டு 'அபாரம்!' என்று புகழ்ந்தான் மலேயா சோமு. அப்படிப் புகழ்ந்த உடனே பணம் கேட்க மனம் வரவில்லை சுந்தரத்துக்கு. பேசாமல் எழுந்து போய்விட்டான். அப்புறம் இரண்டு மாதம் பணத்துக்காக அலைந்தான். பணம் கொடுக்கும் விஷயத்தில் 'தமிழ் போதினி' முதலாளியையே மிஞ்சி விட்டான் மலேயா சோமு!

"ஏனயா, மலேயாவிலிருந்து நீ தமிழை வளர்க்க வந்திருக்கயா வயிறு வளர்க்க வந்திருக்கயா?" என்று கேட்டு விட்டுக் கோபமாகத் திரும்பிப் போய்விட்டான் சுந்தரம். அன்று போனவன்தான். அப்புறம் அந்தப் பக்கமே திரும்ப வில்லை.

இப்போது மூன்று வருடங்களுக்குப் பிறகு, இராணிப் பேட்டைத் திடலில், மீண்டும் அதே சோமுவிடம் போய் நிற்க வேண்டிய நிலைமை ஏற்பட்டு விட்டதே!

அலமாரியில் உள்ள புத்தகங்களையெல்லாம் தாறு மாறாகத் தள்ளித் தள்ளி எதையோ தேடிக் கொண்டிருந்தான் சுந்தரம். அப்போது அவன் தேடாத பொருள் ஒன்று அவனுடைய கையில் சிக்கியது. நான்கு மாதங்களுக்கு முன் அவன் மனைவி எழுதிய கடிதம் அது. அந்தக் கடிதத்தை மறுபடியும் படித்துப் பார்க்க வேண்டும்போல் ஓர் எண்ணம் உதிக்கவே, பிரித்துப் படித்தான்:

"நமஸ்காரம். தங்கள் கடிதம் கிடைத்தது. அதைப் படித்தபோது நான் மிகவும் வருத்தம் அடைந்தேன். நம் குழந்தைக்கு ஆசீர்வாதமாகக் கிடைத்த பதினைந்து ரூபாயைக் கொண்டு அவனுக்கு ஒரு வெள்ளி அரைஞாண் செய்து போட வேண்டும் என்று ஆசையாயிருந்தேன். ஆயினும் தங்களுடைய கஷ்டத்துக்கு உதவுவதைக் காட்டிலும் வெள்ளி அரைஞாண் முக்கியம் அல்ல என்று கருதி, அந்தப் பணத்தைத் தங்களிடம் கொடுத்து, ஓட்டலில் சாப்பாட்டுப் புத்தகம் வாங்கிக் கொள்ளும்படி சொன்னேன். தாங்களோ அதைப் பாலாற்றங் கரையில் மறந்து வைத்து விட்டுப்போய் விட்டதாக எழுதி யிருக்கிறீர்கள். பணத்தை மறக்கும் அளவுக்கு அப்படிப்பட்ட யோசனை என்னவோ? நல்ல வேளையாகக் கடவுள் ரொம்பவும் சோதிக்காமல் உடனே தங்களுக்கு ஒரு நல்வழி காட்டி விட்டார். வேலை கிடைத்தது பற்றி மிகவும் மகிழ்ச்சி. எப்போது என்னைச் சென்னைக்கு அழைத்துச் செல்லப் போகிறீர்கள்? தங்களைப் பிரிந்து எத்தனை காலம் தனியாக

வாழவேண்டுமோ? இந்தக் கிராமத்துப் பீடைகள் என்னை ஓயாமல் நச்சரித்துக் கொண்டு இருக்கின்றன.

சீக்கிரமே ஒரு சின்ன இடமாகப் பார்த்துக் குடித்தனம் வைப்பதற்கு ஏற்பாடு செய்யுங்கள். பட்டினி கிடந்தாலும் கட்டிய புருஷனோடு வாழ்வதைத்தான் ஒரு பெண் சொர்க்க மாகக் கருதுவாள். தங்கள் பதிலை ஆவலோடு எதிர்பார்க் கிறேன்.

இப்படிக்கு,
காமு.''

சுந்தரம் வேலைக்கு அமர்ந்து ஆறு மாதம் ஆகிவிட்டது.

சித்திரக் கண்காட்சி முடிந்த உடன் ஐந்நூறு ரூபாய் பணம் கொடுப்பதாகக் கூறியிருந்த மலேயா சோமு இப்போது அந்தப் பேச்சையே எடுப்பதில்லை. மாதம் நூறு ரூபாய் சம்பளம் தருவதாகச் சொன்னதுகூட வெறும் பசப்பு வார்த்தைகள்தான். வேலைக்குச் சேர்ந்தபோது முன் பணமாக நூறு ரூபாய் கொடுத்தானே, அவ்வளவுதான். அப்புறம் சுந்தரம் முழுசாகப் பத்து ரூபாய்க்கு மேல் பார்க்கவேயில்லை.

எத்தனையோ முறை கேட்டுக் கேட்டுச் சலித்துவிட்ட அவன் கடைசியில் பொறுமை இழந்தவனாய், "நூறு ரூபாய் சம்பளம் தருவதாகச் சொன்னீங்க, எக்சிபிஷன் முடிஞ்சதும் ஐந்நூறு ரூபாய் தருவதாகச் சொன்னீங்க. இப்போது இப்படி செய்யறீங்களே, இது நியாயமா?'' என்று ஒரு நாள் கேட்டு விட்டான்.

"புத்தக வியாபாரம் 'டல்'லாயிருக்குதே, பார்த்துக் கிட்டுத்தானே இருக்கீங்க. எப்படி மொத்தமாகச் சம்பளத்தைக் கொடுக்க முடியும்? அட்ஜஸ்ட் பண்ணிக் கொஞ்சம் கொஞ்சமா வாங்கிக்குங்க'' என்றான் மலேயா சோமு.

"இந்த மாசம் குடித்தனம் வைக்கலாம்னு இருக்கேன். வாடகைக்கு வீடு கூடப் பார்த்தாயிற்று. அதுக்கு இரண்டு

மாசம் வாடகை அட்வான்ஸ் கொடுக்கணும். இந்தச் சமயம் நீங்க மொத்தமாகக் கொடுப்பதாய்ச் சொன்ன பணத்தைக் கொடுத்தீங்கன்னு ரொம்ப உதவியாயிருக்கும்.''

''எக்சிபிஷன் நடத்தினதிலே என் கைவிட்டு எளுபது என்பேது ரூபா போச்சு. அதனாலே எனக்கு ஒரு லாபமும் இல்லே. புகளெல்லாம் உங்களுக்குத்தான். அதிலே எனக்கு மகிள்ச்சிதான்!'' என்றான் சோமு.

''எனக்குக் கொடுக்க வேண்டிய சம்பள பாக்கியையாவது கொடுங்களேன்?''

''வியாளக்கிளமை ஆவட்டும், ஏதாச்சும் பார்க்கலாம்'' என்றான் சோமு.

கல்லில் நார் உரிப்பதைக் காட்டிலும் கடினமான காரியம் ஒன்று உண்டென்றால் அது மலேயா சோமசுந்தரத்தினிடம் பணம் வாங்குவதுதான்.

'வியாளக்கிளமை'கள் நாலைந்து வந்து போயின. சுந்தரமும் பணம் கேட்டுக் கொண்டுதான் இருந்தான். சோமு மட்டும் 'விளாக்கிளமை', சுந்தரம் இரண்டு பேருக்குமே 'டிமிக்கி' கொடுத்துக் கேட்டபோது, நூறு ரூபாய் கைக்கு வந்தது. அதை வாங்குவதற்குள் சுந்தரத்தின் பாடு பெரும் பாடாகிவிட்டது!

மறுதினமே வீட்டுக்கு அட்வான்ஸ் கொடுத்துவிட்டு, காமுவைப் புறப்பட்டு வரும்படி கிராமத்துக்குக் கடிதமும் எழுதிவிட்டான்.

அடுத்த வாரமே கைக்குழந்தையோடு தன் அப்பாவைத் துணைக்கு அழைத்துக் கொண்டு சென்னைக்கு வந்து சேர்ந்தாள் காமு. சுந்தரத்தின் மாமனார் ஒரு வாரகாலம் பட்டணத்தில் தங்கிப் புதுக்குடித்தனத்துக்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து ஒழுங்குபடுத்திய பிறகே கிராமத்திற்குத் திரும்பிப் போனார்.

எப்படியோ ஒரு வழியாகச் சென்னைக்கு வந்து சேர்ந்தாள் காமு. அதில் அவளுக்கு அளவு கடந்த மகிழ்ச்சி; சொர்க்கத் துக்கே வந்து விட்டது போன்ற திருப்தி!

'இனி எந்தக் கஷ்டம் வந்தபோதிலும் கணவனை விட்டுப் பிரிவதில்லை' என்று உறுதி பூண்டாள் அவள்.

ஆபீஸ் அறையில் உட்கார்ந்து சித்திரம் வரைந்து கொண்டிருந்த சுந்தரத்தை அழைத்தான் சோமு. சுந்தரம் எதிரில் போய் நின்றதும், "காஞ்சீபுரத்திலே ஒரு கலியாணமாம். போயிட்டு சாயந்திரம் திரும்பி வந்துடுறேன். அதுவரைக்கும் கொஞ்சம் ஆபீசைக் கவனிச்சுக்கிறீங்களா?" என்று கேட்டான்.

"போயிட்டு வாங்களேன், குடும்பத்தோடு போறீங்களா?" என்று கேட்டான் சுந்தரம்.

"ஆமாம்; கலியாணத்தைச் செஞ்சுக்கிட்டது பெரிய சள்ளையாயிருக்கு. அங்கிட்டு வா, இங்கிட்டுவான்னு உயிரை எடுத்துடுறாங்களே!" என்றான் சோமு.

"ஏன் இப்படி சலிச்சுக்கிறீங்க? குடும்பம்னா அப்படித்தான் மனைவியோடு சந்தோஷமாப் போயிட்டு வாங்க!" என்றான் சுந்தரம்.

"மனைவியோடு போறப்போ சந்தோஷம் எப்படி ஐயா இருக்க முடியும்?" என்று மேலும் சலித்துக்கொண்டே புறப் பட்டான் சோமு.

மதியம் சுந்தரம் வீட்டுக்கு சாப்பிட வந்தபோது அவன் மனைவி குழந்தையைத் தன் மடியிலே கிடத்திக் கொண்டு சோகமே உருவாய் உட்கார்ந்திருந்தாள். அதைக் கண்ட சுந்தரம் பதறிப்போய், "என்ன காமு! குழந்தைக்கு என்ன?" என்றான்.

"காலையிலிருந்தே நல்ல ஜுரம்; உடம்பு அனலாய்க் கொதிக்கிறது. கண்ணைத் திறக்காமல் படுத்துக் கொண்டிருக் கிறது!" என்றாள் அவன் மனைவி.

அவன் குழந்தையைத் தொட்டுப் பார்த்தான். அதன் உடம்பு நெருப்பாகச் சுட்டுக் கொண்டிருந்தது. குழந்தைக்கு வைத்தியம் செய்யக்கூடத் தனக்குச் சக்தி இல்லையே என்பதை எண்ணியபோது அவனுக்கு வாழ்க்கையின் மீதே வெறுப்புத் தோன்றியது.

"ஆபீசிலிருந்து பணம் வாங்கி வந்திருக்கிறீர்களா?" என்று அவன் மனைவி கேட்டபோது, "இல்லை, அவன் ஊருக்குப் போயிருக்கிறான்" என்றான் சுந்தரம்.

"அப்படியானால் இப்போது பணத்துக்கு என்ன செய்ய போகிறீர்கள்? இந்தச் சமயத்தில் நமக்கு யார் உதவப் போகிறார்கள்?" என்றாள் காமு.

"அதுதான் எனக்கும் புரியவில்லை" என்று கூறிய சுந்தரம் ஒன்றும் தோன்றாதவனாக உள்ளம் குழம்பியவனாகத் தவித்துக் கொண்டிருந்தான்.

இருந்த நகை நட்டுகளையெல்லாம் விற்று இரண்டு மாதம் ஓட்டியாயிற்று. வாழ்க்கைச் சக்கரம் உருளாமல் ஸ்தம்பித்து நின்றுவிடும் நிலைக்கு வந்துவிட்ட இந்த நேரத்தில் சோதனை யாக குழந்தைக்கு ஜுரம் கண்டிருக்கிறது! மருந்து வாங்கக் கூட கதியற்ற நிலையில், பரிதாபமான கோலத்தில் தத்தளித்து கொண்டிருந்தான் அவன்.

அப்போது கூடத்து அலமாரியில் அருந்த கம்ப ராமாயண புத்தகம் அவன் கண்ணில் பட்டது. 'கஷ்டம் வரும்போது கம்ப ராமாயணத்தைப் எடுத்துப் படி' என்று சர்மா சொன்ன வார்த்தை அவன் நினைவுக்கு வந்தது. அந்தக் கம்ப ராமா யணத்தை எடுத்து அதன் முதல் பக்கத்தில் இருந்த 'விலை ரூபாய் பதினைந்து' என்ற வரியைப் படித்தான்.

அதைக் கண்டதும் 'இந்தக் கம்ப ராமாயணத்தையே விற்று விட்டால் என்ன?' என்று ஒரு யோசனை பளிச்சிடவே, அடுத்த கணமே அந்தப் புத்தகத்தைக் கையில் எடுத்துக் கொண்டு வெளியே புறப்பட்டான்.

"ராமாயணத்தை எங்கே எடுத்துக்கொண்டு போகிறீர்கள்? சர்மா கொடுத்ததல்லவா அது?'' என்று கேட்டாள் காமு.

"மூர்மார்க்கெட்டில் கொண்டுபோய் விற்றுப் பணம் கொண்டு வருகிறேன். வேறு கதியே இல்லை'' என்று கூறிவிட்டு போனான் சுந்தரம்.

அந்தக் கஷ்ட காலத்திலும் சர்மா கொடுத்த கம்ப ராமாயணமே அவனுக்கு உதவியது. அதை விற்றதில் பன்னிரண்டு ரூபாய் கைக்குக் கிடைத்தது! திரும்பி வரும் போது கையோடு டாக்டரை அழைத்துக்கொண்டு வந்தான். குழந்தைக்கு இரண்டு இஞ்செக்ஷனைப் போட்டார் டாக்டர். புத்தகம் விற்ற பணத்தில் மருந்துக்கும் டாக்டர் பீஸுக்கு மாகச் சேர்த்து பத்து ரூபாய் தீர்ந்துவிட்டது. ஆயினும் குழந்தைக்குக் குணம் காணவில்லை.

"சாயந்திரம் வந்து இன்னொரு இஞ்செக்ஷன் போடுகிறேன் வேறொரு மருந்து எழுதித் தருகிறேன். அதை வாங்கி வையுங் கள்'' என்று கூறிய டாக்டர் அந்த மருந்தின் பெயரைச் சீட்டில் எழுதிக் கொடுத்துவிட்டுப் போனார். அப்போது அவன் கையில் மிஞ்சியிருந்தது இரண்டே ரூபாய்! மருந்து வாங்க அந்தப் பணம் போதாதே!

"உங்கள் நண்பர் வந்திருப்பாரா? ஆபீசில் போய்க் கேட்டு பாருங்கள். குழந்தைக்கு ஆபத்தான இந்தச் சமயத்தில்கூடவா உதவி செய்யமாட்டார், உங்கள் நண்பர்?'' என்றாள் மனைவி.

"அவன் சங்கதி உனக்குத் தெரியாது. வள்ளுவர் பெயரை வைத்துக்கொண்டு ஊரையே ஏமாற்றிக் கொண்டிருக்கிறான் அந்த மோசக்காரன். காரியம் ஆகிறவரை எனக்கு உதவி செய்வதுபோல் பாசாங்கு செய்து கொண்டிருந்தான். இனி அவன் ஒரு தம்படி கொடுக்க மாட்டான்......''

"எதற்கும் நீங்கள்போய்க் கேட்டுப் பாருங்கள்...'' என்று அவன் மனைவி பிடிவாதமாகக் கூறவே, சுந்தரம் தயக்கத்துடன் புறப்பட்டுச் சென்றான்.

அப்போதுதான் காஞ்சிபுரத்தில் இருந்து திரும்பியிருந்த சோமு, சுந்தரத்தைக் கண்டதும் "என்னய்யா, ஆளேயே காணுேமே, எங்கே போயிருந்தீங்க?" என்று கேட்டான்.

"குழந்தைக்கு ஜுரம்..."

"காய்ச்சலா? என்ன காய்ச்சல்?"

"வயிற்றிலே கட்டி. அதுக்கு வைத்தியம் செய்ய வசதியில்லே. இப்போது கட்டி முற்றிக் காய்ச்சலிலே கொண்டுவந்து விட்டிருக்கிறது. ரொம்ப சீரியஸாக இருக்கிறது. இந்தச்சமயம் நீங்க பண உதவி செய்தால் ஒரு குழந்தையின் உயிரைக் காப்பாற்றிய புண்ணியம் உங்களுக்கு உண்டு..." என்று கூறினுன் சுந்தரம்.

"செய்யலாம்; ஆனுல் வி. பி. பணம், மணியார்டர் ஒருஎளவும் வரலேயே இன்னைக்கு. நாளைக்கு ஆகட்டும் பார்க்கலாம்" என்ருன் சோமு.

உணர்ச்சி அலைகள் உடல் முழுதும் ஊடுருவிப் பாய, கலங்கிய உள்ளத்தோடு, கவலை தோய்ந்த முகத்துடன், கண்களில் நீர் தளும்ப வீட்டுக்குத் திரும்பி நடந்தான் சுந்தரம். அவன் உள்ளம் நொந்து உடல் குன்றிக் கிடந்தது. வீட்டுக்குள் நுழைந்தபோது அங்கே அவன் மனைவி குலுங்கிக் கதறிக் கொண்டிருப்பதைக் கண்டான்.

"ஐயோ, குழந்தைக்கு என்ன?..."

"அப்பா, பாப்பா செத்துப் போச்சி." விக்கியபடியே கூறினுள் சுந்தரத்தின் தலைச்சன் குழந்தை சாரதா.

"காமு!..." என அலறிவிட்டான் சுந்தரம்.

அவள் ஒன்றுமே பேசவில்லை. உதடுகள் குவிந்து துடிக்க, கண்ணீர் பெருக்கெடுத்தோட கணவனை ஏறிட்டுப் பார்த்தாள். துக்கம் அவள் வயிற்றைக் கடைந்து கொண்டிருந்தது. இதற்குள் அக்கம் பக்கத்திலுள்ளவர்கள் விஷயம் தெரிந்து கொண்டு வாசலில் வந்து கூடிவிட்டார்கள்.

''...ம்...கொடுத்து வைத்தது அவ்வளவுதான்; மேலே ஆக வேண்டிய காரியத்தைப் பாருங்கள்...'' என்றார் அவர்களில் ஒருவர்.

'மேலே ஆக வேண்டிய காரியமா? ஐயோ, கையில் காலணா இல்லையே! இப்படியும் ஒரு சோதனையா?' சுந்தரத்தின் இதயம் விம்மி வெடித்துவிடும் போலிருந்தது. துடியாய்த் துடித்துப் போனான் அவன்.

''சார், இப்படிக் கொஞ்சம் வருகிறீர்களா?'' என்று அழைத்தார் பக்கத்து வீட்டுக்காரர். முதல் நாள்தான் அடுத்த வீட்டுக்குக் குடி வந்திருந்தார் அவர். தவிக்கும் சுந்தரத்தின் பரிதாப நிலையை ஊகித்துக் கொண்ட அவர், ''சார், கையில் பணம் இருக்கிறதா? இல்லையென்றால் நான் தருகிறேன். இந்தாருங்கள் பதினைந்து ரூபாய்...போதுமா இது? இந்தப் பணம் ஒரு நாள் எனக்குப் பாலாற்றங்கரையில் கிடைத்தது. யாரோ பாவம், பையோடு மறந்துவிட்டுப் போயிருக்கிறார்கள். என்ன செய்வதென்று தெரியாமல் இத்தனை நாளும் இதைப் பத்திரமாகக் காப்பாற்றி வைத்திருந்தேன்'' என்று கூறிய அவர் இரண்டு ஐந்து ரூபாய் நோட்டுக்களையும் ஐந்து ஒற்றை ரூபாய் நாணயங்களையும் சுந்தரிடம் கொடுத்தார்.

அவர் கொடுத்த அந்தப் பதினைந்து ரூபாயைக் கையில் வாங்கிக்கொண்ட சுந்தருக்குத் துக்கம் தொண்டையைப் பொத்துக்கொண்டு வெளிப்பட்டது.

''ஏன் சார் அழுகிறீர்கள்? நடந்தது நடந்து விட்டது...ம் ஆக வேண்டியதைப் பாருங்கள்'' என்றார் அடுத்த வீட்டுக் காரர்.

''இந்தப் பணம் என்னுடைய குழந்தையினுடையதுதான் சார். அவன் பிறந்த தினத்துக்கு ஆசிர்வாதமாகக் கிடைத்த பணம். குழந்தைக்கு வெள்ளி அரைஞாண் வாங்கிப் போட வேண்டும் என்று அதன் தாயார் ஆசையோடு வைத்திருந்தாள் நான்தான் அதை வாங்கிவந்து பையோடு பாலாற்றங்கரைப் பிள்ளையார் கோயில் எதிரில் மறந்து வைத்துவிட்டேன். அரை

ஞாண் போட்டுக்கொள்ளக் கொடுத்து வைக்காத அந்தக் குழந்தையின் பணம் அதன் அந்திமக் காரியத்துக்குப் பயன் பட்டது. அந்தப் பணம் இப்படித்தான் உபயோகப்பட வேண்டும் போலிருக்கிறது. அந்த விநாயகர்தான் இப்படி உங்கள் மூலம் கொடுத்தனுப்பி இருக்கிறார்'' என்று கூறிக் குலுங்கினான் சுந்தரம்.

# 11

இந்தியாவின் கிழக்குவாசலை யுத்த அபாயம் நெருங்கி வந்து கொண்டிருந்தது. குண்டு வீச்சுக்கு அஞ்சிச் சென்னைநகர் மக்களில் பெரும் பகுதியினர் தங்கள் குடும்பத்துடன் சொந்தக் கிராமங்களுக்கும் சுற்றுப்புற பகுதிகளுக்கும் குடியேறிக் கொண்டிருந்தனர். அவர்களில் சுந்தரமும் ஒருவன். தான் குடியிருக்கும் வீட்டைக் காலி செய்துவிட்டுத் தன்னுடைய மனைவியையும், மகள் சாரதாவையும் பழையபடியே கிராமத்தில் கொண்டு விட்டுவிட முடிவு செய்தான் அவன். ஆனால், ஜப்பான்காரனுடைய குண்டுக்குப் பயந்து அல்ல; வாழ வசதியில்லாமல் வாழ்க்கைச் சக்கரம் சுழல மறுத்து விட்டதால்!

''ஏன்? குண்டுக்குப் பயந்து கொண்டா? என் தலை மீதே குண்டு விழுந்தாலும் பரவாயில்லை. நான் பட்டணத்தைவிட்டு அசையப் போவதில்லை...'' என்றாள், காமு.

''காமு! உன்னை ஊரில் கொண்டுபோய் விடுவதற்கு எனக்கும் இஷ்டமில்லைதான்; ஆனால் சந்தர்ப்பம் இப்படி நமக்கு எதிராகச் சதி செய்கிறதே? வீட்டைக் காலி செய்வதைத் தவிர வேறு வழியே இல்லையே!''

''என்னை ஊரில் கொண்டு தள்ளிவிட்டு நீங்கள் மட்டும் இங்கே இருக்கப் போகிறீர்களா? அது முடியாது. யுத்த பயம் உங்களுக்கு மட்டும் இல்லையா?''

''குண்டுக்கு அஞ்சி உன்னை ஊருக்கு அனுப்பவில்லை காமு! உத்தியோகம் இல்லாததால்தான் அனுப்புகிறேன்.''

ஜப்பான் குண்டே தன் தலையில் விழுந்தது மாதிரி இருந்தது அவளுக்கு.

''உத்தியோகம் இல்லையா! வள்ளுவர் ஆபீஸ் உத்தியோகம்?...''

''அதை விட்டு இருபது நாள் ஆகிறது. சோமுக்கும் எனக்கும் கொஞ்சம் தகராறு...அவனுடைய சகவாசம் எனக்குப் பிடிக்கவில்லை...''

''அவன் எப்படியோ இருந்து விட்டுப் போகிறான். அதைப் பற்றி உங்களுக்கென்ன? எந்த ஆபீசுக்குப் போனாலும் இப்படி ஏதாவது சண்டை பிடித்துக்கொண்டு வேலையை விடுவது உங்களுக்கு விளையாட்டாக இருக்கிறது.''

''சம்பளமே கிடைக்காத இந்த வேலை போய்விட்டதே என்று யாராவது வருத்தப்படுவார்களா?''

''என்ன வந்தாலும் சரி; நான் ஊருக்குப் போகப் போவதில்லை. மீண்டும் அந்தக் கிராமத்துப் பீடைகள் கேட்கும் கேள்விக்கெல்லாம் என்னால் பதில் சொல்லிக் கொண்டிருக்க முடியாது. அதைக் காட்டிலும் இங்கேயே செத்து மடிந்து போகிறேன்.''

''உன்னுடைய நிலைமை எனக்குப் புரிகிறது. ஆனால் என் நிலைமையை அறிந்துகொள்ளத்தான் உனக்குச் சக்தியில்லை.''

''ஊரார் கேட்டால் நான் என்ன பதில் சொல்வேன்?''

''எல்லோரையும்போல் பட்டணத்தைக் காலி செய்து வந்து விட்டதாகச் சொல்லு. சீக்கிரமே ஒரு வேலை தேடிக் கொண்டு உன்னைத் திரும்ப அழைத்துக் கொள்கிறேன்.''

''...ம்...அந்தக் காலம் எப்போதோ?'' நம்பிக்கையின்றி, உணர்ச்சியின்றி நிராசையோடு ஒலித்தது அவள் குரல்.

"ஏன் அவ்வளவு அவநம்பிக்கையோடு பேசுகிறாய்? காலம் இப்படியே போய் விடாது. 'நாளை' என்ற நம்பிக்கையில்தான் உலகமே இயங்கிக் கொண்டிருக்கிறது. தீபம் அணையும்போது திரியே தீர்ந்து விட்டது என்று நாம் ஏன் எண்ணவேண்டும்? காற்றடிக்கும் போதோ, அல்லது எண்ணெய் வற்றிவிடும் போதோ கூட விளக்கு அணையலாம். ஆனால் அணைந்து போகும் விளக்கு மீண்டும் ஏற்றப்படும் என்ற நம்பிக்கை வேண்டும். அந்தப் பொறுப்பு விளக்கேற்றி வைப்பவனுடையது. நாளைக்கே நம் வாழ்விலும் ஒளி வீசாமல் போகாது. இப்போதைக்கு எண்ணெய் ஆகிவிட்டது; அவ்வளவுதான்" என்றான் சுந்தரம்.

"கைக்குழந்தையுடன் வந்தேன். இப்போது அதையும் பறிகொடுத்து விட்டு, உங்களையும்பிரிந்து எப்படிச் செல்வேன்? என்று கூறும் போதே துக்கம் அவள் தொண்டையை அடைத்துக்கொண்டது. அவள் கண்களில் தேங்கிய துயரம் உதடுகளில் இறங்கி நெளிந்தது.

காமுவின் வார்த்தைகள் சுந்தரத்தின் இதயத்தைப் பிளந்தன.

மறுநாளே, வீட்டு வாடகையைக் கொடுத்துக் கணக்குத் தீர்த்துவிட்டு, காமுவை அழைத்துக்கொண்டு போய் ஊரில் விட்டவன், அடுத்த நாள் பொழுது விடியுமுன்னரே பட்டணத்துக்குக் கிளம்பி விட்டான்.

திரும்பி வந்தது முதல் சுந்தரின் மனம் ஒரு நிலையில் இல்லாமல் அலைந்து கொண்டிருந்தது. தனிமை எனும் கொடுமையை அவனால் தாங்க முடியவில்லை.

உலகமே தன்னைத் தனியாக ஒதுக்கிவிட்டு வேடிக்கை பார்ப்பது போலிருந்தது அவனுக்கு. பட்டணத்தில் வசிக்கும் அவ்வளவு பேரும் ஒன்றாகக்கூடி உல்லாசமாக வாழ்வது போலவும், தான்மட்டும் தனியாகப் பிரிந்து ஏகாங்கியாயிருப்பது போலவும் உணர்ந்தான். தனித்தனி மனிதர்களாக வந்து

ஒன்ருகக் கூடி வாழ்வதுதான் நகர வாழ்க்கை என்பதை அவன் அறியவில்லை.

இரவு நேரங்களில் அவன் மொட்டை மாடியில் படுத்த வண்ணம் ஆகாயத்திலுள்ள நட்சத்திரக் கூட்டங்களை வெறிக்கப் பார்த்துக் கொண்டிருந்தான். நீலவானத்தில் கொத்துக் கொத்தாகப் பூத்துச் சிரிக்கும் அந்த வைர மலர்கள் சுந்தரத்தை நோக்கித் 'தனிமை தனிமை' என்று கண் சிமிட்டிக் கேலி செய்தன.

காமு அவன் எதிரில் தோன்றி 'என்னையும் தனிமையாக்கி விட்டு நீங்களும் ஏன் கஷ்டப்படுகிறீர்கள்?'' என்று கண்ணீர் உகுத்தாள். சுந்தரின் கண்களில் நீர்த் திரையிட்டது. காமு அதில் கரைந்தாள். அடுத்த கணமே சகுந்தலா தோன்றினுள்.

''சுந்தர்! நீ என்னை மறந்து விட்டாயல்லவா? ஆனுல் உன்னைக் காண நான் டில்லியிலிருந்து வந்திருக்கிறேன் பார்! என் முகத்தைப் பார்! ஆசையோடு உன் கையால் என் பின்னலை ஒரு முறை பற்றி இழுக்க மாட்டாயா? அன்போடு என் கன்னத்தைத் தொட்டுப் பார்க்க மாட்டாயா? எங்கே உன் கைகளை இப்படிக் கொண்டு வா பார்க்கலாம். சுந்தரின் கைகளைப் பிடித்துத் தன் கன்னங்களில் வைத்துக் கொண்ட போது அவளுடைய அழகுத் தோற்றத்தை நிலவு வெள்ளம் கரைத்துக் கொண்டு போய்விட்டது.

சரித்திரப் புகழ் வாய்ந்த 1942ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் எட்டாம் தேதியன்று காந்தி மகாத்மா பிரிட்டிஷ்காரர் களைப் பார்த்து "வெள்ளையனே! வெளியேறு!!' என்று குரல் கொடுத்ததும் இந்தத் தேசமே வீறுகொண்டு எழுந்தது அல்லவா? மகாத்மாவின் அந்தக் குரல் தேசத்தின் சரித்திரத்தை மட்டும் மாற்றி அமைக்கவில்லை. சுந்தரத்தின் வாழ்வையும் அடியோடு மாற்றி ன்ட்டது.

பெரு மழை தொடங்குவதற்கு முன் வானத்தில் சீறிப் பாயும் இடியின் உறுமலைப் போல், விடுதலை இயக்கம்

தொடங்குவதற்கு இரண்டு தினங்களுக்கு முன்னிருந்தே தேசத்தின் நாலா திசைகளிலும் புரட்சி கோஷங்கள் முழங்கிக் கொண்டிருந்தன.

காந்திஜியின் குரலினின்றும் தெறித்த சுதந்திர ஆவேசப் பொறி சுந்தரத்தின் உள்ளத்தில் புகுந்து சிறிது சிறிதாகக் கனல் விட்டுக் கனியத் தொடங்கிற்று.

"வெள்ளையனே, வெளியேறு! மகாத்மா காந்திக்கு ஜே!" என்று ஓயாமல் அவன் இதயத்தில் ஏதோ ஒரு குரல் எதிரொலி செய்து கொண்டேயிருந்தது.

'நேருஜி, பட்டேல் போன்ற மாபெரும் தலைவர்களெல்லாம் கைதாகிக் கொண்டிருக்கிறார்கள். பாரத தேசமே அல்லோல கல்லோலப்படுகிறது. குண்டாந் தடிக்கும், துப்பாக்கி முனைக்கும் இலக்காகும் ஆயிரக் கணக்கான தியாகிகள் தங்கள் இரத்தத்தைத் தாய்நாட்டின் விடுதலைக்காக இந்தப் புண்ணிய பூமியில் சிந்திக் கொண்டே, "வாழ்க மகாத்மா" என்று வாழ்த்துகிறார்கள். தேச மக்களைப் பார்த்து, மகாத்மாஜி "செய் அல்லது செத்துமடி" என்கிறார்.

'உலகம் என்னைத் தனியாக ஒதுக்கி விடவில்லை. அதோ மகாத்மாஜி என்னை அழைக்கிறார். தேசம் என்னை அழைக்கிறது. அவர்களோடு நானும் செல்கிறேன்.'

'என்னை விட்டு விட்டா போகப் போகிறீர்கள்?' அவன் இதயத்தில் புகுந்து கொண்டிருந்த காமு குரல் கொடுத்தாள்.

'காமு! என்னை மன்னித்துவிடு! ஒரு கடமையை மறந்து விட்டு இன்னொரு கடமையை ஆற்றச் செல்கிறேன். இது குற்றம்தான்; ஆயினும் சுதந்திர வெறி என் இரத்தத்தில் மேலோங்கி நிற்கிறது. எனக்கு விடை கொடு. திரும்பி வந்து உன்னை அழைத்துக்கொள்கிறேன்.'

அன்று இரவெல்லாம் தூங்கவில்லை, அவன். கண் விழித்து இருபது சுவரொட்டிகளை எழுதி முடித்தான். அந்தச் சுவரொட்டிகளில் அவன் வரைந்திருந்தது என்ன தெரியுமா

"தபாலாபீசைக் கொளுத்துங்கள்; தந்திக் கம்பத்தை வெட்டுங்கள், தண்டவாளத்தை அகற்றுங்கள்" என்ற வாசகங்கள்தான்.

எழுதி முடித்த சுவரொட்டிகளை, தானே இரகசியமாக எடுத்துக் கொண்டுபோய் இரவோடு இரவாகச் சுவர்களில் ஒட்டிவிட்டு, எந்த நிமிஷமும் போலீசார் தன்னை வந்து கைது செய்து கொண்டு போவார்கள் என்று எதிர்பார்த்துத் தன் அறையிலேயே உட்காந்திருந்தான். ஆனால் அவனை யாருமே தேடிக்கொண்டு வரவில்லை.

"இவ்வளவு பெரிய குற்றத்தைச் செய்து விட்டு பகிரங்கமாக உட்கார்ந்திருக்கிறேன். என்னைக் கைது செய்ய யாருமே வரவில்லையே! இதற்குள்ளாகவே ஒரு வேளை பிரிட்டிஷ் அரசாங்கம் இந்தியாவைக் காலி செய்து விட்டுப் போய் விட்டதோ!' என்று எண்ணியபோது அவனுக்குச் சிரிப்பு வந்தது.

தானே நேரில் போய் குற்றத்தைப் போலீசிடம் கூறித் தன்னைக் கைது செய்யும்படி கேட்டுக் கொள்ளலாமா என்று கூட ஓர் எண்ணம் தோன்றியது அவனுக்கு. ஆனால் 'சே! அது சுத்த கோழைத்தனம்!' என்ற இன்னொரு எண்ணம் அதை அழித்தது. 'என்னைக் கைது செய்யவே மாட்டார்களா? அப்படியானால் வேறு என்னதான் செய்வது! ஆம்; நானே ஒரு தபாலாபீசைக் கொளுத்தினால் என்ன?' அவ்வளவுதான்; உடனே தன்னுடைய எண்ணத்தைச் செயலாக்கும் பொருட்டு வெளியே புறப்பட்டான்.

அறையைப் பூட்டிச் சாவியைக் கொண்டு போய் ராயரிடம் கொடுத்துவிட்டு "நான் கொஞ்சம் வெளியே போய் விட்டு வருகிறேன்" என்றான். "இந்தக் கார்டைக் கொஞ்சம் தபாலில் சேர்த்துவிடுகிறாயா?" என்று கூறி ஒரு கார்டைக் கொடுத்தார் ராயர்.

'நான் தபால் ஆபீசையே கொளுத்தப் போகிறேன். இவரோ அது தெரியாமல் கார்டை என்னிடமே கொடுத்துத்

தபாலில் சேர்க்கச் சொல்கிறுர்' என்று தனக்குள்ளாகவே சிரித்துக் கொண்டான் சுந்தரம். அவனுடைய மனப் போராட்டங்களெல்லாம் தீர்ந்து வெகு இலேசாகி விட்டிருந்த நேரம் அது.

தெருக் கோடியில் இருந்த தபால் பெட்டியில் ராயர் கொடுத்த கடிதத்தைப் போஸ்ட் செய்துவிட்டு, தபாலாபீசுக்கு எதிரில் போய் நின்று சுற்று முற்றும் பார்த்தான். குண்டுக்கு அஞ்சி சென்னை நகர மக்களில் பாதிப் பேருக்கு மேல் வெளியூர் போய் விட்டிருந்ததால் தெருவில் ஆள் சந்தடி அதிகமில்லை. உணர்ச்சி மேலிட்டால் இதயம் படபடவென்று அடித்துக் கொண்டது அவனுக்கு. சட்டைப் பைக்குள் தயாராக வைத்திருந்த தீப்பெட்டியை எடுத்து ஒரு குச்சியைக் கொளுத்தி தபால் பெட்டிக்குள் போட்டான்.

அடுத்த கணமே தபால் பெட்டிக்குள் புகையத் தொடங் கியது. இதைக் கவனித்துக்கொண்டிருந்த போஸ்டாபீஸ் சிப்பந்தி ஒருவர் "தீதீ" என்று கூச்சலிட்டபடியே ஓடிவந்து சுந்தரத்தைப் பிடித்துக் கொண்டார்.

"என்னை விடுங்கள். நான் ஓடமாட்டேன். போலீசுக்குப் போன் செய்து என்னை வந்து அழைத்துப் போகச் சொல்லுங் கள்" என்றுன் சுந்தரம்.

அடுத்த சில நிமிஷங்களுக்குள் அங்கே வந்த போலீசார் சுந்தரத்தைக் கைது செய்து லாரியில் ஏற்றிக்கொண்டு போனுர்கள்; வீரத்தின் பெருமை அவனுடைய உள்ளத்தை நிரப்பியது.

'ஆயிரமாயிரம் தேசத் தொண்டர்களில் நானும் ஒருவன். வெளி உலகத்தில் சிறை வாழ்வு நடத்துவதைக் காட்டிலும் சிறைக்குள்ளே நான் நடத்தப் போகும் வாழ்க்கை எவ்வளவோ மேலாயிருக்கும்' என்று எண்ணி மகிழ்ந்தான்.

ஐதர் அலி காலத்தில், யானைகளைக் கட்டி வைப்பதற்காக எழுப்பப் பட்டிருந்த மாபெரும் கருங்கல் கட்டடங்களைத்தான் இன்று 'அலிபுரம் சிறைச்சாலை' என்று அழைக்கிறுர்கள்.

அந்தக் கட்டடங்களைச் சுற்றி வளைத்து வேலிக் கம்பிகள் போட்டு, கைதிகள் தப்பி ஓடாமல் இருக்கும் பொருட்டு அவற்றோடு சில மின்சாரக் கம்பிகளையும் இணைத்து வைத்திருந் தார்கள், சிறை அதிகாரிகள்.

பத்திரிகைச் செய்திகள் அளித்த உற்சாகத்தின் காரண மாக சிலர் சிறைக் கூடத்திலேயே புரட்சி நடத்தவேண்டு மெனத் துடித்தார்கள். அவர்களில் எம். ஏ. பி. எல்லும் ஒருவர். அவர்தான் அந்தப் புரட்சி கோஷத்தையே சிறைக் குள் முதல் முதல் எழுப்பினர். இராக்காலத்தில் அவரும் இன்னும் சில பயங்கரவாதிகளும் சேர்ந்து இதர கைதிகளைக் கூட்டி வைத்துக்கொண்டு பிரசாரம் செய்தார்கள்.

"சிறைக்குள்ளே நாம் என்ன செய்ய முடியும்?" என்று கேட்டார் கூட்டத்தில் ஒருவர்.

"இந்தச் சிறையில் இப்போது சுமார் மூவாயிரம் பேர் கூடியுள்ளோம். இவ்வளவு பேரும் சேர்ந்து சிறைக் கம்பியை உடைத்துக்கொண்டு வெளியேறினல் நம்மை யார் தடுக்க முடியும்?" என்றார், எம். ஏ. பி. எல்.

"வேலிக் கம்பியில் மின்சாரம் இருக்கிறதே! தொட்டால் செத்துப் போவோம்" என்றார் ஒரு பயங்காளி.

"சிறைக் கதவை உடைத்துக்கொண்டு செல்வோம். தபாலாபீசைக் கொளுத்தியவர்களுக்கு, 'தண்டவாளத்தைப் பெயர்த்தவர்களுக்கு, பாலத்தை உடைத்தவர்களுக்கு இந்தச் சிறைச்சாலையை உடைப்பது ஒரு பிரமாதமா?"

"உஷ்! உரக்கப் பேசாதீர்கள். வார்டர்கள் விளக்கை வைத்துக் கொண்டு நம் பிளாக்கைச் சுற்றிச் சுற்றி 'ரோந்து' போய்க் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் காதில் விழப் போகிறது" என்றார் ஒருவர்.

"நாம் பேசுவது அவ்வளவு தூரத்திலுள்ள வார்டர்கள் காதில் விழாது" என்றான் சுந்தரம்.

"சுவர்களுக்கும் காது உண்டு. பகலில் பக்கம் பார்த்துப் பேசு. இரவில் அதுவும் பேசாதே'' என்று எச்சரித்தார் மற்ருெருவர்.

சிறையை உடைத்துக் கொண்டு வெளியேறும் புரட்சி பற்றி இரண்டு கட்சிகள் ஏற்பட்டன. ஆயினும் வெளியேறு வதைப் பற்றி நினைக்கும் போதே எல்லோருக்கும் உற்சாகம் பிறந்தது. எல்லோரையும்போல் சுந்தரமும் அந்தப் புரட்சி தினத்தை ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருந்தான்.

# 12

அன்று திங்கட்கிழமை. விநாயக சதுர்த்தி தினம். கைதிகள் எல்லோரும் காலையில் கஞ்சியைக் குடித்துவிட்டு அவரவர்கள் இஷ்டம்போல வெட்ட வெளியில் சுற்றிக்கொண்டும், பேசிக் கொண்டும், படித்துக் கொண்டும் இருந்தார்கள்.

"போன விநாயக சதுர்த்திக்கு வீட்டிலே கொழுக்கட்டை சாப்பிட்டேன். இந்த விநாயக சதுர்த்திக்கு வெறும் கஞ்சி தான்!'' என்முர் எம். ஏ. பி. எல். சுந்தரம் சிரித்தான்.

மணி ஏழரை இருக்கும். திடீரென்று சிறைச்சாலைக்குள் நாலா திசையிலும் விசில் ஒலி பயங்கரமாகக் கேட்டது. நீலத் தொப்பி அணிந்த வார்டர்கள் எமக் கிங்கரர்களைப் போல கையில் குண்டாந்தடியுடன் ஓடி ஓடிக் கைதிகளை விரட்டிக் கொண்டிருந்தார்கள். சிறையைச் சுற்றிலும் ரிசர்வ் போலீசார் கையில் துப்பாக்கி சகிதம் அணிவகுத்து நின்று கொண்டிருந்தார்கள்.

"ஐயோ ஐயோ'' என்ற அலறலும் "ஓடு ஓடு'' என்ற கூக்குரலும், விசில் ஊதலும் சேர்ந்து சிறை முழுவதும் எமலோகமாக மாறிக் காட்சி அளித்தது. கைதிகள் தங்கள் தங்கள் பிளாக்குகளை நோக்கி ஓடி, மூலைக்கு மூலை பதுங்கினுர் கள்.

வார்டர்கள் அவர்களை மாடுகளை அடிப்பதுபோல் அடித்தார்கள். நொறுக்கினார்கள், நையப் புடைத்தார்கள்!

"சிறையையா உடைத்துக்கொண்டு ஓடப் போகிறீர்கள்? உங்கள் மண்டையை உடைக்கிறோம், பாருங்கள் ' என்று ஒவ்வொரு கைதியின் மண்டையிலும் ஓங்கி அடித்தார்கள்.

இந்த பயங்கரம் அரைமணி நேரம் நீடித்தது. மீண்டும் விசில் சத்தம். அத்துடன் 'லத்தி சார்ஜ்' நிறுத்தப்பட்டது. குண்டாந்தடியின் அடிக்குத் தப்பாத கைதிகளே இல்லை.

சுந்தரம் மூர்ச்சித்துக் கீழே விழுந்து கிடந்தான். வலக் கையிலும் மண்டையிலும் பலமாக அடிபட்டு இரத்தம் பெருகிக் கொண்டிருந்தது.

இந்தக் கோரத் தாண்டவத்தின் விளைவாக சிறை முழுவதுமே இரத்தக் காடாக மாறிவிட்டது.

கை, கால், கண், காது, மூக்கு போன்ற அவயங்களை இழந்து முனகிக் கொண்டிருந்த கைதிகளை ஸ்ட்ரெச்சரில் போட்டு ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போனார்கள்.

ஆஸ்பத்திரியில் படுத்துக் கிடந்த சுந்தரத்துக்கு சுய நினைவு வந்தபோது தன்னுடைய மண்டையிலும் வலது கையிலும் பலமாகக் கட்டுப் போடப்பட்டிருப்பதைக் கண்டான். கையைத் தூக்க முடியவில்லை. மண்டையில் தையல் போடப்பட்டிருந்தது. கையிலும் மண்டையிலும் வலி தாங்கவில்லை அவனுக்கு.

"பிழைப்பேனா நான்? . காமு! உன்னைக் கண்ணால் காண்பேனா?" என்று அவன் வாய் முணுமுணுத்தது. துக்கத்தைக் கண்ணீராக வடித்துக் கொண்டிருந்தன அவன் கண்கள்.

வலது பக்கத்துக் கட்டிலில் படுத்திருந்தார் எம்.ஏ., பி. எல். அவருக்கும் காலில் பலத்த அடி!

"உங்களுக்கு பலத்த அடியோ?" என்று கேட்டான் சுந்தரம்.

"ஆமாம், காலில்தான் பலமான அடி. அது சரியாகி விடும். முதுகிலே பட்ட அடி இன்னமும் வலித்துக் கொண்டிருக்கிறது. கொழுக்கட்டைக்கு ஆசைப்பட்டேன் அல்லவா? அது முதுகிலே கிடைத்துவிட்டது! முதுகில் விழுந்த அடி அப்படியே கொழுக்கட்டை மாதிரி வீங்கிப் போய்விட்டது" என்றார் அவர்.

சுந்தரத்தின் இடது பக்கத்துக் கட்டிலிலே ஒரு கிரிமினல் கைதி படுத்திருந்தான். அவன் ஒரு குறவன். சுந்தரத்தைப் பார்த்து அவன் "சாமிக்கு எந்த ஊரோ?" என்று விசாரித்தான்.

"பட்டணம்."

"என்ன வேலை செய்யறீங்க?"

"படம் எழுதறது..."

"அடப் பாவமே! உங்க வலது கையை ஒடிச்சுட்டான்களே, இந்தப் படுபாவிங்க ..இனிமே எப்படிப் படம் எழுதப் போறீங்க?" வயிற்றெரிச்சலோடு கூறினான் அந்தக் குறவன்.

குறவன் நினைவு படுத்திய பிறகுதான் சுந்தரத்துக்குத் தன் வலது கையைப் பற்றிய கவலை ஏற்பட்டது.

"சாமிக்குக் குளந்தை குட்டிங்க இருக்குதா?"

"ம்...ஒரு பெண் குழந்தை இருக்குது என்றான் சுந்தரம்."

எனக்குக் கூட ஒரு பெண் குழந்தை இருக்குதுங்க. இப்ப என் பெண்ஜாதியும் அந்தக் குழந்தையும் என்ன கஷ்டப்படறாங்களோ?" என்று கண்ணீர் பெருக்கினான் குறவன்.

"உனக்கு என்ன தொழில்?" என்று கேட்டான் சுந்தரம்.

"திருட்டுத் தொழில்தானுங்க, சாமி; இந்த வயத்து வலியிலிருந்து நான் பிழைக்க மாட்டேனுங்க. எனக்கு நம்பிக்கையில்லை, சாமி! நீங்க கவலைப்படாதீங்க. என்னமோ உங்களைப் பார்த்ததிலிருந்து எனக்குப் பரிதாபமாயிருக்கு" என்று கூறிய குறவன், மெதுவாக எழுந்து சுந்தரத்தின்

படுக்கையருகில் வந்து அவன் காதோடு ரகசியமாகச் சொன்னான்: "சாமி! பத்தாயிரம் வெச்சிருக்கேன். அதை நீங்களே எடுத்துக்குங்க. சத்தியமாகச் சொல்றேன் சாமி, சந்தேகப் படாதீங்க..."

"சுந்தரம், இன்று உங்களுக்கு விடுதலை! ஜெயிலர் அழைத்துவரச் சொன்னார்" என்று கூப்பிட்டார் வார்டர்.

அந்த வார்த்தைகளைக் கேட்டதும் எம். ஏ. பி. எல்லின் கண்கள் கலங்கிவிட்டன. "சுந்தரம்! உங்களைப் பிரிவதற்கே கஷ்டமாயிருக்கிறது. ஆனாலும் பிரியவேண்டியிருக்கிறது" என்று கூறியபோது சிறு குழந்தை போல் அழுதே விட்டார்.

"ஸாமி; ஜெயில்லேருந்து போனதும் என்னை மறந்து விடுவியா?" என்று கேட்டான் குறவன்.

"மறக்க மாட்டேம்பா! உனக்கு என்மீது நம்பிக்கை யில்லையா?" என்று கேட்டான் சுந்தரம்.

"அதுக்கில்லே சாமி! ஜெயில் சிநேகிதம், ரயில் சிநேகிதம்பாங்களே...!"

"யாரை மறந்தாலும் உன்னை நான் மறக்க முடியுமா?" என்றான் சுந்தரம்.

சுந்தரம் கண் கலங்கியபடியே அவர்களிடம் விடைபெற்று கொண்டான். பத்தரைமாத காலம் அவர்களிடம் அன்போடு, பாசத்தோடு, வாஞ்சையோடு பழகிவிட்ட பிறகு அவர்களைப் பிரிந்து செல்வது என்பது அவ்வளவு எளிய காரியம் அல்லவே!

சிறைச்சாலைக்குள் முதன் முதல் புகும்போது அவனுக்கு ஏதோ ஒரு புதிய உலகத்துக்குள் புகுவது போலிருந்தது. இப்போது அவன் சிறையில் இருந்து விடுதலையாகி வெளியே காலெடுத்து வைத்ததும், அந்தப் புதிய உலகம் அவனுக்காக வெளியே காத்திருப்பதுபோல் தோன்றியது.

ராயல்சீமை வெயில் நெருப்பை வாரி வீசிக்கொண்டிருந்தது. மண்டை வெடிக்கும் அந்த வெயிலையும் பொருட்படுத்தாது, புகைவண்டி நிலையத்தை நோக்கி விரைந்துகொண்டிருந்தான் சுந்தரம். உள்ளத்தில் ஏதேதோ உணர்ச்சிகள், எண்ணங்கள்!

''நாளைக்கே மாங்குடி போய்விடலாம். காமுவையும் நாளைக்கே போய்ப் பார்த்து விடலாம். அவள் சற்றும் எதிர் பாராத நேரத்தில், எதிரில் போய் நின்றதும் அவள் வியப்பினால் விக்கித்துப் போவாள்.'' இதை எண்ணும்போதே சுந்தரத்தின் உள்ளத்தில் ஓர் இன்பச் சிலிர்ப்பு உண்டாயிற்று.

'அப்புறம்...ஒரு நாள் கிராமத்தில் தங்கிவிட்டு மறுநாளே குறவன் கூறிய அந்தக் காட்டுக்குப்போய், அவன் மறைத்து வைத்துள்ள நகைப் பெட்டியைத் தேடி எடுக்க வேண்டும்.

'அந்தத் திருட்டுச் சொத்தில் ஒரு காலணாவும் தொடக் கூடாது, பாவம்! சொத்தைப் பறிகொடுத்தவர்கள் எவ்வளவு வயிறு எரிகிறார்களோ!'

சுந்தரத்துக்கு இன்னொரு எண்ணமும் உண்டாயிற்று.

''அந்த நகைகளை அப்படியே கொண்டுபோய்ப் போலீஸ் ஸ்டேஷனில் ஒப்படைத்துவிட்டால் என்ன?''

'அப்படியானால் குறவனுக்கு கொடுத்த வாக்குறுதி? அவன் குடும்பத்துக்கு உதவி செய்வதாக கூறிய உறுதிமொழி... கூடாது கூடாது; குறவனை ஏமாற்றக் கூடாது; அவன் குடும்பத்தைத் தவிக்க விடுவது நம்பிக்கைத் துரோகம். மகா பாவம்! அவனுடைய மனைவியும் குழந்தையும் எவ்வளவு கஷ்டப்பட்டுக் கொண்டு இருக்கிறார்களோ?'

'என் குடும்பத்தை மறந்துவிட்டு, குறவனின் குடும்பத்தை பற்றி நான் கவலைப்படுகிறேன்!' சுந்தரம் சிரித்துக் கொண்

மறுநாள் மாலை மாங்குடியை நெருங்க நெருங்க சுந்தரத்தின் உள்ளத்தில் ஒருவித பரபரப்பும் விவரிக்க முடியாத உணர்ச்சிகளும் குறுகுறுத்தன.

'காமுவைக் காணப்போகிறோம்' என்ற மகிழ்ச்சியில்அவன் இதயம் துள்ளியது.

வீட்டுக்குள் காலடி எடுத்து வைத்தபோது "பாட்டி பாட்டி! அப்பா வந்துட்டா" என்று சுந்தரத்தின் மகள் சாரதா குரல் கொடுத்தாள். சாரதாவைக் கண்டதும் 'காமுவும் ஒருவேளை இங்கேதான் இருக்கிறாளோ?' என்று சந்தேகித்தான் சுந்தரம்.

பெற்ற தாய் பதறிக் கொண்டு ஓடி வந்தாள்.

"வாடா சுந்தரம்! உன்னை உயிரோடு திரும்பப் பார்ப்போமா என்று கவலைப்பட்டுக் கொண்டிருந்தேன். என் வயிற்றிலே பாலை வார்த்தாய்!" என்று கண்ணீர் துளிக்கக் கூறினாள்.

"காமு எங்கேம்மா?" என்று ஆவல் நிறைந்த கண்களோடு விசாரித்தான் சுந்தரம். அவன் அப்படிக் கேட்டதுமே பார்வதியம்மாளின் முகம் வாடிவிட்டது.

"ஏம்மா ஒன்றும் சொல்லாமல் நிற்கிறாய்?..." துடித்தான் சுந்தரம்.

"ஆறு மாசமாக அவள் ஆஸ்பத்திரியில் இருக்கிறாளடா! டி.பி.யாம். உன்னைப் பிரிந்த துக்கமே அவளைப் படுக்கையில் கிடத்தி விட்டது..." என்று வேதனையோடு கூறினாள் அவன் தாய்.

"டி.பி.யா? ஆஸ்பத்திரியில் இருக்கிறாளா? எந்த ஆஸ்பத்திரியில் அம்மா?" அதிர்ச்சியில் ஒரு கணம் சுந்தரத்தின் இதயமே நின்றுவிடும் போலிருந்தது.

"பெருந்துறையில் இருக்கிறாள். அடையாளமே தெரியாதபடி துரும்பாக இளைத்துப் போயிருக்கிறாள். நான்கூடப்போய்ப் பார்த்துவிட்டு வந்தேன். அவள் அப்பாவும் அம்மாவும்

இப்போது அந்த ஊரில்தான் இருக்கிறார்கள். உன்னைக் காண வேண்டும் என்பதற்காகவே அவள் உயிரைத் தன் கையில் வைத்துக் கொண்டிருக்கிறாள். பிழைத்தால் புனர் ஜன்மம் தான்'' என்றாள் அவன் தாய்.

சுந்தரம் தன் தலையை இரு கைகளாலும் கெட்டியாகப் பிடித்துக்கொண்டு இடிந்துபோய், அப்படியே சிலையாகக் கீழே உட்கார்ந்துவிட்டான்.

''காமு! என்னால் அல்லவா உனக்கு இத்தனை துன்பங்களும்...'' கேவி அழுதுவிட்டான் அவன்.

''சுந்தரம், நாளைக்கே நீ புறப்பட்டுப் போ. உன்னைப் பார்த்தாலாவது ஒருவேளை அவள் உடம்பு குணமடையலாம்'' என்றாள் பார்வதி.

''அவனுக்கு முதலில் காப்பியைக் கொண்டுவந்து கொடு. அப்புறம் மற்ற சங்கதிகளைப் பேசிக் கொள்ளலாம்'' என்று மனைவியைக் கடிந்துகொண்ட கங்காதரய்யர், ''ஏண்டாப்பா ஒரு கார்டு போடக் கூடாதா எனக்கு? சொல்லாமல் கொள்ளாமல் ஜெயிலுக்குப் போய்விட்டாயே, பெற்ற வயிறு எவ்வளவு வேதனைப்பட்டது தெரியுமா? போகிறது; இந்தமட்டில் நல்லபடியாகத் திரும்பி வந்தாயே அதுவே போதும். இத்தனை காலமும் சர்மாதான் எங்களைக் காப்பாற்றினார். அவர் உதவி இல்லையென்றால் நாங்கள் தத்தளித்துப் போயிருப்போம்'' என்றார் கங்காதரய்யர்.

நன்றி உணர்ச்சியுடன் சர்மாவை நினைத்துக் கண்ணீர் விட்டான் சுந்தரம்.

''நம் குடும்பத்தின் தெய்வம் அவர், இப்போது சர்மா எங்கே இருக்கிறார் அப்பா?''

''டில்லியில் இருப்பதாகக் கேள்வி. ஆற்காட்டு மண்டியிலிருந்து எனக்கு அரிசியும், பணமும் மாதம் தவறாமல் வந்து கொண்டிருக்கிறது'' என்றார் கங்காதரய்யர்.

அன்றிரவு சுந்தரத்திற்குத் தூக்கம் பிடிக்கவில்லை. "காமு காமு!" என்று இரவெல்லாம் வாய் பிதற்றிக் கொண்டே படுத்திருந்தான். "பொழுது எப்போது விடியப் போகிறது?" என்று காத்திருந்தவன், காலையில் பத்து மணிக்கெல்லாம் சாப்பிட்டுவிட்டுக் கிளம்பிவிட்டான்.

பெருந்துறை போவதற்கு இராத்திரிதான் ரயில். எனவே, பஸ் ஏறி முதலில் நேராக சித்தூருக்குப் போய்ச் சேர்ந்தான். சித்தூர் காட்டில் குறவன் குறிப்பிட்ட இடத்துக்குப் போய் அந்த நகைப் பெட்டியைத் தோண்டி எடுத்தான். சிறிய தகரப் பெட்டிதான். திறந்து பார்த்தபோது, என்ன விந்தை! தங்க ஒட்டியாணம், வைர அட்டிகை, வங்கி, வளையல்கள் இன்னும் என்னென்னவோ அதற்குள் இருந்தன. மதிப்பு பத்தாயிரத்துக் குக் குறைவில்லை!

'இவ்வளவும் யாருடைய நகைகளோ? எந்த வீட்டில் கொள்ளை அடித்தானோ? அந்தத் திருட்டுச் சொத்தை விவரமாக ஆராய்ந்து பார்ப்பதற்கே சுந்தரத்துக்கு உள்ளம் கூசியது. அந்தப் பெட்டியை ஒரு துணியில் வைத்து மூட்டையாகக் கட்டி எடுத்துக்கொண்டு வேகமாக நடந்தான்.

'நானும் இப்போது ஒரு திருடன்தான்! இந்தத் திருட்டு நகைகளை யாருக்கும் தெரியாமல் எடுத்துப் போவது பெரும் திருட்டுக் குற்றம்தானே?' என்று எண்ணிக் கொண்டான்.

பின்னால் பஸ் வரும் சத்தம் கேட்டது. திரும்பிப் பார்த்தான். வேலூர் போகும்பஸ் வேகமாக வந்து கொண்டிருந்தது. அந்தப் பஸ்சை நிறுத்தி அதில் ஏறிக்கொண்டான்.

வேலூருக்குப் போய், அங்கிருந்து காட்பாடி ஸ்டேஷனை அடைவதற்குள் மணி ஏழுக்குமேல் ஆகிவிடவே, அதற்குள் நன்கு இருட்டிவிட்டது. ஸ்டேஷனிலேயே சாப்பிட்டுவிட்டு இரவு மூன்று மணிக்கு வரும் ரயிலில் பெருந்துறைக்குப் போவது என்று முடிவு செய்து கொண்டான். அந்தப் பெட்டி அவனுக்குப் பெரும் பாரமாக இருந்தது. அதைக் கையில் வைத்துக்கொண்டு இருப்பதற்கே அவனுக்குப் பிடிக்கவில்லை.

பிளாட்பாரத்தில் அதிக சந்தடி இல்லை. ரயில்வே போலீ சார் இருவர் தொப்பியைக் கழற்றிப் பெஞ்சுமீது வைத்து விட்டு, உட்கார்ந்து பேசிக்கொண்டு இருந்தார்கள். அவர்களைக் கண்டதும் சுந்தரத்தின் நெஞ்சு 'திக் திக்' கென்று அடித்துக் கொண்டது. அவர்கள் இருந்த பக்கமே திரும்பிப் பார்க் காமல் பிளாட்பாரத்தின் மற்றொரு கோடிக்குப்போய் அங்கிருந்த பெஞ்சுமீது உட்கார்ந்து கொண்டான்.

இந்தச் சமயம் சற்றுத் தொலைவில் கையில் கூஜாவுடன் யாரோ ஒரு பெண் அவனை நோக்கி வந்து கொண்டிருந்தாள். யார் அவள்? கண்ணைப் பறிக்கும் அவளுடைய அழகைக் கண்ட போது, "ஆ! என்ன அழகு!" என்று தனக்குள்ளாகவே வியந்து கொண்டான் சுந்தரம்.

அவள் சுந்தரையே கண்கொட்டாமல் பார்த்துக் கொண் டிருந்தாள். 'முன்பின் தெரியாதவள் தன்னை ஏன் அப்படிப் பார்க்கிறாள்?' என்று யோசித்தான் சுந்தரம். இதற்குள் அவள் சுந்தரத்தின் அருகிலேயே நெருங்கி வந்துவிட்டாள்.

"சுந்தர்!" அவள் கண்கள் வியப்பினால் மலர்ந்தன. உதடு கள் முறுவலித்தன. கன்னங்களில் குழி விழுந்தன.

'யார்? சகுந்தலாவா! அடையாளமே தெரியாமல் மாறிப் போயிருக்கிறாளே!' அவளையே கண்கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தான்.

"என்ன, அப்படிப் பார்க்கிறீர்கள்? என்னைத் தெரிய வில்லையா?..." என்று கேட்டாள் சகுந்தலா.

"நீயா! நீ இங்கே எங்கே வந்தாய்? டில்லியில் இருப் பதாக அல்லவா கேள்விப்பட்டேன்?"

அவள் பதில் கூறவில்லை. கண்களிலிருந்து பெருகிய கண்ணீரைத் துடைத்துக் கொண்டவளாய், "என் விதி" என்றாள்.

"ஏன் அழுகிறாய் சகுந்தலா! ஏதோ மாதிரி இருக்கிறாயே! உனக்கு என்ன? உன் கணவர் சாம்பசிவம் எங்கே?"

பதில் கூறவில்லை அவள்.

"சகுந்தலா! சொல்லமாட்டாயா?"

பொங்கிய துக்கத்தை அடக்கிக் கொண்டு பேச முற்பட்டாள் சகுந்தலா. வார்த்தைகள் துக்கத்தில் மூழ்கி வெளிவந்தன. "அவர் இறந்து ஒன்பது மாதம் ஆகிறது. தாத்தா வேலூர் ஆஸ்பத்திரியில் படுத்திருக்கிறார். ஒரு மாதமாக அவருக்கு டைபாய்டு ஜுரம். அவரைத்தான் பார்த்துவிட்டு வருகிறேன். சுந்தர்! உங்களைப் பிரிந்த பிறகு என் வாழ்வே சீர்குலைந்து விட்டது! சோதனைக்கு மேல் சோதனையாக அனுபவித்துக் கொண்டிருக்கிறேன். நானும் தாத்தாவும் ஆற்காட்டுக்கே திரும்பி வந்துவிட்டோம். நான் தான் இந்த ஒரு மாதமாக வேலூருக்கும் ஆற்காட்டுக்கும் அலைந்து கொண்டிருக்கிறேன். வாருங்கள் சுந்தரம், மேலே ரிடயரிங் ரூமில்தான் தங்கியிருக்கிறேன். உங்களோடு எவ்வளவோ பேசியாக வேண்டும். வாருங்கள் போகலாம்" என்று அழைத்தாள் அவள்.

சுந்தர் அந்தப் பெட்டியை எடுத்துக்கொண்டு அவள் பின்னோடு நடந்தான்.

"ஆமாம்; தாங்கள் எப்போது சிறையிலிருந்து வந்தீர்கள்? காமு சவுக்கியமாயிருக்கிறாளா?" என்று கேட்டாள் சகுந்தலா.

"அவளுக்கு டி. பி. பெருந்துறை ஆஸ்பத்திரியில் படுத் திருக்கிறாள். அவளைப் பார்க்கத்தான் போய்க் கொண்டிருக் கிறேன். சிறையிலிருந்து வந்தது முதல் இன்னும் ஒரு நல்ல சேதியைக் கூடக் கேள்விப்படவில்லை நான். இதையெல்லாம் பார்க்கும்போது சிறையிலிருந்து ஏன் வந்தோம் என்று கூடத் தோன்றுகிறது..."

சகுந்தலா அறையைத் திறந்து, "உள்ளே வாருங்கள்! இன்று நீங்களும் இங்கேயே தங்கியிருக்கலாம். உங்களைப் பார்த்தது எனக்கு எவ்வளவு ஆறுதலாயிருக்கிறது தெரியுமா? என் துன்பங்கள் எல்லாம் தீர்ந்து விட்டன போலிருக் கிறது....." அவள் பெருமூச்சு விட்டாள்.

"சாம்பசிவத்தின் முடிவை என்றால் நம்பவே முடியவில்லையே! அவருக்கு என்ன உடம்புக்கு?..."

"திடீரென்று ஒரு நாள் ஒரு மாதிரி வலி ஏற்பட்டு உடம்பைக் கோணலாக இழுத்துத் தூக்கித் தூக்கிப் போட்டது. எத்தனையோ டாக்டர்களை அழைத்து வந்து காட்டினோம். எவ்வளவோ வைத்தியம் செய்தோம். ஒன்றும் பயன் இல்லாமல் போய்விட்டது. எமன் அவர் வாழ்வை முடித்துக்கொண்டு போய்விட்டான். நான் கொடுத்து வைத்தது அவ்வளவுதான். இப்போது தாத்தா உயிரோடு பிழைத்தெழுந்திருக்க வேண்டுமே என்று கவலையாயிருக்கிறது...சுந்தர்! நான் ரொம்ப துரதிருஷ்டசாலி; இல்லையென்றால் உங்களை மணந்துகொண்டு சந்தோஷமாக வாழ்ந்திருப்பேன் அல்லவா?"

நீண்ட பெருமூச்சு விட்டாள் அவள்.

சுந்தரின் இதயம் படபட வென்று அடித்துக் கொண்டது. சகுந்தலாவின் அழகு அவனைக் கவர்ந்து வசீகரித்தது. அவள் இவ்வளவு அழகாக, சவுந்தரிய தேவதையாக மாறிப் போயிருப்பாள் என்று அவன் எண்ணவேயில்லை.

"உம்!......"

அவன் பெருமூச்செறிந்தான்.

"சுந்தர்! இதோ ஒரு நொடியில் முகம் கழுவிக்கொண்டு வந்துவிடுகிறேன்" என்று கூறிய சகுந்தலா கையில் ஒரு டவலையும் சோப்புப் பெட்டியையும் எடுத்துக் கொண்டு ஸ்நான அறைக்குள் சென்றாள்.

"சுந்தர்! இது என்ன பார்த்தீர்களா?" என்று லேசாகப் புன்னகை பூத்தபடியே தன் கையிலிருந்த சோப்புப் பெட்டியைக் காட்டிக் கேட்டாள் அவள்.

"நான் ஆற்காட்டில் மறந்து வைத்துவிட்ட சோப்புப் பெட்டி!" என்றான் அவன். அவள் புன்முறுவல் பூத்தாள்.

இரண்டே நிமிடங்களில் அவள் திரும்பி வந்தாள். பொட்டில்லாத அவள் முகம் சோப்புப் போட்டுத் துல்லிய மாகக் கழுவப்பட் டிருந்தது. களங்கமற்ற முழுமதி போல் மாசற்று ஒளிர்ந்தது அந்த முகம்! சுந்தரம் தடுமாறினன்.

"சுந்தர் இது என்ன மூட்டை?" என்று கேட்டாள் சகுந்தலா.

"இதில் ஒரு பெரிய கதை அடங்கியிருக்கிறது" என்று சொல்லிக் கொண்டே அந்த மூட்டையை அவிழ்த்தான் அவன்.

"இந்தப் பெட்டிக்குள் பத்தாயிரம் ரூபாய் நகைகள் இருக்கின்றன. அவ்வளவும் திருட்டுச் சொத்து. ஜெயிலில் குறவன் ஒருவன் எனக்குச் சிநேகமானன். என்னை இதை எடுத்துக் கொள்ளும்படி அவன்தான் சொல்லி அனுப்பினன். அவன் குடும்பத்தை நான் காப்பாற்ற வேண்டுமாம். அவன் சொன்ன படியே சென்று தேடியபோது இது சித்தூர் காட்டில் அகப் பட்டது. இதோ பார்" என்று சொல்லிக்கொண்டே பெட்டியைத் திறந்து அதிலிருந்த நகைகளை ஒவ்வொன்ருக எடுத்து வெளியே வைத்தான் சுந்தரம்.

சகுந்தலா அந்த நகைகளை ஆச்சரியத்தோடு பார்த்துக் கொண்டிருந்தாள். பெட்டிக்கு அடியில் இருந்த இரண்டு தாலிகளை வெளியே எடுத்த சுந்தரம் என்ன "அப்படிப் பார்க்கிருய் சகுந்தலா! இதோ பார்த்தாயா? பாவம்! எந்த மாகராஜியின் கழுத்தில் இருந்ததோ இது? யார் கட்டிய தாலியோ?" என்று சொல்லிக்கொண்டே சகுந்தலாவிடம் அவற்றைக் கொடுத்தான்.

அவள் கைகள் நடுங்கின.

"உன் கைகள் ஏன் இப்படி நடுங்குகின்றன?" என்று கேட்டான் சுந்தரம்.

"சுந்தர்! இது என்னுடைய தாலி! இந்த நகைப் பெட்டியும் என்னுடையதுதான்......" என்ருள் சகுந்தலா.

"என்ன உன்னுடையதா?'' பிரமித்து நின்ருன் சுந்தரம். ''அப்படியானல் அந்தக் குறவன் உன் வீட்டிலிருந்துதான் கொள்ளையடித்துக் கொண்டு போனனு? என்ருல் நம்பவே முடியவில்லையே!... சகுந்தலா ! உன் கணவர் இறந்துவிட்டார் —சர்மா ஆஸ்பத்திரியில் படுத்திருக்கிருர் —இந்த நகைகள் உன்னுடையவை — இவ்வளவும் எனக்குக் கனவாகவே தோன்றுகின்றன!"

"எனக்கும்தான்! இழந்துவிட்ட நகைகளையும் தங்கங்களையும் ஒருங்கே காணும்போது என்னுலும் நம்ப முடியவில்லைதான். தங்களை இங்கே சந்தித்ததில் நான் எவ்வளவு மகிழ்ச்சி அடைகிறேன் தெரியுமா...? சுந்தர்! நாம் இருவரும் சின்ன வயசில் இன்பமாகக் கூடி வாழ்ந்ததையெல்லாம் மறந்துவிட்டீர்களா? ஆற்காட்டில் ஒருநாள் நான் தங்கள் அறைக்கு வந்திருந்தபோது விளக்கை அணைத்துவிட்டு என்னைப் பயமுறுத்தினீர்களே, நினைவு இருக்கிறதா?'' ஆவல் நிறைந்த விழிகளால் அவனை விழுங்கி விடுவதுபோல் பார்த்தாள் அவள். பசுந் தளிர்மீது நிலவு கொஞ்சுவதுபோன்ற புன் முறுவல் சகுந்தலாவின் இதழ்களில் நெளிந்து கன்னங்களில் சுழித்துக் குமிழிட்டன.

சலனமற்ற நீர்ப் பரப்பில் ஒரு சிறு கல்லை எறிந்ததும் சிறு வட்டங்கள் தோன்றி அவை பெரிய பெரிய வட்டங்களாக மாறி நீர்ப்பரப்பு முழுவதையுமே அலைத்து விடுகிறது அல்லவா? சகுந்தலாவின் வார்த்தைகள் சுந்தரின் இதயத்தை அலைக்கத் தொடங்கின.

எங்கேயோ பலமாக மழை பெய்து கொண்டிருந்தது. அதை உணர்த்துவதுபோல், ஜன்னல் வழியாக வீசிய சில்லென்ற மழைக் காற்று சுந்தரையும் சகுந்தலாவையும் மெய் சிலிர்க்கச் செய்தது.

"விதி நம் இருவரையும் பிரித்துவிட்டு வேடிக்கை பார்க்கிறது, சுந்தர்!'' என்ருள் சகுந்தலா.

''நீ என்ன சொல்கிருய், சகுந்தலா...?''

"தங்களை என்னால் மறக்கவே முடியவில்லை..."

"என்னை மறந்துவிட்டுத்தானே வேறொருவனை மணந்து கொண்டாய்?"

இந்த வார்த்தைகள் அவள் இதயத்தில் சுருக்கெனப் பாய்ந்தன.

"சுந்தர்! உங்கள் வார்த்தைகளால் என் இதயத்தைத் தாக்காதீர்கள். அதைக் காட்டிலும் உங்கள் கைகளால் என்னைக் கொன்று விடுங்கள். மகிழ்ச்சியோடு, மன நிம்மதியோடு செத்துப் போகிறேன்...தாத்தாவின் விருப்பத்துக்கு மாறாக நான் என்ன செய்ய முடியும்? இப்போது அவர் எவ்வளவு வருத்தப்படுகிறார் தெரியுமா? ஜுரமாகப் படுத்துக் கொண்டிருக்கும் இந்த நேரத்தில்கூட அவர் உங்கள்பெயரைச் சொல்லிச் சொல்லி மாய்ந்து போகிறார்... ஜாதகத்தை நம்பி மோசம் போய்விட்டேனே; சுந்தரை ஏமாற்றி விட்டேனே' என்று சொல்லிச் சொல்லி துக்கப்படுகிறார். ஜாதகப்படி உங்களுக்கு ஆயுள் குறைவு என்று நம்பிக்கொண்டு என்னை வேறொருவருக்குக் கொடுத்தார். தாத்தா விதியை மாற்றி அமைக்க முடிவு செய்தார். ஆனால் விதி அவரை ஏமாற்றி விட்டது! நீண்டகாலம் வாழ்வார் என்று நம்பிய ஒருவருக்கு என்னைக் கொடுத்து என் வாழ்வை இன்பமயமாக்க எண்ணினார் அவர். ஜாதகம் பொய்த்துவிட்டது. என் கணவர் என்னை அநாதையாக்கி விட்டுப் போய் விட்டார். என் வாழ்வு துன்பமயமாகிவிட்டது. விதி இப்போது உங்கள் உருவத்தில் என்னையும் தாத்தாவையும் கண்டு கெக்கலிறது," சகுந்தலாவின் கண்களில் நீர்த் திரையிட்டது.

சுந்தரம் மவுனமாகக் கேட்டுக்கொண்டிருந்தான்.

மீண்டும் அறைக்குள் பாய்ந்து வந்த குளிர் காற்று அவர்கள் இருவரையும் தழுவிக்கொண்டு சென்றது. காற்றின் வேகத்தில் ஜன்னல் கதவுகள் பட படவென்று ஆடின.

சகுந்தலாவின் நிலை கண்டு சுந்தரின் உள்ளம் வேதனைப் பட்டது. இளம் வயதில் அவளுக்கு நேர்ந்துவிட்ட சோதனையை

நினைத்து அவன் வருந்தினன். 'மொட்டும் மலருமாக இருக்கும் பருவத்திலேயே அவள் கணவனை இழந்து வாழ்வின் இன்பத்தைப் பருகக் கொடுத்து வைக்காத கைம்பெண்ணுகி, விட்டாளே' என்று பரிதாபப்பட்டான்.

மலருக்கு இன்பம் தர, அதன் நறுமணத்தை நுகர, அதன் தேன் சுவையைப் பருக வந்த வண்டைச் சூறுவளிக்காற்று கொண்டு போய் விட்டது. மலர்ந்தும் மலராமலும் உள்ள மொட்டு கசங்கிக் கீழே விழுந்து கிடக்கிறது. சகுந்தலாவின் நிலை அவனுக்கு அப்படித்தான் பட்டது.

சுந்தரத்தையே கண்கொட்டாமல் பார்த்துக்கொண்டு நின்ருள் சகுந்தலா அவள் வாய் திறந்து பேச முடியாத வார்த்தைகளையெல்லாம் அவள் விழிகள் சொல்லிக் கொண்டிருந்தன.

இச்சமயம் 'மல்லீயப்!... என்று கூவிக்கொண்டே வந்த கிழவி ஒருத்தி சகுந்தலாவின் அறைக்குள் எட்டிப்பார்த்தாள். சகுந்தலாவைப் பார்த்து, "மல்லீயப்பூ வேணுமாம்மா? நல்ல வாசனையாயிருக்குது..." என்று கேட்டாள் அக் கிழவி.

சகுந்தலா பதில் கூருமல் தன்னுடைய சோகம் தோய்ந்த விழிகளால் அவளைத் திரும்பிப் பார்த்தாள். அந்தக் கிழவி சகுந்தலாவின் தோற்றத்தைப் பார்த்துப் புரிந்து கொண்டவள்போல் "பாவம்! இளம் வயசு பொண்ணு...ம்..." என்று கூறிக்கொண்டே போய்விட்டாள்.

# 13

எங்கேயோ வானத்தில் மேகங்கள் கிடுகிடு வென்று குமுறிக் கொண்டிருந்தன. மழை வரப்போவதற்கு அறிகுறியாக அந்த அறையிலுள்ள விளக்கைச் சுற்றிலும் ஈசல்களும் விட்டில்களும் சூழ்ந்து வட்டமிட்டுக் கொண்டிருந்தன.

சுந்தரம் எழுந்துபோய் விளக்கை அணைத்தான்.

''ஏன் விளக்கை அணைக்கிறீர்கள்?'' சகுந்தலா கேட்டாள்.

''விளக்கின் ஒளியிலே மடியப்போகும் விட்டில் பூச்சிகளைச் சாகாமல் தடுப்பதற்குத்தான்...'' என்று மறை பொருளாக அவளுக்கு எதையோ உணர்த்தினான் அவன்.

''எனக்கு இருட்டென்றால் ரொம்பப் பயம் என்று உங்களுக்குத் தெரியாதா?'' என்று கேட்டாள் சகுந்தலா.

''தெரியும் வராந்தாவில் உள்ள விளக்கு வெளிச்சமே போதுமென்று பார்த்தேன்'' என்றான் அவன்.

அடுத்தகணம் சகுந்தலாவின் கண்ணிமைகள் நனைந்திருப்பதைக் கண்டு திடுக்கிட்ட சுந்தரம், ''ஏன் அழுகிறாய் சகுந்தலா?...'' என்று கேட்டான்.

''என் சாந்தி முகூர்த்தத்தன்று படுக்கை அறையில் ஏற்றி வைக்கப் பட்டிருந்த குத்துவிளக்கு திடுமென அணைந்து விட்டது. இப்போது அது நினைவுக்கு வந்தது. எதிர்காலத்தில் நேரப்போகும் பயங்கரத்தை முன்கூட்டியே அறிவிப்பது போல் இருந்தது அது'' என்றாள் சகுந்தலா.

''அப்படியா! அப்புறம் என்ன நடந்தது?'' என்று கேட்டான் சுந்தரம். சுந்தரம் அவளை விட்டுப் பிரிந்து வந்த பிறகு நடந்தவற்றையெல்லாம் விவரமாகக் கூறினாள் அவள். ''கடைசியாக நான் கொடுத்து வைக்காத பாவியாகிவிட்டேன், சுந்தர்!'' என்று கண்ணீர் வடித்தாள். அவளுடைய துயரம் நிறைந்த கதையைக் கேட்டு சுந்தரம் வருத்தத்தில் ஆழ்ந்தான்.

''பாவம், நீங்கள் எங்கெங்கே அலைந்துவிட்டுக் களைத்து வந்திருக்கிறீர்கள். கீழே போய் ஐ. ஆர். ரூமிலிருந்து சாப்பாடு கொண்டு வருகிறேன். சாப்பிட்டுவிட்டுப் படுத்துக் கொள்ளுங்கள்'' என்றாள் சகுந்தலா.

''வேண்டாம், நானே போய்க் கொண்டு வருகிறேன்'' என்று கூறினான் சுந்தரம்,

"ஏன், நான் கொண்டுவந்தால் சாப்பிடமாட்டீர்களா?" என்ருள் அவள்.

"சரி சரி, உன் இஷ்டப்படியே செய். கோபித்துக் கொள்ளாதே, உனக்குத் தொந்தரவு எதற்கு என்று பார்த்தேன்."

"தங்களுக்கு நான் எவ்வளவோ கடமைப்பட்டிருக்கிறேன்" என்ருள் சகுந்தலா.

"நகைகளை கொண்டு வந்ததற்காகவா சொல்கிருய்? சர்மா எனக்குச் செய்துள்ள உதவிகளுக்கு இதெல்லாம் எம் மாத்திரம்? ஆனுல் பாவம், அந்தக் குறவனுடைய குடும்பத்தை நினைத்துக் கொண்டால்தான் வருத்தமாயிருக் கிறது. அவன் மனைவியும் குழந்தையும் ரொம்பத் திண்டா டிக்கொண்டு இருப்பார்கள். அவன் குடும்பத்தைக் காப்பாற் றுவதாகக் குறவனிடம் வாக்குறுதி அளித்துவிட்டு வந்திருக் கிறேன்."

"கவலைப்படாதீர்கள் சுந்தர்! அந்தக் குறவனுடைய குடும்பத்தைக் காப்பாற்றுவது நம்முடைய கடமை. அந்தப் பொறுப்பை நானே ஏற்றுக் கொள்கிறேன். முதலில் அவர்கள் இருக்கும் இடத்தைத் தேடி கண்டு பிடியுங்கள்" என்ருள் சகுந்தலா.

"காமுவையும், சர்மாவையும் பார்த்துவிட்டு வந்த பிறகு என்னுடைய முதல் வேலை அதுதான்" என்ருன் சுந்தரம்.

"எனக்குக்கூட காமுவைப் பார்க்க வேண்டும் போலிருக் கிறது. பாவம் அவளைப் பற்றி எண்ணும்போதே மனம் வேதனைப்படுகின்றது..." என்ருள் சகுந்தலா.

"காரியரை எடுத்துக் கொடு. நான் சாப்பாடு கொண்டு வருகிறேன்."

அவள் காரியருடன் பத்து ரூபாய் நோட்டையும் எடுத்துக் கொண்டு வந்து கொடுத்தாள்.

"என்னிடம் பணம் இருக்கிறது" என்ருன் சுந்தரம்,

"இருக்கட்டும்; எனக்குச் சில்லறை வேண்டும். சாப்பாட்டுக்குப் பணம் கொடுத்துவிட்டு அப்படியே சில்லறை வாங்கிக் கொண்டு வாருங்கள்" என்றாள் சகுந்தலா.

"சகுந்தலா எத்தனை நாசூக்காகப் பேசிப் பணத்தை என்னிடம் கொடுத்து விட்டாள்!' என்று தனக்குள்ளாகவே அவள் திறமையை மெச்சிக் கொண்டான் சுந்தரம்.

அவன் சாப்பாடு எடுத்துக்கொண்டு திரும்பி வருவதற்குள் அவனுக்காக பெஞ்சு மீது தயாராக படுக்கையைப் போட்டு வைத்தாள் அவள். சற்று நேரத்துக்கெல்லாம் சுந்தரம் திரும்பிவந்தான். அவன் பசியுடன் இருப்பதை உணர்ந்து கொண்ட சகுந்தலா, அவசரம் அவசரமாக இலையைப் பிரித்துப்போட்டு காரியரைத் திறந்து ஒவ்வொன்றாகப் பரிமாறினாள்.

"உருளைக் கிழங்கு பொடிமாஸ்!" என்றான் சுந்தரம்.

"அப்பளம் கூட இருக்கிறது!" என்றாள் சகுந்தலா.

அவர்களிருவருக்கும், மாரியம்மன் திருவிழாவன்று மாங்குடியில் நடந்த சம்பவங்கள் நினைவுக்கு வந்துவிட்டன!

"மாங்குடியில் அன்று என் அம்மாவுக்குத் தேள் கொட்டி விட்டபோது நீ எனக்குப் பரிமாறினாயே, அது ஞாபகம் இருகிறதா!" என்று கேட்டான் சுந்தரம்.

"ஆமாம், ஆமாம்; அன்று இரவு வாசலில் போய் படுத்துக் கொண்டீர்களே, அது கூட நினைவு இருக்கிறது!" என்று பதிலுக்குக் கேலி செய்தாள் சகுந்தலா!

"நீ வாசல் கதவைத் தாழ்ப்பாள் போட்டுக் கொண்டாயே, அது நினைவிருக்கிறதா?..." என்றான் சுந்தரம்.

"அப்புறம் கதவைத் தட்டி உள்ளே வந்து படுத்துக் கொண்டீர்களே, அது நினைவிருக்கிறதா?..." என்றாள் சகுந்தலா.

"காற்றிலே விளக்கு அணைந்ததே அது நினைவிருக்கிறதா?"

"பூனைபோல் வந்து என் காலை மிதித்தீர்களே, அதை மறந்து விட்டீர்களா?" என்றாள் சகுந்தலா.

"நீ அலறிக்கொண்டு எழுந்து ஓடினாயே?" என்று சிரித்தான் சுந்தரம்.

"பின்ன என்னவாம்; அப்படித்தான் பயமுறுத்துகிறதாக்கும்!" என்றாள் சகுந்தலா.

பேசிக்கொண்டே இலையிலிருந்த பொடிமாசைத் தீர்த்து விட்டான் சுந்தரம். அதைக் கண்ட சகுந்தலா 'களுக்' கெனச் சிரித்து விட்டாள்.

"என்ன சிரிக்கிறாய்?"

"இலையில் வைத்த பொடிமாசைக் காணோமே என்று சிரித்தேன்!"

"பொடிமாஸ் ரொம்பப் பிரமாதம்!"

"ஓட்டல் சமையல்களைப் புகழ்கிறீர்களாக்கும்! இதில் எனக்கென்ன பெருமை?"

"நீ சமைத்துப் போடு; உன்னையும் புகழ்கிறேன்..."

"தங்களுக்குச் சமைத்துப் போட்டுக் கொண்டிருக்க வேண்டிய கைதான் இது..." அவள் குரலில் வருத்தமும் ஏக்கமும் தொனித்தன.

சுந்தரம் அளவுக்கு மீறியே சாப்பிட்டு விட்டான். பிறகு, "உனக்கு ஏதாவது மிச்சம் வைத்திருக்கிறேனா இல்லையா, சகுந்தலா?" என்று சிரித்துக் கொண்டே கேட்டான்.

"உங்களைப் பார்த்தது முதலே என் உள்ளமும் வயிறும் மகிழ்ச்சியால் நிரம்பிக் கிடக்கிறது, எனக்குச் சாப்பாடுகூட வேண்டியதில்லை. ம்...நாம் எப்படியோ இருந்திருக்க வேண்டியவர்கள்!" தன் ஏக்கத்தைப் பெருமூச்சாக வெளிப்படுத்தினாள் அவள்.

விளக்கு எரிந்து கொண்டிருந்தது. சுந்தரம் தனக்கு வந்த தூக்கத்தைக் கொட்டாவிகள் மூலமாகப் போக்க முயற்சித்துக் கொண்டிருந்தான்.

''பாவம், களைத்துப் போயிருக்கிறீர்கள்!'' என்றாள் சகுந்தலா.

''உடல் களைப்பு, உள்ளக் களைப்பு, உண்ட களைப்பு மூன்றும் சேர்ந்து என்னை வாட்டுகின்றன...''

''தாங்கள் இந்த பெஞ்சு மீதே படுத்துக்கொள்ளுங்கள். படுக்கைப் போட்டு வைத்திருக்கிறேன்'' என்றாள் சகுந்தலா.

''நான் வராந்தாவில் படுத்துக் கொள்கிறேனே!'' சுந்தரம் தயங்கினான்.

''வேண்டாம்; மழை பலமாக வரப்போகிறது. இங்கேயே படுத்துக் கொள்ளுங்கள்'' என்றாள் அவள்.

சுந்தரம் படுத்துக் கொண்டான்.

சகுந்தலா அந்தப் பெஞ்சுக்கு அண்மையிலேயே இன்னொரு விரிப்பை எடுத்து உதறித் தரையில் போட்டுக் கொண்டு, நகைப் பெட்டியைத் தலைக்கு அணையாக வைத்துக் கொண்டு படுத்தாள். படுத்தவள் உடனே எழுந்துபோய் அறைக் கதவைச் சாத்தித் தாளிட்டு விட்டு வந்தாள். அவ்வாறுசெய்தது அவளுக்கே ஏதோபோல் இருந்தது. ''உனக்கும் பயமாக இருக்கிறது, நகைகளை வைத்துக்கொண்டு கதவைத் திறந்து வைக்க'' என்று தன் செய்கைக்குச் சமாதானம் கூறுவதுபோல் உரக்கச் சொல்லிக் கொண்டாள் அவள்.

வானத்தில் வெகு நேரமாக உறுமிக் கொண்டிருந்த பெரிய இடி ஒன்று பக்கத்தில் நெருங்கி வந்து வெகு பயங்கரமாக முழங்கியது. அடுத்த கணம் அது இன்னும் பயங்கரமாக அண்டமே கிடுகிடுக்கும்படியாக இடித்து அதிர்ந்தது.

''இந்த இடி எங்கேயோ சமீபத்தில்தான் விழுந்திருக்க வேண்டும்'' என்றான் சுந்தரம்.

''எனக்குப் பயமாக இருக்கிறது, சுந்தரம்!'' என்று பெஞ்சுக்கு அருகில் நகர்ந்து வந்து படுத்துக் கொண்டாள் சகுந்தலா.

"விடியற்காலம் மூன்று மணிக்கு எனக்கு ரயில், அதில் நான் பெருந்துறை போக வேண்டும்."

"இந்த மழையில் தாங்கள் என்னைத் தனியாக விட்டுப் போகக் கூடாது. நாளை இரவு பெருந்துறை போகலாம். காலையில் என்னோடு ஆற்காட்டுக்கு வாருங்கள்" என்றாள் சகுந்தலா.

"என் உயிரெல்லாம் பெருந்துறையில் இருக்கிறது. நாளைக்கே நான் காமுவைப் பார்த்தாக வேண்டும்" என்றான் சுந்தரம்.

"முதலில் இப்போது தூங்குங்கள். பொழுது விடியட்டும்" என்றாள் அவள்.

சுந்தருக்கு தூக்கம் வரவில்லை. திடீரென்று எங்கிருந்தோ 'கம்' மென்று வீசிய மல்லிகை மணம் . அவனைக் கிறங்கச் செய்தது.

"இந்த மணம் எங்கிருந்து வருகிறது?" என்று புரியாமல் கேட்டான் அவன்.

"உங்கள் தலையணைக்கு அடியிலிருந்து—" என்றாள் சகுந்தலா.

"தலையணைக்கு அடியிலிருந்தா...?"

"ஆம்; நீங்கள் சாப்பாடு கொண்டுவரப் போயிருந்த போது மீண்டும் அந்தப் பூக்காரக் கிழவி வந்தாள். நான் தான் ஒரு மல்லிகைச் சரத்தை வாங்கி உங்கள் தலையணைக்கு அடியில் வைத்தேன். தங்களுக்கு மல்லிகைப்பூ வாசனை என்றால் ரொம்பப் பிடிக்குமே!"

சுந்தர் எழுந்து தலையணைக்குக் கீழிருந்த மல்லிகைச் சரத்தை எடுத்து அப்பால் வீசி எறிந்தான்.

"அதை ஏன் எறிந்து விட்டீர்கள்? உங்களுக்கு பிடிக்க வில்லையா?"

"கசங்கிய மலர்தானே? இனி எதற்கு அது?" என்றான் அவன்.

''மலர் கசங்கிய போதிலும் அதற்குள்ள மணம் போய் விட வில்லையே?''

''உனக்குத் தூக்கம் வரவில்லையா?''

''எனக்குத் தூக்கம் வராது...''

மணி பதினொன்று இருக்கும். பலமாக வந்த மழையை வேகமாக காற்று எங்கேயோ அடித்துக்கொண்டு போய் விட்டது.

சகுந்தலா மெதுவாக எழுந்து சுந்தரின் முகத்தைப் பார்த்தாள். அவன் அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தான். அப்படித்தான் அவளுக்குத் தோன்றியது. சகுந்தலா அவனுடைய தழும்பேறிய தலையையும் வலது கையையும் தொட்டுப் பார்த்தாள். அவள் கண்கள் சிந்திய வெம்பனித் துளிகள் அவன்மீது விழுந்தன. பிறகு...பேதையின் உள்ளத்தில் என்னென்னவோ எண்ணங்கள்! ஆசைகள்! அப்புறம் அவள் எப்போது தூங்கினாளோ? காலையில் கண்விழித்துப் பார்த்தபோது...சுந்தரைக் காணவில்லை, சுந்தர் எங்கே?

சுந்தரம் கண்விழித்துப் பார்த்தபோது சகுந்தலாவின் குருத்து போன்ற தந்தக் கரங்கள் தன்மீது கொடியோடியிருப் பதைக் கண்டான். அந்தக் கொடிகளை மெதுவாக அப்பால் நகர்த்திவிட்டு சந்தடி செய்யாமல் மூன்று மணி ரயிலுக்கே எழுந்து போய்விட்டான். அவள் பெருமூச்சு விட்டாள். ஆண் பெண் உறவுக்குச் சமூகம் விதித்திருந்த எல்லைக்கோட்டை மீறி விடுவதற்கு இருந்த தன்னை, இயற்கையின் சக்திக்குப்பலி யாகி விடுவதற்கு இருந்த தன்னை, சுந்தரம் காப்பாற்றி விட்டான் என்பதை அறிந்தபோது அவள் பரவசமானாள்.

''அவர் எத்தனை உத்தமமானவர்!'' அவள் பெருமூச் செறிந்தாள். உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்தும் ஒவ்வொரு விநாடியும் ஒரு வெறியல்லவா? இரவு அவள் விட்ட பெரு மூச்சுகளுக்கும் எத்தனை வித்தியாசம்!

# 14

ரயில் பெருந்துறை ஸ்டேஷனில் போய் நிற்கும்போது மணி இரண்டு. ரயிலை விட்டு இறங்கிய சுந்தரம் எதிரில் வந்தவர்களை வழி விசாரித்துக் கொண்டே நேராக ஆஸ்பத்திரியை நோக்கி நடந்தான். அதை நெருங்க நெருங்க அவன் உள்ளத்திலே ஒரு பரபரப்பு உண்டாயிற்று. காமுவைக் காணப் போகிறோம் என்பதில் அளவில்லாத மகிழ்ச்சியும் அவள் எப்படி உருக்குலைந்து தேய்ந்து போயிருக்கிறாளோ என்பதை நினைத்தபோது வருத்தமும் ஏற்பட்டன.

ஆஸ்பத்திரிக்குள் சென்று வலது பக்கமாகத் திரும்பி நடந்தான்.

'காமு எந்த வார்டில் படுத்திருக்கிறாளோ?'

சுற்று முற்றும் பார்த்துக்கொண்டே போனான்.

எதிரில் அன்ன நடை போட்டு வந்துகொண்டிருந்த நர்ஸ் ஒருத்தி சுந்தரின் கவனத்தைக் கவர்ந்தாள். கேரளநாட்டைச் சேர்ந்தவள் என்பது அவள் முகத்தில் எழுதி ஒட்டியிருந்தது. அவளுடைய பொன்மேனியையும் புன்சிரிப்புத் தவழும் முகத்தையும் கண்டபோது சுந்தரம் வியந்தான். ஆண்டவன் படைப்பில் இத்தனை அழகும் உண்டோ?

அவள் நெருங்கி வந்தபோது, "காமு என்ற பெயருடையவள் எந்த வார்டில் இருக்கிறாள் என்று சொல்ல முடியுமா?" என்று விநயமாகக் கேட்டான் சுந்தரம்.

"அங்கே விசாரியுங்கள்" என்று ஓரிடத்தைச் சுட்டிக் காட்டினாள் அவள். இனிமையும் அன்பும் தேனில் குழைந்து அவள் குரலாக ஒலித்ததோ!...

அவள் சுட்டிக் காட்டிய இடத்துக்குச் சென்றபோது சுந்தரின் மாமனாரே அங்கு நின்றுகொண்டிருந்தார் திடுமெனச்

சற்றும் எதிர்பாராத நேரத்தில் சுந்தரைக் கண்டதும் அவருக்கு ஒன்றும் தோன்றவில்லை. அழுதுவிட்டார்.

"காமு எங்கே? அவள் எப்படி இருக்கிருள்?" பலபல வென்று பொங்கி வந்த கண்ணீரை அடக்கியபடியே ஆவலுடன் விசாரித்தான் சுந்தர்.

''அதோ அந்த வார்டில் படுத்திருக்கிருள். அவளுக்கு எந் நேரமும் உன் நினைவுதான் துரும்பாக இளைத்துப் போயிருக் கிருள். இருமல் அவளை அணு அணுவாகக் கொன்று கொண்டி ருக்கிறது. அவளோ உன்னைப் பார்ப்பதற்காகவே உயிரை வைத்துக் கொண்டிருப்பதாகச் சொல்கிருள்; வா, போய்ப் பார்க்கலாம்...'' சுந்தரம் பறந்து சென்ருன்.

காமு கண்களை மூடிப் படுத்திருந்தாள்.

''காமு!''—அவள் கைகளைப்பற்றி அன்போடு எழுப்பினுன் சுந்தரம். உணர்ச்சி அவன் நெஞ்சை அடைத்துக்கொண்டது கண் திறந்து பார்த்த காமுவுக்கு ஒரு கணம் இதயமே நின்றே விட்டது.

''நீங்களா !... எப்போது வந்தீர்கள்?'' அதற்குமேல் அவளால் பேச முடியவில்லை. கண்களில் இருந்து கீற்ருகப் பெருகி ஓடியது கண்ணீர்.

''என்னிடம் சொல்லாமல் சிறைக்குப் போய்விட்டீர்களே என் உடம்பைப் பாருங்கள்!... இந்த வியாதி என்னைக் கொண்டு போய்விடும் போலிருக்கிறது.''

"அழாதே காமு! இதோ நான் வந்துவிட்டேன். இனி கவலையில்லை."

"இனி எனக்கு இந்த உயிரில் அக்கறை இல்லை. உங்களைப் பார்த்து விட்டேன் அல்லவா? அது போதும் எனக்கு. நான் உங்களை இனி எங்கும் போகவிடமாட்டேன், ஆமாம்; விடவே மாட்டேன்' அவன் கைகளை அழுத்தமாகப் பற்றிக்கொண்ட வள் "ஐயோ! இதென்ன உங்கள் கையில் தழும்பா?'' என்று பதறினுள்.

''சிறையில் என்னை அடித்துவிட்டார்கள் காமு! தலையிலே கூட நல்ல அடி. இதோ பார் மண்டையிலே தையல் போட்ட இடத்தை! நான் உயிர் தப்பியதே ஆண்டவன் செயல்!'' அதைக் கேட்டபோது, அதிர்ச்சி தாங்காமல் காமு கண்களை மூடிக்கொண்டாள்.

தன் கழுத்திலிருந்த மாங்கல்யத்தை எடுத்துக் கண்களிலே ஒற்றிக் கொண்டு, ''தேவி! நான் பாக்கியம் செய்தவள்'' என்றாள், சுந்தருக்கு சட்டென சகுந்தலாவின் நினைவு வந்து விடவே, ''உனக்குத் தெரியுமா? சகுந்தலாவின் புருஷன் இறந்துவிட்டானும். பாவம்! சர்மாவுக்கு வேறு டைபாய்டு ஜுரம். வேலூர் ஆஸ்பத்திரியில் படுத்திருக்கிறார்'' என்றான்.

''அப்படியா? சகுந்தலாவின் கதி இப்படியா ஆகவேண்டும் உங்களுக்கு யார் சொன்னது இதெல்லாம்?''

''நேற்று சகுந்தலாவை காட்பாடி ஸ்டேஷனில் பார்த்தேன். அவள் குடும்ப வரலாறு முழுவதும் ஒன்று விடாமல் சொன்னாள். உன்னைப் பார்க்க வேண்டுமென்று துடித்துக் கொண்டிருக்கிறாள்.''

''நீங்கள் பேசிக் கொண்டிருங்கள். இதோ நான் போய் காப்பி வாங்கி வந்துவிடுகிறேன்'' என்று பிளாஸ்க்கை எடுத்து கொண்டு போனார் காமுவின் தந்தை.

சுந்தரம் மனைவியின் கைகளைத் தன் கைகளுள் அடக்கிக் கொண்டு வெகு நேரம் அவள் அருகிலேயே உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தான். அவனைக் கண்ணாரக் காண வேண்டுமென்ற வேட்கை தணிந்தது அவளுக்கு.

இதற்குள் மாமனார் இட்லியும் காப்பியும் வாங்கிக் கொண்டு வந்தார். ''பசியோடு வந்திருப்பாய். இதை மரத்தடியில் கொண்டுபோய்ச் சாப்பிடலாம், வா'' என்று சுந்தரை அழைத்தார் அவர். காமுவிடம் சொல்லிக்கொண்டு புறப்பட்டான் சுந்தரம்.

மரத்தடிக்குச் சென்று இட்டிலி பார்சலை அவிழ்த்து, இட்டிலியை விண்டு வாயில் போட்டுக்கொண்டான்.

"வீட்டுக்குப் போவோம். பக்கத்திலேயேதான் வீடு' என்றார் மாமனார்.

"காமு உடம்பைப்பற்றி டாக்டர்கள் என்ன சொல்லுகிறார்கள்? சரியாகிவிடுமா?" சுந்தரம் கேட்டான்.

"அவர்கள் நம்மிடம் பேசினால்தானே? கேட்டாலும் சரியாகப் பதில் சொல்வதில்லை. அடிக்கடி வந்து பரிசோதித்து விட்டு ஒருவருக்கொருவர் இங்கிலீஷில் பேசிவிட்டுப் போகிறார்கள். இரண்டு மாதங்களுக்கு முன் காமுவின் உடம்பு இன்னும் ரொம்பக் கேவலமாக இருந்தது. பிழைப்பாளோ என்றே பயந்துவிட்டோம். இப்போது எவ்வளவோ தேவலை. அவளுக்கு கவலையே பாதி...வியாதி குணமானாலும் இன்னும் ஒரு வருஷம் ஆகும் அவள் உடம்பு தேறுவதற்கும்...ம்...நீ என்ன செய்யப் போகிறாய்? ஏதாவது வேலைக்குப் போகப் போகிறாயா?"

"இப்போதுள்ள நிலையில் நான் என்ன செய்ய முடியும்? எனக்கு ஒன்றுமே புரியவில்லை."

"நீ எவ்வளவோ புத்திசாலிதான். ஆனால் அதிர்ஷ்டம் தான் கூடிவரவில்லை உனக்கு."

"நெருப்பு தங்கத்தைச் சோதிப்பதுபோல் துன்பங்கள் என்னுடைய தைரியத்தை சோதித்துக் கொண்டிருக்கின்றன!" என்றான் சுந்தரம்.

"எதற்கும் சர்மாவைப் போய்ப் பார்! அவர் உன்மீது அக்கறை கொண்டவர். உனக்கு ஏதாவது வழிகாட்டுவார்!" என்றார் மாமனார்.

புகழ் பெற்ற வேலூர் மிஷன் ஆஸ்பத்திரி வாசலில் போய் நின்ற சுந்தரம் கடிகாரத்தைப் பார்த்தான். மணி மூன்றடித்து ஐந்து நிமிஷங்கள் ஆகியிருந்தது.

"தெய்வம், நோயாளி, குழந்தை—இம் மூவரையும் காணச் செல்லும்போது வெறுங்கையுடன் போகக் கூடாது என்பார்

களே, சர்மாவுக்கு என்ன வாங்கிப் போவது?" என்று ஒரு கணம் வாசலிலேயே நின்று யோசித்தான்.

ஆஸ்பத்திரி வாசலிலேயே பழக் கூடைக்காரர்கள் கடை போட்டிருந்தார்கள். இன்னொரு பக்கத்தில் காலி சீசாக்களும் அவுன்ஸ் பாட்டில்களும் பரப்பி வைக்கப்பட்டிருந்தன. இரண்டு டஜன் சாத்துக்குடிப்பழங்களை வாங்கிப் பைக்குள் போட்டுக் கொண்டான் சுந்தரம்.

இரண்டு நாட்களாகவே சர்மாவின் ஜுரம் நார்மலுக்கு வந்திருந்தது. தலைப்பக்கம், கட்டிலுக்குமேல், சுவரில் மாட்டப் பட்டிருந்த "டெம்பரேச்சர் ஷீட்"டில் ஜுரக்கோடு புள்ளிக்குப் புள்ளி மலைத்தொடர்போல் ஏறியும் இறங்கியும் காணப் பட்டது. அப்போதுதான் அந்தக் கோடு நேராகப் போகத் தொடங்கியிருந்தது.

சர்மா கண் திறந்து பார்த்தார்.

சுந்தர்!......

அவனைக் கண்டதும் துக்கம் பீறிட்டுக்கொண்டு வந்து விட்டது அவருக்கு.

"சுந்தரம்!" அவர் தம் கைகளைத் தூக்கி அவனை ஆவலோடு அணைத்துக்கொள்ள முயன்றார், முடியவில்லை. அநாதைபோல் ஆஸ்பத்திரியில் படுத்துக் கிடந்த சர்மாவைக் கண்டதும் சுந்தருக்கு துக்கம் நெஞ்சை வெடித்துக்கொண்டு வந்தது. அவன் கேவிக் கேவி அழுதுவிட்டான்.

"நீ அழாதே சுந்தரம்! ஜெயிலில் உன்னை அடித்துவிட்டார் களாமே? எப்படித்தான் அந்தக் கஷ்டங்களைச் சகித்துக் கொண்டாயோ?...சகுந்தலா எனக்கு எல்லாம் சொல்லிவிட் டாள். உன்னைக் காட்பாடி ஸ்டேஷனில் பார்த்தாளாமே..." அவருக்குப் பேச முடியாமல் மூச்சுத் திணறியது.

"நீங்கள் பேச வேண்டாம். உங்கள் உடம்பில் சக்தி இல்லை" நாக்கு வறண்டு போயிருக்கிறது. சாத்துக்குடி ரசம் பிழிந்து தருகிறேன், சாப்பிடுங்கள்..."

சுந்தரம் பையிலிருந்த இரண்டு பழங்களை எடுத்து ரசம் பிழிந்து அவரிடம் கொடுத்தான். அதை வாங்கிக் குடித்த போது சர்மாவின் கண்கள் பலபலவென்று நீரைப் பெருக்கின. "நான் மகாபாவி, சுந்தரம்!" உணர்ச்சி வசமாகிவிட்ட சர்மா உரக்கக் கூவிவிட்டார்.

"ஏன் இப்படிப் பேசுகிறீர்கள்?...உடம்பை அலட்டிக் கொள்ளாதீர்கள்" என்ருன் சுந்தரம்.

"என் மனசிலுள்ள துக்கம் வாய் திறந்து சொன்ஞல்தான் தீரும். உன்னை நான் அநாதையாக்கினேன். கடவுள் என்னைத் தண்டித்துவிட்டார். உன் ஜாதகம் சரியில்லை என்று உன்னை யும் சகுந்தலாவையும் பிரித்தேன். உன்னைத் தனியாகப் பட்டணத்துக்கு அனுப்பித் தவிக்கவிட்டேன். சாம்பசிவம் தீர்க்காயுசுடன் வாழ்வான் என்று நம்பி அவனுக்கு என் சகுந்தலாவைக் கொடுத்தேன். ஒருஅநாதைக்கு வாழ்வு அளிக்க வேண்டும் என்பதற்காக உன்னை அநாதையாக்கினேன். அவன் என்னையும் சகுந்தலாவையும் அநாதையாக்கிவிட்டு இந்த உலகைவிட்டே போய்விட்டான். தெய்வம் நின்று கொல் கிறது என்னை...எனக்கு இது வேண்டியதுதான்; இன்னமும் வேண்டியதுதான்..."

"மனசைத் தளர விடாதீர்கள். உங்களுக்கு ஒரு குறைவும் நேராது..."

"இதைவிட வேறு என்ன நேரவேண்டும்? என் குடும்பம் நிர்க்கதியாக நிற்கிறதே, அது போதாதா? என் சகுந்தலா வாழ்வு இழந்து கண்ணீர்விட்டுக் கலங்குகிருளே, அது போதாதா?" சர்மா கதறி அழுதார்.

"காமுவுக்கு இப்போது எப்படி இருக்கிறது? நீ போய்ப் பார்த்தாயா?" நீங்கள் இருவருமே சுகத்தைக் காணுதவர்கள். அவள் வளரும் பயிர். அவளை எப்படியாவது காப்பாற்றியே தீரவேண்டும். சகுந்தலா அவள் கவலையாகவே இருக்கிருள்..."

"அவள் பிழைத்துக் கொள்வாள் என்ற நம்பிக்கை எனக்கு பூரணமாக உண்டு. எங்கள் கலியாணத்தின்போது

"தீர்க்காயுஷ்மான் பவ, தீர்க்க சுமங்கலீ பவ!" என்று தாங்கள் மனப்பூர்வமாக வாழ்த்தினீர்களே, அந்த ஆசீர்வாதம் வீண் போகாது. "அப்பாவுக்குச் சொல்லி அனுப்பக் கூடாதா? நீங்கள் ஆஸ்பத்திரியில் இருப்பதே அவருக்குத் தெரியாது. தங்களுக்கு ஜுரம் என்று கேள்விப்பட்டால் அவருக்குத் துக்கமே தாங்காது. பறந்து வந்து விடுவார் இங்கே."

"அவருக்குள்ள துன்பங்களோடு என்னுடைய கவலையும் எதற்கு என்றுதான் பேசாமல் இருந்துவிட்டேன். சாம்பசிவம் சமாசாரம்கூடச் சொல்லி அனுப்பவில்லை அவருக்கு. எனக்கும் அவரைக் கண்ணிலேயே கட்டி வைத்திருக்கிறது. நாங்கள் இருவரும் பால்ய சிநேகிதர்கள். பூசணிக்காய் காய்த்தால் அதை எடுத்துக்கொண்டு ஆற்காட்டுக்கு என்னைப் பார்க்க வந்துவிடுவார். அவ்வளவு பிரியம் என்னிடம் அவருக்கு..."

"நான் ஊருக்குப் போய் அவரை அனுப்புகிறேன்."

"உன்னிடம் சொல்ல மறந்துவிட்டேனே...நகைகள் கிடைத்து விட்டது பற்றி நான் மண்டி கணக்குப்பிள்ளை மூலமாகப் போலீசுக்குத் தகவல் கொடுத்துவிட்டேன். அதைப் பற்றி கவலை இனி உனக்கு வேண்டாம். குறவனுடைய மனைவி எங்கே இருக்கிறாள் என்று தெரியுமா உனக்கு?"

தானே பிரஸ்தாபிக்க வேண்டும் என்று துடித்துக் கொண்டிருந்த விஷயத்தைச் சர்மாவே கூறிவிட்டதும், சுந்தரம் மன நிம்மதி அடைந்தான். போலீசுக்குச் சொல்லாமல் இருக்கிறோமே என்ற திகில் இதுவரை அவன் உள்ளத்தில் உறுத்திக் கொண்டிருந்தது. இப்போது அந்தக் கவலையும் தீர்ந்துவிட்டது

"இங்கே முள்ளிப்பாளையத்தில்தான் நாடகக் கொட்டகைக்கு அருகில் இருப்பதாகக் குறவன் சொன்னான். போய்த் தேடிப் பார்க்க வேண்டும்" என்றான் சுந்தரம்.

"அப்படியா? வண்டிக்கார சாயபுவையும் அழைத்துக் கொண்டு போ. இரண்டு பேருமாகப் போய்ப் பாருங்கள்... கிடைத்தால் எனக்குத் தகவல் சொல்லி அனுப்பு—" என்றார் சர்மா,

குதிரை வண்டி முள்ளிப்பாளையத்தில்போய் நின்றது. குறவன் மனைவி குடியிருந்த இடத்தைத் தேடிக் கண்டு பிடித்த னர் இருவரும். ஆனல் அங்கே குறவன் மனைவியைக் காணேம் குடிசை மட்டும் குட்டிச்சுவராக நின்று கொண்டிருந்தது.

"இந்த வூட்லேதான் இருந்தான் அந்தக் குறவுன். அவன் பெண்சாதி இந்த வீட்டைவிட்டுப் போயி ரொம்ப நாளாச்சு" என்ருர்கள் அக்கம் பக்கத்தில் உள்ளவர்கள்.

"எங்கே போனுங்கன்னு தெரியுமா?" என்று கேட்டான் சுந்தரம்.

"யார் கண்டாங்க? எங்கே போனுளோ? திருடன் பெண்சாதிக்கு நிம்மதி ஏது? போலீசுக்குத் தொந்தரவு தாங்காமல் ஊரைவிட்டுப் போயிட்டா அவ" என்ருள் ஒரு கிழவி.

சுந்தரம் சோர்ந்த உள்ளத்துடன் குறவனுக்குக் கொடுத்த வாக்குறுதியை நினைத்துக்கொண்டான். அவன் மனம் வேதனை யட்டது.

சுந்தரம் பெருந்துறை சானடோரியத்துக்கு வந்து சேர்ந்த போது, சகுந்தலா அங்கு கவலையே உருவாகக் காமுவின் கட்டிலுக்கருகில் உட்கார்ந்திருப்பதைக் கண்டனர்.

"நீ எப்போது வந்தாய் சகுந்தலா! இங்கு வரப் போவதாக என்னிடம் சொல்லவேயில்லையே!" என்ருன் சுந்தரம், வியப்பும் மகிழ்ச்சியும் மேலிட்டவனுக.

"சொல்லாமல் போகிறவர்களிடம் சொல்லிக் கொண்டா வருவார்கள்?" என்று சுந்தருக்கு மட்டுமே புரியும்படி மறை பொருளாகக் கூறினுள் சகுந்தலா.

'யாருக்கும் சொல்லாமல் தன் கணவர் சிறைக்குப் போனது பற்றியே சகுந்தலா அவ்வாறு கூறுகிருள்' என்று காமு எண்ணிக் கொண்டாள்.

"சகுந்தலா நேற்றே இங்கு வந்துவிட்டாள். அவளைப் பார்த்தது எனக்கு எவ்வளவோ ஆறுதலாயிருக்கிறது" என்றாள் காமு.

சுந்தர் டாக்டரை பார்க்கச் சென்றான்.

மேகக் குவியல்கள் காற்றிலே கலந்து கலந்து உருமாறு வதைப் போல் சகுந்தலாவின் உள்ளத்தில் பல்வேறு உருவங் களைப் பெற்றுக் கொண்டிருந்தன. ஒன்றும் தோன்றாதவளாக உள்ளம் கலங்கிய நிலையில் உட்கார்ந்திருந்தாள் அவள்.

என் மனம் ஏன் குழம்புகிறது? இதோ சுந்தரின் கை பிடித்த காமு எத்தனை சாந்தமாக, எவ்வளவு அமைதியாக இருக்கிறாள். சுந்தரிடத்தில் அவளுக்கு இல்லாத உரிமை எனக்கு என்ன இருக்கிறது?

காமு! —

'எத்தகைய உத்தம குணம் படைத்தவள்! தன் கணவன் மீது எவ்வளவு நம்பிக்கை வைத்திருக்கிறாள்!'

"என்ன சகுந்தலா, பலமான யோசனையில் மூழ்கி விட்டாய்?"

"ஒன்றுமில்லை அக்கா!" என்றாள் சகுந்தலா. காமுவைப் பார்க்கப் பார்க்க அவள் மனம் என்னென்னவோ எண்ணத் தொடங்கியது.

"சகுந்தலா! உன்னுடைய அன்பும் ஆதரவும் இருக்கும் போது எனக்கு ஒரு கஷ்டமுமில்லை. உன்னுடைய நிலைமையை எண்ணும் போதுதான் எனக்கு வருத்தமாயிருக்கிறது..." என்றாள் காமு.

"என்னுடைய வாழ்வு போய் விட்டது, அக்கா! அது திரும்பி வரப் போவதில்லை. நீங்கள் பிழைத்து எழுந்திருக்க வேண்டும். இனி நீங்கள்தான் வாழவேண்டும். இப்போது நான் தெய்வத்தை வேண்டிக் கொள்வதெல்லாம் இதுதான்" என்றாள் சகுந்தலா,

சுந்தர் திரும்பி வந்தான்.

"தலைமை டாக்டரைப் பார்த்தேன். காமுவை ஸ்பெஷல் வார்டில் வைத்து கவனிப்பதாகச் சொல்கிறார். எப்படியும் ஒரு மாதத்தில் குணமாக்கி விடுவதாகக் கூறுகிறார்'' என்றான் சுந்தர்.

அந்த வார்த்தைகளைக் கேட்டபோது சகுந்தலா மட்டற்ற மகிழ்ச்சி அடைந்தாள்.

''எவ்வளவு பணம் செலவழிந்த போதிலும் கவலையில்லை. நான் ஐந்நூறு ரூபாய் எடுத்து வைத்திருக்கிறேன், இன்னும் தேவையான பணத்தை ஊருக்குப் போய் அனுப்புகிறேன் காமுவை இன்றே ஸ்பெஷல் வார்டில் சேர்த்துவிடச் சொல்லுங்கள்'' என்றாள் சகுந்தலா.

சகுந்தலா, காமுவின்மீது கொண்டுள்ள அன்பைக் கண்ட சுந்தரின் நெஞ்சம் நெகிழ்ந்துவிட்டது.

அன்றே சகுந்தலா வேலூருக்குப் புறப்பட்டு விட்டாள்.

"நான் போய் தாத்தாவைக் கவனித்துக் கொள்கிறேன். அவர் தனியாக ஆஸ்பத்திரியில் படுத்திருக்கிறார். நீங்கள் இங்கேயே இருந்து காமுவைப் பார்த்துக் கொள்ளுங்கள். அவ்வப்போது எனக்குக் கடிதம் போட்டுக் கொண்டிருங்கள். பணம் தேவையானால் எனக்கு எழுதுவதற்குச் சங்கோசப்பட வேண்டாம்'' என்று கூறிப் புறப்பட்டாள் சகுந்தலா.

எவ்வாறோ இரண்டு மாதங்கள் கடந்துவிட்டன. ஆஸ்பத்திரியில் படுத்திருந்த சர்மா முற்றிலும் குணம் அடைந்து ஆற்காட்டுக்குத் திரும்பி வந்துவிட்டார். அவர் பிழைத்தது புனர் ஜன்மம் என்றே கூறவேண்டும். மாங்குடியில் இருந்த கங்காதரய்யரும் குடும்பத்துடன் ஆற்காட்டுக்கே வந்து சர்மாவுடன் தங்கியிருந்தார். சர்மா அவரை ஊருக்குப் போகவிடவில்லை. மேலும் சில நாட்களுக்குத் தம்முடனேயே இருக்க வேண்டுமென சர்மா அவரைக் கட்டாயப்படுத்தி வைத்திருந்தார்; அவரால் சர்மாவின் பேச்சைத் தட்ட

முடியுமா? இருவரும் பகல் வேளைகளில் வால்மீகி இராமா யணத்தைப் படித்து விவாதம் செய்து கொண்டிருந்தார்கள்.

அன்று வெள்ளிக்கிழமை. காலை ஒன்பது மணி இருக்கும். சர்மா பூஜை புனஸ்காரங்களை முடித்துவிட்டு வாசல் வராந்தாவில் உள்ள ஈஸிசேரில் அமர்ந்தவண்ணம் விஷாரம் சாயபுவுடன் ஏதோ பேசிக் கொண்டிருந்தார். அப்போது தபால்காரர் இரண்டு கவர்களைக் கொண்டுவந்து சர்மாவிடம் கொடுத்துவிட்டுப் போனார். ஒன்றின்மீது "சகுந்தலா C/o. நடேச சர்மா" என்றும், இன்னொன்றின்மீது 'நடேச சர்மா, என்றும் விலாசம் எழுதப்பட்டிருந்தன.

கல்கத்தாவுக்கு மாற்றலாகியிருந்த அவருடைய மாப்பிள்ளை எழுதியிருந்த கடிதம் ஒன்று. சகுந்தலாவின் பெயருக்குக் காமு எழுதியிருந்த கடிதம் இன்னொன்று.

"சகுந்தலா!" என்று அழைத்த சர்மா அவள் அருகில் வந்ததும் "இந்தா, பெருந்துறையிலிருந்து உனக்குக் கடிதம் வந்திருக்கிறது. காமு எழுதியிருக்கிறாள் போலிருக்கிறது" என்று கவரை அவளிடம் கொடுத்தார். சகுந்தலா ஆவலுடன் கவரை வாங்கிப் பிரித்தாள்.

"என் அன்புள்ள சகுந்தலாவுக்கு காமு. அநேக ஆசீர்வாதம்.

உன்னுடைய அன்பினாலும் ஆதரவினாலும் நான் பிழைத்தெழுந்து விட்டேன். நீ அனுப்பியிருந்த முன்னூறு ரூபாயும் கிடைத்தது. சர்மா மாமாவுக்கு என் நமஸ்காரங்களைச் சொல்லவும். அவருக்கு உடம்பு குணமாகி விட்டது என்பதை அறிய மிக்க சந்தோஷம். நானும் 'அண்ணா' வும் என் அப்பா அம்மாவும் நாளை ரயிலுக்குப் புறப்பட்டு ஆற்காட்டுக்கு வருகிறோம்.

என் வாழ்நாளில் உன்னை என்னால் மறக்கவே முடியாது. உன் அன்பும் உதவியும் இல்லையென்றால் நான் பிழைத்திருக்கவே மாட்டேன்,

என் மாமனுர், மாமியார், குழந்தை சாரதா மூவரும் ஆற்காட்டில் இருப்பதாக எழுதியிருந்தாய். ரொம்ப சந்தோஷம். அவர்களைப் பார்க்க மிகவும் ஆவலாயிருக்கிறேன். முடியுமானுல் ராணிப்பேட்டைக்கு வண்டி அனுப்பவும். எல்லா விவரங்களையும் நேரில் விவரமாகச் சொல்லுகிறேன்.

இப்படிக்கு,
காமு.''

"தாத்தா, நாளைக்கு காமு, சுந்தர் எல்லோரும் குடும்பத்தோடு இங்கு வருகிருர்களாம். ஸ்டேஷனுக்கு வண்டி அனுப்பச் சொல்லி கடிதம் எழுதியிருக்கிருள் காமு!'' என்று மகிழ்ச்சி பொங்கக் கூறினுள் சகுந்தலா.

"அப்படியா! காமுவுக்கு நன்ருகக் குணமாகிவிட்டதாமா? ரொம்ப சந்தோஷம். இங்கே வருவதற்கு இன்னும் கொஞ்ச நாள் ஆகும் என்று முன் கடிதத்தில் எழுதியிருந்தார்களே!... கங்காதரய்யரை எங்கே காணும்?'' என்று கேட்டார் சர்மா.

"அவர் கடைத்தெருவுக்குப் போயிருக்கிருர்.''

"சரி; சுந்தரின் அம்மாவிடம் போய்ச் சொல்லு. இதோ பார்த்தாயா? இந்தக் கவர் உன் அப்பா எழுதி வைத்திருக்கிருர். இதில் உனக்கும் ஒரு கடிதம் எழுதி வைத்திருக்கிருர். ரொம்ப முக்கியமான விஷயம் இருக்கிறது இதில். படித்துப் பார். சந்தோஷப்படுவாய்'' என்று கூறி கடிதத்தைச் சகுந்தலாவிடம் கொடுத்தார் சர்மா.

அதைப் படித்த சகுந்தலாவுக்குச் சந்தோஷம் தாங்கவில்லை.

"தாத்தா, நாளைக்கு நானே ராணிப்பேட்டை ஸ்டேஷனுக்குப் போய் அவர்களை அழைத்து வரப் போகிறேன்'' என்ருள் சகுந்தலா.

"வண்டியில் அத்தனை பேருக்கும் இடம் இருக்குமா? சாமான்களெல்லாம் வருமே! என்று கூறினுர் சர்மா,

"இடமில்லையென்றால் இன்னொரு வண்டி பிடித்துக் கொள்கிறோம்" என்றாள் சகுந்தலா.

"சரி இப்போதே சாயபுவைக் கூப்பிட்டுச் சொல்லிவைத்துவிடு! அவன் போய்விடப் போகிறான்" என்று கூறிக்கொண்டே எழுந்து உள்ளே போனார் சர்மா.

# 15

மறுநாள் மணி பதினொன்று இருக்கும். சர்மாவின் வீட்டு வாசலில் வந்து நின்ற குதிரை வண்டியில் இருந்து முதலில் காமுவும் சுந்தரும் இறங்கி வந்தார்கள். பின்னொடு சகுந்தலா, காமுவின் அம்மா, காமுவின் அப்பா மூவரும் இறங்கிவந்தார்கள் இன்னொரு வண்டியிலிருந்து மூட்டை முடிச்சுகளும், பெட்டி படுக்கைகளும் இறக்கப்பட்டன.

பார்வதி அம்மாள் தயாராக வைத்திருந்த ஆரத்தியைக் காமுவுக்கும் சுந்தருக்கும் சுற்றிக் கொட்ட எல்லோரும் உள்ளே சென்றார்கள்.

"எல்லாம் நல்லபடி சேமமாக வந்து சேர்ந்தீர்கள் ரொம்ப சந்தோஷம் சகுந்தலா. இவர்களெலாம் ரயிலில் எப்போது சாப்பிட்டதோ, என்னவோ? முதலில் கமுவுக்கு ஹார்லிக்ஸ் கரைத்துக் கொடு போ" என்றார் சர்மா.

"காமு உங்களுக்கு நமஸ்காரம் செய்ய வேண்டுமாம், கொஞ்சம் இப்படி வந்து நிற்கிறீங்களா, தாத்தா!" என்றாள் சகுந்தலா.

"மாமனாருக்கு முதலில் செய்யச் சொல்...கங்காதரய்யர், இப்படி வாங்களேன் என்றார்" சர்மா.

சர்மா, மாமனார் இருவருக்கும் நமஸ்கரித்து எழுந்தாள் காமு.

"தீர்க்க சுமங்கலீ பவ!" என்று வாழ்த்திய சர்மா, "இன்று தான் நாம் எல்லோரும் ஒன்ருகச் சேர்ந்திருக்கிறோம். என் மனம் இப்போதுதான் நிம்மதியாக இருக்கிறது. இன்னும் ஒரு வாரம் எல்லோரும் இங்கேயே தங்கிவிட்டுப் போகலாம். அடுத்த சனிக்கிழமை வேங்கடரமண சுவாமிக்குப் பூஜை செய்து பிரசாதம் பெற்றுக் கொண்ட பிறகு ஊருக்குப் போக லாம். அப்போதுதான் எனக்குத் திருப்தி ஏற்படும்" என்ருர் சர்மா.

"சுவாமி காரியத்துக்கு என்ன தடங்கல் சொல்லப் போகிறோம். தங்கள் விருப்பப்படியே செய்து விடுவோம்" என்ருர்கள் காமுவின் தந்தையும் கங்காதரய்யரும்.

அந்த ஒரு வாரம் காமுவும் சகுந்தலாவும் ஒருவரை விட்டு ஒருவர் பிரியவில்லை. "அக்கா உங்களைப் போன்ற உயர்ந்த குணம் படைத்த பெண்களை நான் பார்த்ததே இல்லை. உங்கள் பொறுமையும், கபடமற்ற குணமும், அன்புப் பேச்சும், சிரித்த முகமும் யாருக்கு உண்டு? உங்களை ஆஸ்பத்திரியில் கண்ட பிறகு என் மனமே மாறிவிட்டது. அக்கா! நீங்கள் நல்லபடி பிழைத்தெழ வேண்டும் என்பதற்காக எத்தனையோ தெய்வங்களைத் தினமும் வேண்டிக் கொண்டிருந்தேன். என் பிரார்த்தனை வீண்போக வில்லை. சுந்தரமும் நீங்களும் சந்தோஷமாக வாழ வேண்டும். இப்போது அதுதான் என்னுடைய ஆசை. இனி இந்த உலகத்தில் எனக்கென்று தனிப்பட்ட இன்பம் எதுவும் கிடையாது. நீங்கள் அடையும் மகிழ்ச்சிதான் என்னுடைய மகிழ்ச்சி. இனி நான் நீங்களாகவே வாழப் போகிறேன் அக்கா! இன்று முதல் நான் சகுந்தலா இல்லை. காமு! ஆமாம், காமுவாக வாழப்போகும் சகுந்தலா!"

இந்த வார்த்தைகளைக் கேட்டபோது காமுவின் கண்களில் நீர்த் திரையிட்டது.

"நீ சொல்வது எனக்கு ஒன்றுமே புரியவில்லை, சகுந்தலா!"

"உங்களுக்குப் புரியாது அக்கா, புரியாது. நீங்கள் ஒரு குழந்தை!" என்ருள் சகுந்தலா.

அன்று சனிக்கிழமை. வேங்கடரமண பூஜை முடிந்ததும் சர்மா ஒவ்வொருவராகப் பூஜை அறைக்கு அழைத்துப் பிரசாதம் வழங்கினுர். பிறகு எல்லோரும் சாப்பிட்டு முடிந்ததும், சர்மா கங்காதரய்யரையும், காமுவின் தகப்பனுரையும் அழைத்துக்கொண்டு வாசல் வராந்தாவில் போய் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தார். பேச்சுக்கு இடையில் சகுந்தலாவைக் கூப்பிட்டு, "சுந்தரை வரச் சொல்லு!" என்ருர் சர்மா.

சுந்தரம் அவர் எதிரில் போய் நின்ருன்.

"வா, சுந்தரம்! நான்தான் கூப்பிட்டேன். மேற்கொண்டு என்ன செய்யப் போவதாக உத்தேசம் உனக்கு? பட்டணத்தில் ஏதாவது வேலைக்குப் போகப் போகிருயா?" என்று கேட்டார் சர்மா.

"எனக்கு ஒன்றும் தோன்றவில்லை மாமா! பட்டணத்தில் எந்த வேலையும் சரிப்பட்டு வரவில்லை எனக்கு. போர்டு எழுதிப் பார்த்தேன். பத்திரிகைகளுக்குச் சித்திரம் வரைந்தேன். புத்தகங்களுக்கு அட்டைப் படம் எழுதினேன். எல்லோரும் என் திறமையைப் பாராட்டுகிருர்கள். பணம் தான் கொடுப்பதில்லை. தமிழ்நாட்டில் இன்னும் சித்திரக் கலைஞர்களுக்குரிய மதிப்பு ஏற்படவில்லை. கலையை மதிப்பதாகச் சொல்கிறவர்கள் கலைஞனை மதிப்பதில்லை. மிதிக்கிருர்கள்" என்ருன் சுந்தரம்.

"அப்படியானுல் வேறு என்னதான் செய்யப் போகிருய்?" என்று கேட்டார் சர்மா.

"நீங்கள் என்ன சொல்லுகிறீர்களோ, அதன்படி செய்கிறேன், என்னைத் தாங்கள்தான் கைதூக்கி விட வேண்டும்."

"சகுந்தலா! அந்தக் கவரை இங்கே கொண்டுவாம்மா" என்ருர் சர்மா. சகுந்தலா கவரைக் கொண்டு வந்து கொடுத்தாள்.

"ஓகோ, தயாராக எடுத்து வைத்திருக்கிறாயா நீ!" அதை அவளிடம் இருந்து வாங்கி சுந்தரிடம் கொடுத்த சர்மா "உரக்கப் படியேன்" என்றார் சுந்தரைப் பார்த்து. அவன் படித்தான்.

"சகுந்தலாவுக்கு, உன் கடிதம் கிடைத்தது.

இங்கு நான் சவுக்கியம். உன் தாத்தா உடம்பை ஜாக்கிரதையாகப் பார்த்துக் கொள்ளவும். சுந்தரின் மனைவிக்கு இப்போது எப்படி இருக்கிறது? சுந்தரம் இன்னும் பெருந்துறையில்தான் இருக்கிறானா?

உன் இஷ்டப்படியே இங்கே கல்கத்தாவில் சுந்தருக்குஉத்தியோகம் பார்த்து வைத்திருக்கிறேன். கல்கத்தா காலண்டர் மானுபாக்சரிங் கம்பெனியில் ஆர்ட்டிஸ்ட் வேலை. மாதச் சம்பளம் ஆரம்பத்தில் முன்னூறு ரூபாய் கொடுப்பார்கள். நீ அனுப்பியிருந்த சில படங்களை அவர்களிடம் காண்பித்தேன். அந்தப் படத்தைக் கண்டு விட்டு அவர்கள் சுந்தரின் சித்திரத் திறமையை வெகுவாகப் புகழ்ந்தார்கள். உடனே வந்து வேலையை ஒப்புக் கொள்ளும்படி சொல்லியிருக்கிறார்கள். இந்தத் தகவலைச் சுந்தருக்குத் தெரியப்படுத்தவும். அவன் மனைவிக்கு உடம்பு பூரணமாக குணமாகி விட்டிருக்கும் என நம்புகிறேன். அவர்கள் இரண்டு பேருமே இங்கு வந்து விடலாம், அவர்களுக்கு வசதியான வீடும் பார்த்து வைத்திருக்கிறேன்.

இப்படிக்கு,<br>ராமநாதன்."

"வேலையை ஒப்புக்கொள்ளும்படி அந்தக் கம்பெனியிலிருந்து நேற்று ஆர்டர்கூட வந்துவிட்டது. என்ன சொல்லுகிறாய், சுந்தரம்! கல்கத்தா போகிறாயா?" என்றார் சர்மா.

சுந்தரத்தின் உள்ளம் மகிழ்ச்சியினால் திக்கு முக்காடியது.

"போகிறேன்" என்றான் உள்ளத்தில் பொங்கிய மகிழ்ச்சியை அடக்கியவனாய்.

"உன் மனைவியையும் குழந்தையையும் கூடவே கையோடு அழைத்துக் கொண்டு நாளைக்கே புறப்படு. மாப்பிள்ளைக்கு நான் தந்தி கொடுத்து விடுகிறேன்."

"சரி" என்று கூறிய சுந்தரம் உள்ளே போனான். சகுந்தலா அங்கே ஓரமாக புன்சிரிப்போடு நின்று கொண்டிருந்தாள்.

"உன் வேலைதானா இது?" என்று கேட்டான் சுந்தரம் அவளைப் பார்த்து. "இல்லை, இது உங்களுடைய வேலை!" என்றாள் அவள் சிரித்துக் கொண்டே.

"நீ ரொம்பப் பொல்லாதவள் சகுந்தலா! என்னிடம் எதையுமே சொல்லாமல் மனதிற்குள் மூடி வைத்திருந்தாயே..." என்றான் சுந்தரம்.

சகுந்தலா தலைகுனிந்தபடியே, "என்னை மன்னித்தேன் என்று சொல்லுங்கள். இப்போது என் மனதில் ஒன்றுமே கிடையாது. நான் களங்கமற்றவள். என் மனதில் இப்போது எந்த ஆசையும் இல்லை" என்றாள்.

காட்பாடியில் அன்றிரவு நடந்த நிகழ்ச்சிகள் சுந்தரத்தின் உள்ளத் திரையில் நிழலாடின. சகுந்தலா எதைக் குறித்து இப்போது இப்படிப் பேசுகிறாள் என்பதை அவன் புரிந்து கொண்டான்.

"சகுந்தலா! உங்களையெல்லாம் பிரிந்து நானும் அவ்வளவு தொலைவில் போய் வாழ வேண்டியிருக்கிறதே என்பதை நினைக்கும்போதுதான் வருத்தமாயிருக்கிறது..."

"காமுவின் உடம்பை ஜாக்கிரதையாக பார்த்துக் கொள்ளுங்கள். அடிக்கடி எனக்குக் கடிதம் போட்டுக் கொண்டிருங்கள். உங்களை மறுபடியும் எப்போது பார்க்கப் போகிறேனோ..." பெருகி வந்த கண்ணீரைத் துடைத்துக் கொண்டாள் சகுந்தலா.

மறுநாள் சகுந்தலா விடியற்காலம் மூன்று மணிக்கே எழுந்து காமுவையும் எழுப்பி விட்டாள். காமுவுக்குத் தலை வாரிப் பின்னி, இரவே தொடுத்து வைத்திருந்த மல்லிகைச்

சரத்தை அவள் தலையில் சூடினாள். 'சுந்தருக்கு மல்லிகை மணம் என்றால் ரொம்பப் பிடிக்கும்' என்று தனக்குள்ளாகவே எண்ணிக் கொண்டாள் அப் பேதை.

"அக்கா இந்தாருங்கள்! இதையெல்லாம் அணிந்து கொள்ளுங்கள்" என்று கூறிய சகுந்தலா, தன்னுடைய நகைகளையெல்லாம் ஒவ்வொன்றாக எடுத்துத் தன் கைகளாலேயே காமுவுக்கு அணிவித்து அலங்காரம் செய்தாள்.

"இதெல்லாம் ஏது சகுந்தலா?"

"எல்லாம் தங்கள் கணவர் கொண்டு வந்து என்னிடம் கொடுத்ததுதான்" என்றாள் சகுந்தலா.

"என் கணவரா? அவருக்கு ஏது இந்த நகைகளெல்லாம்?" வியப்புடன் கேட்டாள் காமு.

"திருட்டுப் போன என்னுடைய நகைகளைச் சுந்தரம்தான் கொண்டு வந்து கொடுத்தார்" என்று முழு விவரங்களையும் காமுவிடம் சொன்னாள் சகுந்தலா.

"இதுவரை என்னிடம் சொல்லவேயில்லையே!"

"சமயம் வரும்போது சொல்லலாம் என்றுதான் காத்திருந்தேன். இந்த நகைகளெல்லாம் இனி உங்களுக்குத்தான் சொந்தம். நாங்களாகவே வாழப் போகும் எனக்கு அதில் பெருமை உண்டு" என்றாள் சகுந்தலா.

மறுநாள் விடியற் காலையிலேயே எழுந்துவிட்ட சுந்தரம் கல்கத்தாவுக்குப் புறப்படுவதற்கான ஏற்பாடுகளில் முனைந்திருந்தான். இரண்டு குதிரை வண்டிகளில் எல்லோரும் ஸ்டேஷனுக்குப் புறப்பட்டார்கள். புறப்படுமுன் சர்மா சுந்தரை அழைத்து ஒரு கவரைக் கொடுத்து "இந்தா இதை செலவுக்கு வைத்துக்கொள்" என்றார். அதில் ஆயிரம் ரூபாய் இருந்தது.

ரயில் புறப்பட்டது. ரயிலில் உட்கார்ந்திருந்த சுந்தரையே கண்கொட்டாமல் பார்த்துக்கொண்டு நின்ற சகுந்தலா, தன் புடவைத் தலைப்பால் கண்களைத் துடைத்துக் கொண்டாள்.

சென்னையை அடைந்ததும் கல்கத்தா மெயிலில் வசதியாக இடம் கிடைத்துவிட்டது சுந்தருக்கு.

ரயில் ஓடிக்கொண்டிருந்தது.

வழிப்போக்கன் சுந்தரத்தின் பயணம் இன்பமாகவே ஓடத் தொடங்கியது.

---